

கல்கி
KALKI
21.1.1968
40 காசு

உங்கள் கேசத்தை ஆரோக்கியமுடன் பளபளப்பாக வைத்திருப்பது

பிரில்க்ரீம்

எண்ணெய்ப் பற்றோ கலைசலோ இராது





பிரில்க்ரீம் மட்டுமே

* அதிக எண்ணெய்ப்பற்று இல்லாமலும், தாறுமாறாக உரோமம் கலையாமலும் சேர்த்தியாக தலையை வார உங்களுக்கு உதவுகிறது.
* மிகவும் சிக்கனமானது-ஒருமுறை தடவி வாரிக் கொண்டால் நாள் முழுவதும் உங்கள் தலை கலையாது அழகாக தோற்றமளிக்கும்.
* உரோமம் உதிர்ந்து வழுக்கை விழாமல் தடுக்கக் கூடிய, ஆரோக்யமான உரோம வளர்ச்சியைத் தூண்டக்கூடிய, சேர்த்தியான கலவை வாய்ந்தது.

இனிமேல் பிரில்க்ரீமையே உபயோகியுங்கள்!

கருமையோடு பளபளக்கும் ஆரோக்கியமான கேசத்திற்கே!






பட விளக்கம் 6ம் பக்கம் பார்க்க


கல்கி பொருளடக்கம்

பிலவங்க தை 7 ❋ ஜனவரி 21

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.




மொழிச் சட்டம்
1968
வடக்கு
கிழக்கு
தெற்கு
நாணயத்தின் மறுபக்கம்


அமோக விளைச்சல்
முழுகுபவர் வைக்கோல்
துரும்பைப் பற்றிக்
கொள்கிறார்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 □ இதழ் 25

ராஷ்டிரபதியின் எச்சரிக்கை

இந்திய ராஷ்டிரபதியாகிய டாக்டர் ஜாகிர் ஹுஸைன் அவர்கள் நம்மிடையேயுள்ள மிகச் சிறந்த அறிஞர்களில் ஒருவர். சத்தியம் கலக்காமல் காதுக்கு மட்டும் ரம்மியமாக இருக்கும் வார்த்தைகளை அவர் பேசமாட்டார். காந்திஜி எப்படி நிறைந்த, ஆன்மிகமான முறையில் சத்தியவானாக இருந்தாரோ, அம்முறையில் சத்தியத்தைக் கடைப்பிடித்தொழுகுபவர் டாக்டர் ஜாகிர் ஹுஸைன் அவர்கள். எனவே, சமீபத்தில் தமிழகத்துக்கு விஜயம் செய்த ராஷ்டிரபதி அவர்கள் தமிழ்நாட்டுக்கு மகத்தான எதிர்காலம் இருக்கிறது என்று சொல்லியிருப்பது சம்பிரதாயமான முகஸ்துதி அல்ல. சம்பிரதாயத்துக்காக முகஸ்துதி செய்வது டாக்டர் ஜாகிர் ஹுஸைன் அவர்களின் இயல்பிலேயே இல்லை. தாம் இதயபூர்வமாக உணர்ந்த ஒன்றையே அவர் கூறியிருக்கிறார்.

பிரதேசவாரியில் பேசப் புகுந்தால், ராஷ்டிரபதி அவர்கள் வட இந்தியாவைச் சேர்ந்தவர். எனவே, தமிழ்நாட்டுக்கு மகத்தான எதிர்காலம் உள்ளது என்று கூறியபோது அவர் தம்மை அறியாமலே வடநாட்டோடு தென்னாட்டை ஒப்பிட்டு அவ்வாறு கூறியிருக்கக் கூடும். ஆங்கிலம் வேண்டாம் என்று கிளர்ச்சி செய்யும் ஹிந்தி ராஜ்யங்களான உத்தரப் பிரதேசம், பிஹார் முதலியவற்றில் நடக்கும் சம்பவங்களைப் பற்றி அவர் வருந்தியே அவ்வாறு கூறியிருக்கக் கூடும். அந்த ராஜ்யங்களில் ஞானமும் சிந்தனா சக்தியுமற்றவர்கள் அங்குள்ள கல்வியறிவுள்ள தலைவர்களையும் தங்கள் வழிக்குக் கொண்டுவரப் பயமுறுத்துகின்றனர். அல்லது குறைந்தபட்சம் இத்தலைவர்கள் வாயை மூடிக் கொண்டாவது இருக்கச் செய்து வருகின்றனர். இவ்வாறு செய்துவிட்டு, ஆங்கிலத்தை அகற்றுகிற தவறான திட்டத்தில் ராஜ்ய மக்களையும் அரசாங்கங்களையும் ஈடுபடுத்தி வருகிறார்கள். 'ஆங்கிலத்தை அகற்றுவது' என்ற சொற்றொடரை ஸ்தூலமாகவே செயலாக்கி வருகிறார்கள் — தாரும் நெருப்பும் துணை கொண்டு. ஆங்கிலத்துக்கும் ஹிந்திக்குமிடையே போராட்டம் நடப்பதாக ஒரு மகத்தான மாய எண்ணத்துக்கு ஆட்பட்டு, இந்தப் போராட்டத்தில் தேசப் பற்று நிறைந்த ராணுவ வீரர்கள் போல் ஹிந்தியை எதிர்க்க வேண்டும் என்று அந்த ராஜ்ய மக்கள் எண்ணுகின்றனர். இந்த மாயையால் அந்தப் பிரதேசங்களின் எதிர்காலமே நாசமாகிவிடும். அறிவும் தைரியமும் படைத்த அனைவரும் மிருக பலத்துக்குப் பயப்படாமல் மனிதர்களாகச் செயலாற்ற வேண்டும். ஆங்கிலத்தை எதிர்க்கும் முட்டாள்தனமான சண்டைக்கு ஆதரவு தராமல் இருக்க வேண்டும். விரைவில் தேசத்துக்கு விஷய ஞானம் தருகிற பாதைக்குத் தடை ஏற்படாமல் அதை நன்கு திறந்து வைக்க வேண்டும்.

காலம் எவருக்காகவும் காத்து நிற்பதில்லை. இந்தியாவின் மற்றப் பகுதிகளுக்குச் சமதையாக நவீன அறிவியல் துறைகளில் தேர்ச்சி பெறாமலே, தங்களது மொழியையும் இலக்கியத்தையும் வளப்படுத்திக் கொள்ளத் திட்டம் போடுபவர்களுக்காகக் காலம் காத்திராது. ஆங்கிலத்தை எதிர்த்துப் போராடித் தங்கள் மொழியை முன்னேற்ற நினைப்பவர்கள் பின்தங்கி நிற்கும்போதே, ராஷ்டிரபதி கூறியது போல் தமிழகம் விரைவில் முன்னேற்றம் காணும்.

முன்னேற்றத்துக்குரிய அம்சங்கள் யாவை என்பதை டாக்டர் ஜாகிர் ஹுஸைன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். நல்லறிவு, சமாதானத்திலும் ஒழுங்கிலும் பற்றுதல், கடும் உழைப்பு இவற்றை அவர் குறிப்பிட்டார். இவற்றோடு திறமையான நிர்வாகமும், ஸ்திரமான அரசாங்கங்களும் சேர்ந்து தமிழகத்தை இன்றைய நிலைக்குக் கொண்டு வந்திருப்பதாகவும், அதன் எதிர்காலத்தில் தாம் நம்பிக்கை கொள்ளும்

படி செய்திருப்பதாகவும் கூறினர். இதன் மூலம் அவர் தமிழகம் முதலிய முன்னேற்ற மடைந்த ராஜ்யங்களைப் பற்றிச் சொன்னது மட்டுமின்றி, உத்தரப் பிரதேசம், பிஹார் முதலியவை பற்றித் தாம் கொண்டுள்ள வருத்தத்தையும் கூறாமல் கூறிவிட்டார். ஆங்கிலத் துவேஷப் பிரதேசங்களில் நடப்பன வற்றைக் கண்டு டாக்டர் ஜாகிர் ஹுஸைன், மட்டுமின்றி, கட்டுக்கோப்புள்ள ஒரு மகத்தான இந்தியா உதயமாகும் என்று கனவு கண்ட ஒவ்வோர் இந்தியப் பிரஜையும் வருத்தம்தான் படமுடியும்.

ஆங்கிலத் துவேஷக்காரர்கள் டாக்டர் ராம மனோஹர லோஹியாவின் வழியைத் தாங்கள் பின்பற்றுவதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். லோஹியா அவர்கள் தமது கருத்துக்களை மாற்றிக் கொண்டு வேறு விதத் தலைவராக மலரவிருந்த தருணத்தில் மரணம் என்ற கொடுமை அவரைப் பறித்துச் சென்றுவிட்டது. கடும் உழைப்பையும் நேர்மையையும் வலியுறுத்தினவர் அவர். ஒருவர் தமது தாய்மொழியிலேயே நன்கு பேச முடிகிற போதும், அப்படிப் பேசினலே மற்றவர் புரிந்துகொள்ள முடிகிற போதும் கூட ஆங்கிலத்தில் பேசுகிற போலிப் பெரியதனத்தைத்தான் அவர் வெறுத்தார். அவரே 'மான்கைண்ட்' என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து வந்ததைக் குறிப்பிட வேண்டும். என்னைச் சந்தித்துத் தமது அன்பினல் உணர்ச்சிப் பரவசத்தில் ஆழ்த்திய போது அவர் என்னிடம் ஆங்கிலத்தில்தான் உரையாடினர். மேலும் அவர் வளருவதற்குக் காலம் இருந்திருக்குமாயின் அவர் அறிவுப் பாதையை — தேசம் முழுவதும் தொடர்புகொள்ளும் பாதையை — அடைக்க முற்பட்டிருக்க மாட்டார். இன்று லோஹியா உயிரோடிருப்பின், அந்நிய நாட்டிலிருந்து வந்த நவீன வைத்திய முறைகளையும், ரயில் போக்குவரத்தையும், தந்திக் கம்பங்களையும், மோட்டாரையும், பஸ்ஸையும் கைவிட்டுவிட வேண்டும் என்று சொல்ல மாட்டார். இவற்றின் உபயோகத்துக்காக இவற்றுக்குரிய மதிப்பைத் தருவார். அதே போல் ஆங்கிலத்தினல் குறிப்பாக இந்தியாவுக்கு ஏற்படும் பயனையும் அவர் உணர்ந்திருப்பார். எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தியா இரண்டு நிருவாகக் கூறுகளாகப் பிரிந்து போவதை லோஹியா அவர்கள் ஆதரிக்கவே மாட்டார் என்பது நிச்சயம். வடஇந்தியாவும் தென்னிந்தியாவும் தனித்தனியே இறுக மூடிய பிரிவுகளாவதின் தவிர்க்க முடியாத விளைவுகளைக் காண அவர் தவறியிருக்க மாட்டார்.

பெரிய பிரமை ஒன்று இந்தியாவின் சில பகுதிகளின் மீது வந்து படிந்து விட்டது. ஆண்டவன் அருளால் அது விலகி, தேசம் ஐக்கியமாக விளங்குமாக. இந்தியா முன்னேறுவதற்குத் தகுதி பெற்ற நாடு. இந்த முன்னேற்றத்துக்காக நாடு காத்துக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் இந்தியா முன்னேற முடியும் என்ற நம்பிக்கை ஆண்டவன் அருளால் ஏற்படுமாக!

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)

சிலை பெற வேண்டிய சான்றோர் நால்வர்

உலகத் தமிழ் மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்குக் கல்கி காரியாலயம் அளித்த விருந்துபசாரத்தில் வரவேற்புரை நிகழ்த்திய கல்கி அதிபர் திரு சதாசிவம் அவர்கள் அன்று தமிழ்த் தாய்க்குத் தமது காரியாலய வாயிலாக ஓர் அரிய கைங்கரியம் செய்ய முன்வந்திருப்பதைத் தெரிவித்தார்.

சென்னை மாநகரில் தமிழ்ப் பேரறிஞர்கள் பலருக்குச் சிலைகள் எழுப்பப்பட்டுள்ளபோதிலும், தமிழ் வசன இலக்கிய மறுமலர்ச்சிக்கு அஸ்திவாரம் அமைத்துத் தந்த பேராசிரியர் திரு ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) அவர்களுக்கும், தமிழிலக்கிய ரசனையில் தன்னிகரற்று விளங்கிய ரசிகமணி திரு டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுக்கும் சிலைகள் எழுப்பப் பெறவில்லை. இதனைப் பெருங் குறையாக உணர்ந்து பலர் கடிதம் எழுதி வருகின்றனர். எனினும் இப்பெரியார்கள் இருவருடனும் நீண்ட நெடுங்காலம் நெருங்கிப் பழகி, அவர்களோடு ஒன்றிவிட்ட திரு சதாசிவம் அவர்களுக்குத் தாமாகவே இவ் விஷயமாக உலகத் தமிழ் மாநாட்டு நிர்வாகிகளிடமோ தமிழக மந்திரிகளிடமோ பிரஸ்தாபிக்கத் தயக்கமாக இருந்து வந்தது. இதை அன்று தமது வரவேற்புரையில் குறிப்பிட்ட கல்கி அதிபர், ''ஆயினும் இவ்விரு தமிழ்ப் பேரறிஞர்களுக்கும் உரிய மதிப்பினை அவர்கள் பெறுவதற்கு என்னுடைய சங்கோசம் குறுக்கே நிற்கக் கூடாது என்பதால் இவ்விஷயத்தை இப்போது குறிப்பிடுகிறேன். உலகத் தமிழ் மாநாட்டினரோ, தமிழக மந்திரிகளோ இவ்விருவருக்கும் சிலை எழுப்ப இணங்குவராயின், ஒவ்வொரு சிலைக்கும் கல்கி காரியாலயத்தின் வாயிலாக எனது காணிக்கையாகப் பத்தாயிரம் ரூபாய் செலுத்துகிறேன்'' என்று கூறியபோது கூடியிருந்த அறிஞர் பெருமக்கள் கரக்கம்பம் செய்து அதனை வரவேற்றனர். விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட திரு அண்ணாதுரை, திரு நெடுஞ்செழியன், திரு கருணாநிதி ஆகியோரும் அப்போதே இந்த யோசனைக்கு இணக்கம் தெரிவித்தனர். விரைவிலேயே இவ்விரு சான்றோரின் சிலைகள் சென்னை மாநகரினை அணி செய்யும் என்று நம்புகிறோம்.

கொழும்பிலுள்ள இந்திய இலங்கை நட்புறவுச் சங்கத்தின் இணைக் காரியதரிசியாகிய திரு சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் நமக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் இலங்கை தந்த கலைச் செல்வர்களாகிய டாக்டர் கே. ஆனந்த குமாரசுவாமி அவர்களுக்கும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களுக்கும் சென்னையில் சிலைகள் எழுப்ப

வேண்டியதன் அவசியத்தையும் பொருத்தத்தையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

தமிழ்ப் பண்பாடு உள்படக் கீழைத் தேச நாகரிகங்களை நுணுகி ஆராய்ந்து, அவற்றின் பெருமைகளை சர்வ தேசங்களும் அறியுமாறு எடுத்தியம்பியவர் இலங்கைத் தமிழர் திரு ஆனந்த குமாரசுவாமி. ஆறுமுகநாவலர் அவர்களோ தமது சமயச் சேவையோடு தமிழ் மறுமலர்ச்சிக்கும் வித்திட்ட பெரியார். அவரது காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெரியார்களில் அவருக்குத் தனி இடம் உண்டு.

இவ்விருவருக்கும் சிலை எழுப்புவதால் இந்திய இலங்கை நல்லுறவுக்கும் சின்னம் எழுப்பியது போலாகும்.

மூவர் முடிவு

ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் முதுபெரும் வித்துவானாக விளங்கி வந்த பண்டித ஓம்காரநாத் டாகூர் அவர்களின் மறைவு சங்கீதத் துறைக்குப் பெரும் நஷ்டமாகும். ஓம்காரநாத் அவர்கள் தமிழர்களுக்குப் புதியவர் அல்லர். சென்னையில் மியூஸிக் அகாடமியிலும் மற்றும் பல சபைகளிலும் நிறையப் பாடித் தமிழ் மக்களைக் கவர்ந்தவர் அவர். சங்கீத வித்துவான் என்பது மட்டுமின்றி, அவர் சிறந்த ஆராய்ச்சியாளருமாவார். இந்திய சங்கீதம் பற்றி உயர்ந்த நூல்கள் எழுதியிருக்கிறார். புகழ்கொண்ட நாதோபாஸகராகிய விஷ்ணு திகம்பர பலுஸ்கரின் சிஷ்யரான அவர் வித்துவானுகித் தமது குருவின் வழியோடு, தமக்கெனச் சுயமாக ஒரு பாணியைப் பின்பற்றிப் பலரை ஈர்த்தவர். அநாயாசமாக மூன்று ஸ்தாயிகளிலும் சஞ்சரிக்கும் சாரீரம் படைத்த அவர் நானுவித உணர்ச்சிகளையும் ரஸங்களையும் வெளியிடுவதில் தனித் தேர்ச்சி பெற்றிருந்தார். மக்களின் மதிப்பில் ஓங்கியிருந்ததோடு அரசாங்க கௌரவமாகிய 'பத்மஸ்ரீ' விருதையும் பெற்றவர்.

பத்மஸ்ரீ விருதுபெற்ற இன்னொரு கலைஞராகிய ஸ்ரீ ஈ. கிருஷ்ணய்யர் அவர்களின் மறைவு தமிழ்க் கலை விமரிசக உலகில் ஈடு செய்யவொண்ணுத ஒரு வெற்றிடத்தை உண்டாக்கிவிட்டது. வழக்கறிஞராகிய ஸ்ரீ கிருஷ்ணய்யர், ஸ்வராஜ்யக் கட்சியில் சேர்ந்து ஸ்ரீ ஸ்ரீநிவாச அய்யங்காரிடம் நற்பெயர் பெறும் வகையில் அரசியல் தொண்டு செய்தார். கலைத் துறையின் அழைப்பு அவருக்குக் கிடைத்தது. சங்கீத — நாட்டியக் கலைகளில் சிறந்த ஞானம் பெற்ருர். ஆதிநாட்களில் தாமே நாட்டியமும் ஆடியிருக்கிருர். நாட்டியம் சமூக ஒழுக்கத்துக்குத் தீமை விளைவிப்பதால் 'ஆன்டி நாட்ச்' இயக்கம் என்று ஒன்று நடத்தப்பட்ட போது அதை வன்மையாக எதிர்த்து, தெய்வக் கலையாகிய பரத நாட்டியத்துக்கு உரிய இடம் பெற்றுத் தந்தவர்களில் அவர் முக்கியமான ஒருவர். கல்கி உள்படப் பல பத்திரிகைகளில் கலை விமரிசனம் செய்து புகழ் பெற்றவர். சென்னை சங்கீத நாடக சங்கம் முதலிய பல கலை நிறுவனங்களில் ஜீவநாடியாகப் பணியாற்றியவர் ஸ்ரீ கிருஷ்ணய்யர்.

அவரது குடும்பத்ினருக்கு நமது அநுதாபங்கள்.

ஃ ஃ ஃ

கும்பகோணம் டாக்டர் வி. ஆர். மூர்த்தி அவர்கள் தமது இனிய பண்பினுலும், சலியா உழைப்பினுலும் ஏராளமான மக்களின் பேரன்பைப் பெற்றிருந்தார். பல காலம் கும்பகோணம் நகரசபை அங்கத்தினராக இருந்து நல்ல சேவை செய்திருக்கிருர். ஹோமியோபதி வைத்திய முறையில் அவருக்கிருந்த தளராத நம்பிக்கை காரணமாக அந்த எளிய வைத்திய முறையைப் பரப்புவதற்காக 1939ல் ஒரு பயிற்சிக் கழகம் நிறுவிப் பணியாற்றி வந்தார். அவர் மறைவினுல் வருந்தும் அவருடைய குடும்பத்தாருக்கும் ஏராளமான நண்பர்களுக்கும் நமது அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

காமகோடியின் கருணைமொழி



'பகவானிடத்தில் மாத்திரம் அன்பு வைத்துக்கொண்டு மற்றவர்களிடத்தில் துவேஷம் பாராட்டலாமா?' என்பது கேள்வி.

ஸ்வாமி யார்? அவர்தாம் எல்லாமாக இருக்கிருர் என்ற ஞானம் நமக்கு உண்டாக வேண்டும். மண்தான் மரம். வேரின் மூலமாக மண்ணும் எருவும் சென்று அது பெரிய கட்டையாகிறது. திரும்பவும் அது மட்கிப் போகும் போது மண்ணுகவே ஆகிறது. இது தெரிந்தால் மூலமான மண்ணின் மேல் பிரியம் ஏற்படும் போது மண்ணிலிருந்து உண்டாகி மண்ணிலேயே தன்மயமாகப் போகிற எல்லாவற்றினிடமும் பிரியம்தானே உண்டாகும். காரணம், இது ஒன்றுதான் அப்படி எல்லாமாக இருக்கிறது என்ற அறிவு. எல்லாமும் முடிவில் இது ஒன்ருகவே ஆகிவிடப் போகின்றன. இது ஒன்றினிடத்தில் வைக்கிற அன்பு உண்மையானுல் இதிலிருந்து உண்டாகி, இதாகவே கடைசியில் தன்மயமாகப் போகிற எவற்றின் மேலும் துவேஷம் ஏற்படக் காரணம் இல்லை. ஸ்வாமி ஒருவரிடம் பிரியம் வைத்தால் — அது உண்மையான பிரியமாகவும் இருந்தால் — அது எல்லாரிடமும் வைக்கிற பிரியமாக ஆகிறது. ஈசுவரன்தான் எல்லாரிடத்தும் இருக்கிறுன். மாயை என்ற கூட்டைப் போட்டுக் கொண்டு மாடு, மனிதன், குழந்தை என்று பலவாக இருக்கிறுன்.

ஸ்ரீ தியாகராஜர்

மைசூர் மகாராஜா ஜயசாமராஜ உடையரு

இவ்விதழ் வெளியாகும்போது திருவையாற்றில் சங்கீத சத்குரு ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் ஆராதனை நடைபெற்றுக்கொண்டிருக்கும். இது ஸ்ரீ தியாகையரவர்கள் ஜனித்து இருநூறாண்டுகள் முடிந்த வருடமாகையால் வழக்கத்தைவிட விமரிசையாக ஆறு நாட்களுக்கு ஆராதனை மகோற்சவம்நடக்கிறது. திருவையாற்றில் மட்டுமின்றிக் கர்நாடக சங்கீதம் பரவிய இடங்களிலெல்லாம் சங்கீத மகானுக்கு அஞ்சலி அளிக்கப்படும். நமது அட்டைச் சித்திரத்தின் வாயிலாக நாமும் மகானுக்கு வந்தனம் செலுத்துகிறோம்.

— ஆசிரியர்

ஸ்ரீ தியாகராஜரது வாழ்வும் அவரது சாகித்தியங்களும் எல்லா சங்கீத ரசிகர்களின் மதிப்பையும் பெற்றுள்ளன. ஆண்டவன் சேவைக்கே அர்ப்பணமான வாழ்வினை வாழ்ந்தவர் அவர். பக்தி சித்தாந்தத்தின் பெருமைகளைப் பிரகடனம் செய்த மகா முனிவர்களில் ஒருவர் அவர். ஆத்மானுபவம் பெறுவதற்குச் சாதனமாகப் பரமனின் பெயர்களை மனனம் செய்யும் நாம சித்தாந்தத்தில் பெரு நம்பிக்கை வைத்தவர் அவர்.



பக்தி உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்குத் தியாகராஜர் கையாண்ட முறை விசேஷமானது. ஆண்டவனை அநுபவிக்கும் பரவச உணர்வைத் தோற்றுவிப்பதற்கு இசையை ஒரு சக்தி வாய்ந்த சாதனமாகத் தேர்ந்தெடுத்தவர் அவர். அசாதாரணச் சிறப்புப் பொருந்திய பாடல்களை இயற்றினார். நமது ராகங்களுக்கு அழுத்தமும், வண்ணமும் தந்தார். கர்நாடக சங்கீதத்தின் நல்லமைச் சிற்பி அவரே. மற்றும் பல சங்கீத உபாசகர்களுக்குப் பிரபோதம் ஊட்டித் தம்மைப் பின் தொடரச் செய்தார். அவரது பாடலில் உள்ள இசைச் சிறப்புக்கு ஈடானது அதன் இலக்கியச் சிறப்பு. இந்த சங்கீத மஹானிய்யால் கர்நாடக சங்கீதமே புதிய வளம் பெற்றது.

சங்கீத திரிமூர்த்திகளான தியாகராஜர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரி ஆகிய மூவருமே 'கிருதி' என்கிற இசை வடிவத்துக்குப் பூரணத்துவம் அளித்தனர். எனினும், தியாகராஜரே 'சங்கதிகள்' என்ற அம்சத்தைப் புகுத்தி ஒரு ராகத்தின் பல சாயல்களையும், உணர்ச்சிகளின் பல சாயல்களையும் சங்கதிகளின்மூலம் வெளிக்கொணர்ந்தவர்களில் முதல்வராவார். நமது கனராக பஞ்சரத்தினக் கிருதிகளில் அவர் மிகவும் கவர்ச்சி வாய்ந்த ஸ்வர சாகித்தியங்களை உலகுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். மெய் சிலிர்க்கச் செய்யும் திவ்விய நாம, உத்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகளுக்கு முழுமைப் பூச்சுக்களை அளித்தவரும் இந்த வாக்கேயகாரரே ஆவார். கர்நாடக சங்கீதத்தில் அவர் பெரிய அளவில் பங்கு பற்றியதோடு மட்டுமின்றி, அவரது பங்குக்கு ஒரு முக்கியத்துவமும் உண்டு.

இப்படிப்பட்ட மகோன்னதமான நாத உபாசகரின் இருநூற்றாண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுவது பொருத்தமே. இவ்விழா வெற்றிகரமாக நிறைவேறுமாக!

உழைப்பின் வெற்றி!

உழைப்பின் சிறப்பால்தான் உலகம் உயர்வடைகிறது; உழைப்பில்லையென்றால் உயிர்கள் இல்லை; உயிர்கள் இல்லையென்றால் உலகம் இல்லை. உழைப்பில் உயர்வு, தாழ்வு இல்லை. உழைப்பாளிகளின் உழைப்பினால் நாட்டில் வளம் பெருகுகிறது. லட்சுமி கடாட்சமே அவர்களிடம்தான் தங்கியிருக்கிறது. பொருளடக்கப் பகுதியில் உள்ள படத்தில் காணும் உழைப்பாளி தன்னை மறந்து தன் தொழிலிலேயே கண்ணாயிருக்கிறான்; கடவுள் அவன் பங்கில் இருக்கிறார். பாரதியின் கவிதை இதை நன்கு எடுத்துச் சொல்லுகிறது.

**" வீரர்தம் தோளினிலும்—உடல், வெயர்த்திட உழைப்பவர் தொழில்களிலும்
பாரதி சிரத்தினிலும்—ஒளி, பரவிட வீற்றிருந்(து) அருள்புரிவாள் "**



தமிழிசை இயக்கத்தின் காரணம்



ராஜாஜி

நம் நாட்டில் பாட்டு, நாட்டியம், சிற்பம், சித்திரம் எல்லாமே பக்தியிலிருந்து உதிக்கும் பொருள்கள். தெய்வ பக்தியில்லாமல் இந்த நுண்கலைகளுக்கு நம்முடைய பண்பாட்டில் இடம் கிடையாது.

கானத்துக்குள் புகுத்தும் சாகித்தியம் பகவானை அணுகும் மொழிகளாக இருக்க வேண்டும். இதிலிருந்து என்ன உண்மையைக் காண்கிறோம்? கானத்தின் சாகித்தியம் பாடும் பக்தனுடைய தாய் மொழியாகத்தான் இருக்க வேண்டும். அல்லது ரிஷிகளிடமிருந்தும் மற்ற பெரியோர்களிடமிருந்தும் பெற்ற மந்திரமாக இருக்க வேண்டும். 'சிவாய நம :' என்றால் உள்ளத்தில் நிம்மதி உண்டாகிறது. ஆங்கிலத்தில் அல்லது நாம் பேசாத மொழியில் இருந்தால் உள்ளம் சங்கீதத்தோடு இணைந்து ஆனந்தத் துடிப்பு அடையாது. நாம் பேசும் பாஷையாகவோ அல்லது அதற்குச் சமானமான பழக்கமுள்ள பாஷையாகவோ இருக்க வேண்டும். இதுதான் தமிழிசை இயக்கத்தின் ரகசியம், உட்கருத்து. இப்படியில்லாமல் ஸ்வரம், தாளம், லயம் இவற்றை மட்டும் நாம் அநுபவிக்கும் காரியம், ஆலயங்களுக்குப் போகிற அந்நியர்கள் சிற்பங்களையும், கோபுரங்களின் அழகையும் ரசித்துப் பார்ப்பது போலாகும். கோயிலிலுள்ள பகவானைப் பற்றி அவர்களுடைய கருத்து செல்லாது.

மகான் தியாகையர் ஏன் தெலுங்கில் பாடினார்? அவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர், இங்கேயே பிறந்து வளர்ந்து உஞ்சவிருத்தி விரதத்தில் ஆயுளை முடித்துப் பகவான் பாதங்களை அடைந்தவர். ஆயினும் ராமனோடு தெலுங்கில்தான் பேசிப் பாடினார். இதுவே தமிழிசைத் தத்துவம். தியாகப் பிரம்மம் தந்திருக்கும் கீர்த்தனைகளைத் தமிழர் பாட வேண்டியது அவசியம். அவை நம்முடைய சொத்து. ஆனால் பொருளை நன்றாகத் தெரிந்து கொண்டு பாட வேண்டும்.

பாட்டைக் கேட்கிறவர்களும் தெய்வ பக்தியில் மூழ்கியவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் கீர்த்தனைகளை உண்மையில் அனுபவிப்பார்கள். சங்கீதத்தை ரசிப்பதோடு பக்தி வளர்ச்சியும் அடைவார்கள். தியாகய்யர் அருளியிருக்கும் தெலுங்கு கீர்த்தனைகளைப் பாடுவதற்குமுன் அவற்றின் சாராம்சத்தைச் சுருக்கமாகத் தமிழில் எடுத்துச் சொல்லிவிட்டுப் பிறகு பாடுவது நலம்.










மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் ஆதரவில் சென்னை சம்ஸ்கிருத அரங்க உதவி நிதிக்காக ஸ்ரீமதி பிரியம்வதா பரத நாட்டிய விருந்தளித்தார். நடனமாடிய ஸ்ரீமதி பிரியம்வதாவுக்கு ஸ்ரீமதி எம்.எஸ். அவர்கள் பரிசு வழங்கிக் கௌரவிக்கிறார்.

மயிலை இந்து தரும மன்றத்தின் ஆதரவில் ஸ்ரீ காஞ்சி ஆசாரியாளைக் குறித்து உருவான சர்வதேச அறிஞர்களின் அஞ்சலி நூலை அண்ணாமலை சர்வகலாசாலை உப அத்யட்சகர் ஸ்ரீ சந்திரா ரெட்டி திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களிடம் வழங்குகிறார்.

அகில இந்திய சம்ஸ்கிருத சங்கத்தின் ஆதரவில் டிசம்பர் 23ந் தேதி நடைபெற்ற வேத சாஸ்திர வித்வத் சதஸின் ஆரம்ப விழாவில் சங்கத் தலைவர் திரு ஜி. கிருஷ்ணமூர்த்தி, உத்தரப் பிரதேச கவர்னர் டாக்டர் கோபால ரெட்டிக்கு வரவேற்புரை வழங்குகிறார்.

மயிலாப்பூர் ஆர். ஆர். சபாவில் திரு வேங்கட கிருஷ்ண அய்யங்கார் அவர்கள் தமிழாக்கம் செய்துள்ள துளஸிதாஸ் ராமாயண நூலைத் தொழில் அதிபர் திரு என். மகாலிங்கம் வெளியிட்டார். நூல் வெளியீட்டு விழாவில் திருமுருக கிருபானந்த வாரியார் உரையாற்றுகிறார்.





ராஜாஜியின் கருத்துக்கள்

மந்திரி மாதவன் அவர்கள் கூறியது போல், கம்யூனிஸ்ட் தலைமையினர் நடவடிக்கைகளைச் சரியாக நிர்வகிக்காமல், விம்கோ தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளிகளைத் தவறான வழியில் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். பழிக்கு ஆளாகாமல் தப்ப வேண்டும் என்ற நாட்டத்தில், தமிழக சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு மந்திரி சபையைவிட நானே பொறுப்பாளி என்று அவர்கள் குற்றம் சாட்டித் தொழிலாளிகளைத் தவறாக நடத்திச் செல்வதாகக் கேள்விப்படுகிறேன். இது தி. மு. க. தலைமைக்குப் பரிசு போல் தரப்படும் நிந்தனை. அதோடு என்னைப் பொறுத்த மட்டில் முற்றிலும் பொய்யானது.

* * *

லால் பஹாதூர் நகரத்திலிருந்து வந்த செய்திகளைவிட முக்கியமான செய்தி: மத்திய பட்ஜெட்டில் துண்டு விழும் 500 கோடி ரூபாயை ஈடுகட்டப் புது வரிகள் போடப்படுமாம், காகித நோட்டுக்களும் அச்சடிக்கப்படுமாம். புதிதாக வரி போட அதிக இடமில்லை. ஏனெனில், வரி விகிதத்தை அதிகப்படுத்துவதால் வசூல் குறையக்கூடிய நிலையை அடைந்து விட்டோம். எனவே, ரூபாய் அச்சடிப்புத்தான் அதிகமாகும். இதனால் விலைவாசிகள் உயர்ந்தே தீரும். சமுத்திரக் கரையில் வந்து நின்று கொண்டு அலைகளைத் திரும்பிப் போகச் சொல்வது போல், ஆட்சித் தலைவர்கள் ரூபாய் நோட்டுப் பெருக்கத்தை அதிகமாக்கிக் கொண்டே விலைவாசிகள் ஏறக்கூடாது என்கின்றனர். எல்லா விலைவாசிகளும் ஏறுவதென்பது எல்லாப் பொருள்கள் மீதும் வரி சுமத்தி மக்களிடமிருந்து வசூலிப்பதற்குச் சமமேயாகும். விலைவாசி உயர்வுக்குக் காரணமான கொடுங்கோலர்கள் வியாபாரிகளே என்று மக்களை நம்பச் செய்ய அரசாங்கத்தினர் முயல்வார்கள். வாக்காளர் அறியாதோராக இருக்கும் வரையில் இம்மாதிரி குற்றத்தைப் பிறர் தலையில் கட்டிப் பலி தரும் உபாயம் இருக்கவே இருக்கிறது.

* * *

அநீதியும் பலவந்தமும் இழைக்கப்படும் போது பொறுத்துக் கொண்டிருப்பது எளிதல்ல. எளிதல்ல எனினும் இத்தகைய பொறுமை சில சமயங்களில் அவசியமாகி விடுகிறது. பெரும்பான்மை பலத்தைக் காட்டி ஒரு தரப்பினர் அநீதம் இழைக்கையில், அநீதத்தை அமுலாக்குவதற்காக வன்முறையையும் மேற்கொள்கையில், மறுதரப்பினர் தமது கிளர்ச்சியை விடுவதற்கில்லை. மாணவ சமுதாயத்தினர் பொறுமையுடன் இருக்க வேண்டுமென்று தமிழக முதன்மந்திரி வலியுறுத்தி வருகிறார். அவரது புத்திமதியை இளைஞர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். ராஜ்ய அரசாங்கம், மாணவர்கள் இருவருமே விவேகத்துடன் நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் பிரச்னையை நியாயமான அடிப்படையில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தாலொழிய, இந்தப் 'போர் நிறுத்தம்' நிரந்தரமாக நீடிக்க முடியாது. *

* * *

அரசாங்கத்தைவிட அரசியல் கட்சிக்கே பெரும் அதிகாரம் இருக்க வேண்டும் என்பதே லால்பஹாதூர் நகர் மனோபாவமெனத் தெரிகிறது. கொள்கைகளைச் சர்க்கார் அமல் செய்வதால் ஏற்படும் விளைவைப் பாராமல், கொள்கைகளை மட்டும் வகுக்கும் கட்சிக்கே அதிகாரம் வழங்கிய நாடுகளின் அநுபவங்களைப் பார்த்தோமாயின், லால்பஹாதூர் நகர மனப்பான்மை பிராணபத்தானது என்று புரியும். மந்திரிசபைகளில் இடம் பெற முடியாதவர்களுக்கெல்லாம் இப்போது செய்யப்பட்டுள்ள அதிகாரப் பங்கீடு திருப்தி தரவில்லை. எனவேதான், பொறுப்பு எதுவும் ஏற்காமலே அரசியல் கட்சியின் மூலம் அரசாங்கத்தின் கடிவாளத்தைப் பிடித்துச் செலுத்த வேண்டும் என்று கோருகிறார்கள். பார்லிமென்டிலோ சட்டசபைகளிலோ பதில் சொல்லக் கடமைப்பட்டிராதவர்களிடம் அதிகாரத்தைத் தருவது ஜனநாயக அடிப்படைக்கே முரணானது. வாக்காளர் அனைவரும் தேர்ந்தெடுக்கும் சட்டசபைகளைப் பற்றிக் கவனம் இன்றி, அரசியல் கட்சிகளே ஆளத் தொடங்குவதெனில் நாம் கம்யூனிஸத்துக்குச் சறுக்கிக் கொண்டு போனதாகவே ஆகும்.

* * *

மக்கள் சபையின் நாயகராகிய தாம் எந்தக் கட்சியையும் சேர்ந்தவரல்ல என்று கூறி அ. இ. கா. க.வின் அழைப்பை ஏற்க மறுத்த ஸ்ரீ சஞ்சீவிரெட்டி அவர்களுக்கு என் அன்பும் மதிப்பும்கூடிய பாராட்டுக்களை அளிக்கிறேன். சபாநாயகர் பதவியைக் குறித்த கொள்கைகளையும் மரபுகளையும் அவர் சரியான முறையில் கடைப்பிடித்திருக்கிறார். இதற்கு மாறாகத் தமிழ்நாட்டுச் சட்டசபைநாயகர் சமீபத்தில் இடைத் தேர்தல்களின் போது ஆளும் கட்சிக்காகத் தீவிரப் பிரசாரம் புரிந்தார்.

* * *

தமிழகத்துக்கு வரும் மத்திய மந்திரிகள் தி. மு. க. அரசாங்கம் மக்களிடம் பெற்றுள்ள மதிப்பை உயர்த்தும் வகையில் பேசுவது குறித்து, தமிழக சட்டசபையில் எதிர்க் கட்சியாக உள்ள முப்பது காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கும் பெரும் குறை. இது தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்குத் தரும சங்கடம் உண்டாக்கியுள்ளது என்று லால் பஹாதூர் நகரில் ஒரு காங்கிரஸ் தலைவர் புகார் செய்திருக்கிறார். கருத்திருமனின் புகாரும், அதற்குப் பதிலாக ஸ்ரீ எஸ். கே. பாட்டீல் எதிர்க் கட்சிகளைப் பாராட்டும்போது

---

* இவ்விதழ் அச்சேறும் தருவாயில் தென் மாவட்ட மாணவர்கள் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைக் கைவிடாததாகவும், இது காரணமாக ராஜ்யம் முழுதிலுமுள்ள கல்லூரிகளும் பள்ளிகளும் காலவரம்பின்றி மூடப்பட்டிருப்பதாகவும் செய்தி வந்துள்ளது.

மிதமாக இருக்க வேண்டும் என்று கூறி விருப்பதும் பகிரங்கவிவாதத்துக்கேற்ற தர்க்க முறையில் அப்பழுக்கின்றி உள்ளன. ஆனால் இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. தாங்கள் எதிர்க்க வேண்டிய தி. மு. க. முதன் மந்திரியையும், அவர்களது சகாக்களையும் மத்திய மந்திரிகள் பொதுவிடத்தில் பாராட்டுவது எதிர்த் தரப்பில் உள்ள காங்கிரஸ் கட்சிக்கு ருசிக்கவில்லை. இதை நிறுத்த விரும்புகின்றனர். இது காரணமாக இனி இப் புகழுரைகள் நிறுத்தப்படவும் கூடும். தி. மு. க. நன்றாகச் செயலாற்றி விருக்கிறது என்ற பொதுமக்களின் நம்பிக்கைக்கு எதிராக காங்கிரஸ் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. சத்தியம் நல்லதுதான்; ஆயின் கட்சி அதை விட முக்கியமாகி விட்டது.

ஃஃஃ

இவ்விதம் தலையங்கம் எழுதப்பட்டபின் மொழி மசோதா ராஷ்டிரபதியின் அங்கீகாரம் பெற்றுச் சட்டமாகிவிட்டது. ஹிந்திப் பகுதி, ஹிந்தி பேசாத பகுதி என்ற இரு பகுதிகளாக இந்தியாவைப் பிரிக்க இந்திய சர்க்கார் முடிவு கட்டி விட்டதாகத் தெரிகிறது. ஹிந்தி பேசாதோர் ஹிந்தியை விரும்பாததால் ஆங்கிலத்தில் போதனை பெற்று நல்ல பலன்களைப் பெறுவர். எனவே ஹிந்தி பேசுவோர் மீது இச்சட்டத்தால் வலுவான அடி விழுந்திருக்கிறது. சட்டம் எத்தனையோ எதிர் விளைவுகளை ஏற்படுத்தி விடக் கூடும். எனினும் நல்ல ஆலோசனைகள் ஏற்கப்பட்டு, இம்மகத்தான தவறு திருத்தப்படும் என்று நம்புவோமாக. சிந்தனையற்ற பிடிவாதக்காரக் கூட்டங்களின் நெரிசலுக்கு ஆட்பட்டு, நம் நாட்டு இளைஞர்களுக்கெல்லாம் சர்க்கார் ஊறு இழைத்து விட்டது. இந்த ஏற்பாட்டை மாற்றாமல் அமல் செய்தால் உடனடியாக இல்லாவிடினும் காலக்கிரமத்தில் தேச நிருவாகத்தில் எத்தனை ஒழுங்கீனம் உண்டாகும் என்பதை எண்ணினாலே நடுக்கமுண்டாகிறது. பொருளாதாரம், நிதி நிலைமை இவற்றில் சீர்குலைவு ஏற்பட்டிருப்பதும், பொதுவாகவே ஊழல் ஓங்கியிருப்பதும் போதாதென்று நிருவாகத் தாமதம், ஒழுங்கீனம் இவற்றுக்கும் வழி செய்யப்பட்டிருக்கிறது. நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கக் கூடிய சர்க்கார் காரியாலய ஊழியர்கள் இப்போது விஷயங்கள் போகிற போக்கைப் பார்த்து நம்பிக்கையை முற்றிலும் இழக்க வேண்டியதுதான்.

தோஷங்கள் நீக்கும் மருந்து

மகாபாரதம் கல்கியில் 14ந் தேதி முதல் வருவதில் எல்லோரும் சந்தோஷப்படுகிறார்கள். இது உலகிற்கே பெரிய பாக்கியமாகும். மேலும் நவகிரஹ சஞ்சாரங்களால் ஏற்படும் தோஷம் நீங்கி உலகுக்குப் பல க்ஷேமங்கள் ஏற்படப் பெரிய மருந்தாகும். ஸ்ரீ மகாபாரதத்தைப் படிப்பது ஸகல தேவதைகளின் அருளையும் அளிக்குமென ஸ்ரீ வியாஸரே கூறியுள்ளார். ஸ்ரீ ராஜாஜி எழுதுவது வியாஸரே எழுதுவது போலாகும். வியாஸரே மகாபாரதத்தைப் பற்றிக் கூறும்போது, தர்மபுத்திரரைப் பற்றிப் படித்தாலோ, கேட்டாலோ அக்குடும்பத்திற்கு தர்மம் வளருமென்றும்; பீமனைப் பற்றிப் படித்தாலோ, கேட்டாலோ பாபம் விலகுமென்றும்; அர்ஜுனனைப் பற்றிப் படித்தாலோ, கேட்டாலோ சத்துரு பயம் நீங்குமென்றும்; நகுல ஸஹாதேவர்களைப் பற்றிப் பேசினால் வியாதிகள் யாவும் நீங்குமென்றும்

धर्मो विवर्धति युधिष्ठिरकीर्तनेन
पापं प्रणश्यति वृकोदरकीर्तनेन ।
शत्रुर्विनश्यति धनञ्जयकीर्तनेन
माद्रीसुतौ कथयतां न भवन्ति रोगाः ॥

என்ற சுலோகத்தில் கூறியுள்ளார். இந்த நான்கும் இப்பொழுது உலகத்திலுள்ள அனைவருக்கும் தேவையாக உள்ளவை. இவைகளை நமது கல்கியில் வரும் மகாபாரதக் கட்டுரை நிச்சயம் உலகுக்கு அளிக்கும். ஸ்ரீ குருவாயூரப்பன்தான் ஸ்ரீ ராஜாஜியின் மனத்தில் இந்தச் சமயத்தில் கல்கியில் எழுதும்படி தோன்றச் செய்திருக்கிறார். தை, மாசி, பங்குனி மாதங்களில் மீன ராசியில் சூரியன், அங்காரகன், ராகு, சனி இவர்கள் சேருவது தேசத்திற்குப் பல தீங்குகளை அளிக்கக்கூடும். அந்தத் தீங்குகளை நமது கல்கியில் வெளியாகும் ஸ்ரீ மகாபாரதம் நிச்சயம் விலக்கும். ஸ்ரீ பகவான் நமது தேசத்துக்கும் மற்ற தேசங்களுக்கும் க்ஷேமங்களை அளிக்கும்படி வேண்டுகிறேன்.

—சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்

தமிழ் உலகும் உலகத் தமிழும்

சோமு





இன்பத் தமிழகத்தின் இதய ஒலியாக எழுந்து ஒலிக்கிறது நாககரம்! அதோ, அழகழகான அணிகளுடன் பெருமித நடையிலே நகர்ந்து வருகின்றன யானைகள்! தமிழ்த் தாய் உவகைக் கனியோடு காட்சி தருகிறாள்; அவளுடைய செல்வக் குழந்தைகளாக ஐம் பெருங் காப்பியங்கள் அணி செய்கின்றன! தொடர்ந்து வருகிறது, திருவள்ளுவர் சித்திரித்து நிறுத்திய தமிழகக் காட்சி! ஏர் பிடித்த தமிழ் மகன் இறைவனாகக் கோலம் தருகிறான்! இதோ கண்ணகி வழக்குரைத்த காதை! இதைத் தொடர்ந்து ஒலிக்கிறது மத்தளம். பல்லியங்கள் இயம்பப் பவனி வருகிறது பரத நாட்டியம்! அதோ, கம்பர் தரும் காட்சி – அண்ணலும் நோக்க அவளும் நோக்குகிறாள், மிதிலைக் காட்சிப் படலம்! ஆகா! அது என்ன? அவ்வைப் பிராட்டிக்கு, அந்தத் தமிழ் மூதாட்டிக்கு, அதிகமான் நெல்லிக்கனி தருகிற காட்சி மனத்தை உருக்குகிறது! இதைத் தொடர்கிறான், முல்லைக்குத் தேர் ஈந்த பாரி வள்ளல்!

இதோ, ஒன்பதாவது வண்டி, கரக ஆட்டம்! பம்பையின் ஒலி–ரண்டின ரண்டின ரண், டிர்ராண்டின டிர்ராண்டின டிரிண்! கரக ஆட்டம் நகர்கிறது. அடுத்து வருகின்றது பசு! 'காட்சிக்கு எளியன்' என்று தமிழ் அரசனுக்கு இலக்கணம் வகுத்தார் அல்லவா திருவள்ளுவர், அந்த இலக்கணத்துக்கு ஏற்ப, அரசனைக் காண்பது மட்டுந்தானா எளிது, அவனிடம் முறையிடுவதும் நீதி பெறுவதும்கூட எளிது என்ற உண்மையை உணர்த்துகிறது மனுநீதிச் சோழனுடைய கதைக் காட்சி! ஆராய்ச்சி மணியை நாவினால் ஆட்டி மன்னர் பெருமானையே முற்றத்துக்கு வரவழைத்து நீதி பெறுகிறது தமிழ்ப் பசு! இதைத் தொடர்ந்து தமிழுக்குத் தலை ஈந்த குமணனின் மெய்சிலிர்க்கும் காட்சி! பிறகு மாமல்லபுரம்! அடுத்து காவடி ஆட்டம்!

சொல்லிக் கொண்டே போகிறீர்களே, இந்தக் காட்சி வரிசையிலே கடவுளுக்கு ஒரு வண்டி இல்லையா, தமிழ்க் கடவுளான முருகனைக் காணுமே என்கிறீர்களோ? இதோ, திருமுருகாற்றுப் படை! உடம்பு புல்லரிக்

இலங்கை அமைச்சர் திரு திருச்செல்வமும், தமிழக முதன் மந்திரி திரு அண்ணாதுரையும். உலகத் தமிழ் விழாவுக்கு இலங்கைப் பிரதிநிதிகளின் தலைவராக விளங்கினார் திரு திருச்செல்வம்.





தீவுத் திடலிலிருந்து புறப்பட்டு வந்த மாபெரும் ஊர்வலத்தை ராஷ்டிரபதி ஜாகிர் ஹுசேனும், தமிழகக் கவர்னரும், முதன் மந்திரி அண்ணாவும் வியப்புடன் பார்த்து மகிழ்கிறார்கள்.


கும்படியாக ஆறுபடை வீடு, எதிரே நக்கீரர்! இதற்குப் பின்னால் அடுத்த வண்டியிலே ஆண்டாளின் திருப்பாவை!

'எல்லே இளங்கிளியே
இன்னம் உறங்குதியோ'

என்று திருப்பாவையிலே துயில் எழுப்புகிற தமிழகக் காட்சி!

பதினாறாவது வண்டியிலே யானை கட்டிப் போரடிக்கும் அழகான தென் மதுரையை அப்படியே பெயர்த்து எடுத்து வைத்தது போல் அற்புதமான காட்சி! தொடர்ந்து நாட்டுப் புற நடனம்! இதையடுத்துப் பூம்புகாரிலே வாணிபம்! நாழி நாழியாக முத்துக்களை அளந்து கொட்டுகிறார்கள், வணிகப் பெருமக்கள், யவன வாணிபனுக்கு! பிறகு, தமிழ்ப் புலவருக்குக் கவரி கொண்டு காற்று வீசும் தமிழ் மன்னன் - மோசி கீரனார் காட்சி! கோட்டைப் போர், கும்மி கோலாட்டம், பாரதியார் திருவுருவம், பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி., தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யர், மறைமலை அடிகள், திரு வி. க., தமிழ் கற்ற மேனாட்டு அறிஞர்கள் வீரமாமுனிவர், கால்டுவல், ஜி. யூ. போப் — ஆகிய புலவர்களின் திருவடிவக் காட்சிகள்! பிறகு கிராமத்துக் கேளிக்கையான பொய்க்கால் குதிரை! இறுதியிலே பொன்னான யானையிலே தமிழ்த் திரு விழாக் கொடி! இந்த அலங்கார வண்டிகளுக்கு இடையிடையே அறிஞர்கள், சீரணித் தொண்டர்கள், மாணவ மாணவியரின் அணி, கலைஞர் வரிசை!


எத்தனை அழகான காட்சி! அந்த வண்டிகள் அணி அணியாக மென்னடையிலே நடந்து சென்ற போது மௌண்ட் ரோடிலே குடியரசுத் தலைவரும், முதல் அமைச்சரும்





- பூம்புகார் அலங்காரத் தோற்றம்
- பூம்புகாரில் திரளாகக் கூடியுள்ள மக்கள் வெள்ளம்
- பூம்புகார் காட்சிகளை மக்கள் பார்த்து ரசிக்கின்றனர்.







⋀ கல்கி காரியாலயத்தில் உலகத் தமிழ் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஆசிரியர் சதாசிவம் அளித்த விருந்தில் தமிழக மந்திரி திரு கருணாநிதியும் திரு முரசொலி மாறனும் ராஜாஜி அவர்களுடன் அளவளாவுகின்றனர்.



⋀ உலகத் தமிழ் மாநாட்டில் திராவிட மொழியியல் நூல் வெளியிடப்படுகிறது. உலகத் தமிழ் கருத்தரங்குத் தலைவர் திரு பிலியோஸா திரு அண்ணாதுரையிடமிருந்து புத்தகத்தைப் பெறுகிறார்.

அமைச்சர் பெருமக்களும் ஆன்றோரும், சான்றோரும் பொது மக்களும், ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளுமாக மொய்த்து நின்று கண்டு களித்த அந்த நேர்த்தியான காட்சி இன்னமும் எத்தனை பசுமையாக மனக் கண்ணிலே பவனி வருகிறது! ஆகா! அத்தனை வண்டிகளிலும் அத்தனை அழகோடும் இயல் போடும் காட்சிகளைச் செய்து நிறுத்திய தமிழகத்துக் கலைஞர் பெருமக்களின் கைவண்ணந் தான் என்ன! திரைப்பட அன்பர்களும், கலைஞர்களும், ஒன்று கூடிச் செய்த ஏற்பாடு வேறு எப்படி இருக்கும்!

தமிழ்த் திருவிழாவுக்குக் கட்டியம் கூறுகிற இந்த ஊர்வலம் தமிழ்த் திருநாளுக்கே ஆதார சுருதியை ஒலித்தது. கச்சேரிக்குத் தம்புராவை மீட்டுவது போலே! இந்த ஆதார ஒலியிலே இணைந்து ஏழெட்டு நாட்கள் தொடர்ந்து தமிழ் ஒலித்தது! தமிழன்னை உவகையோடு எழுந்து நின்று பேசினாள்! தமிழ்க் குரலிலே மட்டுமல்லாமல் அகில உலகக் குரலான ஆங்கிலக் குரலிலும் அவள் தமிழையே ஒலித்தாள். தமிழகத்து அறிஞர்கள் மட்டுமல்லாமல், இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, செக்கோஸ்லவாகியா, ப்ரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி போன்ற நாற்பது நாடுகளிலிருந்து இருநூற்றுக்கும் மேலான வெளிநாட்டு அறிஞர்களும், மலேயா இலங்கை நாடுகளிலுள்ள தமிழ்ப் பெருமக்களும் ஒன்றுகூடி வந்திருந்து தமிழின் அருமை பெருமைகளையெல்லாம், பண்டை நாளில் பூம்புகாரிலே நடைபெற்ற வாணிபத்தைப் போல முத்து முத்தாக அளந்து அளந்து கொட்டினார்கள்!

நிகழ்ச்சிகளில் லெவற்றைத் தான் பாருங்களேன் :

செயலாற்றல் மிக்க தமிழக முதன் மந்திரி திரு அண்ணாதுரை பின் நிற்கச் சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு லக்ஷ்மணஸ்வாமி முதலியார் திறந்து வைக்கிறார்



பல்கலைக் கழக அரங்கிலே தனிநாயக அடிகள், ழீன் பிலியோஸா, பேராசிரியர் மீனாட்சி சுந்தரனார், டாக்டர் சாட்டர்ஜி, டாக்டர் மு. வ., கமில் ஸ்வலபில், டாக்டர் கே. கே. பிள்ளை, இலங்கை அமைச்சர் திருச் செல்வம், டாக்டர் ரீஸ், டாக்டர் மார், டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், பேராசிரியர் இலக்குவனார் முதலியோர்! பூம்புகார் என்று திருப் பெயர் சூட்டப்பட்ட தீவுத் திடல் என்னும் அந்தப் பழைய ஐலண்ட் மைதா னத்திலேதான் என்னென்ன கோலங்களும் சொற்பொழிவுகளும் என்கிறீர்கள்! வண்ண வண்ண மின்சார விளக்குகள் - சுற்றுபவை, சுழல்பவை, மறைபவை, தோன்றுபவை, மறைந்து மறைந்து தோன்றுபவை, கண் ணைச் சிமிட்டுபவை, கண்களை அகல அகலத் திறந்து காதல் நோக்கு நோக்குபவை! நாளங்காடி, அல்லங்காடி என்ற பெயரில் கடை வரிசைகள்! உள்ளே நுழைந்தால் முட்டி மோதிக் கொண்டு செல்லும் பல்லா யிரம் மக்கள்! இவர்களுக்கெல்லாம் தமிழை எடுத்தியம்புவதற்காகச் சொற்பொழிவுகள், உரைக் கோவைகள், பட்டி மன்றங்கள், கவியரங்குகள்! பங்கு கொண்ட அறிஞர் களின் பெயர்களைச் சொல்ல ஆரம்பித்தால் இந்த இதழ் முழுதும் பெயர்ப் பட்டிய லாகவே நிரப்பி விடலாம்! இந்தப் பேச்சுக ளோடு ஒவ்வொரு நாளும் பல்கலைக் கழக அரங்கிலும், அண்ணாமலை மன்றத்திலும், பூம்புகார் மன்றங்களிலும் இசை நிகழ்ச் சிகள், நாடகங்கள், நடனங்கள், நடன நாடகங்கள் என்று சக்கைப் போடு போட் டார்கள்!

இந்த நிகழ்ச்சிகள் ஒருபுறமிருக்க, சென் னைப் பல்கலைக் கழகத்துத் தேர்வு மன்றத்திலே நிலையான புகழ் தரக் கூடிய தமிழகக் கலைக் காட்சி ஒன்றை நமது மதிப்புக்குரிய ராஜாஜி தமது ஆசிவந்த கரங்களால் மூன்றாந்தேதி காலை திறந்து வைத்தார்கள். பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் தலைமை தாங்கித் தமிழிலுமே சில நிமிஷங்கள் பேசி மக்களை எல்லாம் மகிழ்வித்தார். இந்தக் கலைக் காட்சியானது நண்பர் சா. கணேசன் அவர்களின் மேற்பார்வையில் உருவாகித் திருவிழா முடிந்த பிறகும் மேலும் சில வாரங்கள் தொடர்ந்து இருப்பதால், இது வரை பாராத மக்கள் இனியும் போய்ப் பார்த்து மகிழலாம். அப்படிப்பட்ட ஒரு பெரிய கலைச் சாதனையாகத் திகழ்கிறது இது!

தமிழ் நாட்டுக் கோவில்களின் படிமங்கள், வாகனங்கள், வழிபாட்டுக்குரிய பொருள்கள் இவற்றின் மாதிரிகள், தெய்வ அணிகள், சிற்பங்கள், தமிழ் இல்லங்களில் வழி வழி யாக வழங்கி வருகிற பொருள்கள், புதை பொருள் ஆராய்ச்சியில் கிடைத்த பழந் தமிழ்ச் சின்னங்கள், தொன்மையான நாண யங்கள், தமிழ் நாட்டுக்கே உரிய அரும் பெரும் வைத்திய முறையான சித்த வைத்திய முறையை விளக்கும் மூலிகைகள், மருந்து வகைகள், புகைப்படக் காட்சிகள்! இவை தவிர, தமிழ் இலக்கியத்திலிருந்தும் ஓவிய நிபுணர்கள் மணியம், கோபுலு, வினு, ராஜம், கே. மாதவன், சுபா, சரவணன், விஜயா, முத்து, ராஜு, சித்திர லேகா, சீனு முதலானோர் தமிழ்ப் புலவர் களின் கூட்டுறவோடு பெரிய அளவில் வரைந்து வைத்துள்ள அற்புத மயமான அழகுச் சித்திரங்கள் ஏறக்குறைய ஐம்பது இருக்கும்! இந்த ஓவியங்களில் எது எதைவிட உயர்ந்தது என்பதை எப்படிச் சொல்லுவது! கலைக் காட்சி முடிந்ததும் இந்த ஓவியங்களை வாங்கிக் கொள்ள விரும்புகிற கலையன்பர்களுக்கு என்று இவற் றுக்கான விலையையும் குறிப்பிட்டிருக் கிறார்கள். அத்தனை படங்களையுமே வாங்கி வைத்துக் கொள்ளலாம் போல் இருக்கிறது அவற்றின் நேர்த்தி!

பல்கலைக் கழக அரங்கிலும், பூம்புகாரி லும் இரண்டு இடங்களிலும் இரண்டு வெவ் வேறு முறையான உரை நிகழ்ச்சிகள் நடந்தன! பல்கலைக் கழக மன்றத்தில் இலக் கியப் புலவர்களுக்காகவும், பூம்புகாரில் பொதுமக்களுக்காகவும் என்று இரண்டாக வகுத்து, நான் முந்தி நீ முந்தி என்று கச்சை கட்டி முனைந்து நின்று இரண்டு நிகழ்ச்சிக் கோவைகளையும் வகுத்து அமைத் திருந்தார்கள்! அகில உலகத் தமிழ் விழா என்று நாடெல்லாம் நீட்டி முழக்கிச் சொல்லிவிட்டுப் பொதுமக்களை மறந்துவிட் டால் எப்படி? குடியரசு யுகம் என்றும், மக்கள் ஆட்சி என்றும், எல்லாரும் இந் நாட்டு மன்னர் என்றும் சொல்வதற்குப் பொருள் இதைத் தவிர வேறு என்ன உண்டு?

பொதுமக்களின் நிலை இருக்கட்டும். ஓரளவு படித்த இலக்கிய ஆர்வமுள்ள மக்கள் நிலைதான் என்ன? ஆராய்ச்சி அரங்குக் குள்ளே நுழையும் போது,

$6(6-1)/2 = 30/2 = 15$

என்று காதிலே விழுவதோடு கரும் பலகையி லும் எழுதிக் காட்டினால் என்ன நினைப் பார்கள்? தமிழ் இலக்கியம் என்றால் கண்ணகி கோவலன் என்றும், ராமன் சீதை என்றும், திருக்குறள் என்றும் மணி மேகலை என்றும் பேச்சுக்கள் ஒலிக்கும் என எதிர்பார்த்து உள்ளே நுழைகிற ஆசாமி அப் படியே மூர்ச்சை போட்டு விழுந்தால் வியப் பில்லை! அப்படி மூர்ச்சை போட்டு விழாமல் அத்தனை பேரும் இருந்து கேட்டதுதான் வியப்பிலும் வியப்பு!

ஸிக்ஸ் இண்டு ஸிக்ஸ் மைனஸ் ஒன் பை டு ஈக்வல் டு தர்ட்டி பை டு ஈக்வல் டு பிப்டீன்.

என்று இலக்கிய அரங்கிலிருந்து வருகிறது அறிஞர் ஒருவரின் குரல்! தப்பித் தவறிக் கணக்கு வகுப்புக்குள் நுழைந்துவிட்டோமோ, பல்கலைக் கழகம் ஆயிற்றே என்று ஒரு விநாடி தயங்குவதற்குள் அறிஞர் மேலும் தொடரு கிறார். என்ன சொல்லுகிறார்?

''திராவிட மொழிகளின் இணைப்பான மொழிகளைப் பற்றிய ஆராய்ச்சியிலே இந்தக் கணக்குப்படியே $6(6-1)/2 = 30/2 = 15$ என்று நிறுவ்வு செய்ய வேண்டும். அதாவது 'N' என்பது மொழிகளின் எண்ணிக்கை என்று வைத்துக் கொண்டால், $(N-1)/2$

என்ற மொழி இணைகளிலிருந்து தொடர வேண்டும்!''

மேலே மேலே சொல்லிக் கொண்டே போகிறார் அந்த மேனாட்டு மொழி ஆராய்ச்சி அறிஞர், தமது ஆங்கில உரையிலே! ஓர் ஈ காகம் அங்கே இங்கே நகர வேண்டுமே! பேச்சு மூச்சுக் கிடையாது. அதிலும் முடிச்சு முடிச்சாக இறுகிக் கொண்டே போகிற ஒரு முரட்டு ஆங்கில நடையிலே இத்தனை கணக்கோடு அவர் தமது மொழி ஆராய்ச்சிக் கயிற்றை முறுக்கும் போது யாராவது மூச்சு விடமுடியுமா என்ன? நம்முடைய அமுதத் தமிழ், ஆகா, சாகா வரம் பெற்ற அமுதத் தமிழ் என்றும்,

'' இருந் தமிழே உன்னால்
இருந்தேன் ''

என்றும் நம்முடைய முன்னோர்கள் எத்தனை முன்யோசனையோடு சொல்லி வைத்திருக்கிறார்கள்!

அப்படியானால் இந்த ஆராய்ச்சி அரங்கு முழுவதுமே நமக்கெல்லாம் அப்பாற்பட்ட பேச்சுகளாகத்தான் நடந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ? இல்லை! நாமெல்லாம் அப்படி நினைத்துவிடக் கூடாது என்பதற்காகவே தரைமட்டத்துக்குங்கூட வந்து பேசினார்கள், இரண்டொரு அறிஞர்கள்!

பொதுவாகச் சொன்னால் நமக்கெல்லாம் புரியக்கூடிய முறையில், எத்தகைய இல்லுமுல்லும் திருகு தாளமும் இல்லாமல், மெய்யான ஆர்வத்தோடும், உண்மையான ஆராய்ச்சியோடும், சத்தியம் என்ற கடவுளுக்குப் பயந்து சில அறிஞர்கள் இந்தக் கருத்தரங்கிலே ஆங்கிலத்திலும் தமிழிலும் அழகாகப் பேசினார்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறேன்.

இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த டாக்டர் தாமஸ் என்ற அம்மையார் 'வெல்ஷ்' மொழியின் வரலாற்றைப் பற்றி மிக அருமையான ஓர் ஆங்கிலக் கட்டுரையைத் திறம்படப் படித்தார். சிறுபான்மை மொழிகளுக்குரிய எல்லா மக்களுமே சிந்தித்துப் பார்க்க வேண்டிய பல அரிய கருத்துக்கள் அந்த அம்மையாரின் பேச்சிலே ஒளி வீசிப் படர்ந்தன! 'காலந்தோறும் தமிழ்' என்பது பற்றி டாக்டர் மு. வ. அவர்களின் தமிழ்க் கட்டுரையும், டாக்டர் கே. கே. பிள்ளை, டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம் ஆகியோரின் வரலாற்று ஆராய்ச்சிகளும் மிகவும் நன்றாக அமைந்திருந்தன. மற்றும் அறிஞர் வானமாமலை, கே.வி. ராமன், டாக்டர் ரீஸ், பேராசிரியர் டி. வி. மகாலிங்கம், இசையாசிரியர் ராமநாதன், கே. சி. தியாகராஜன் ஆகியோரின் பேச்சுக்களும் விளக்கங்களும் நல்ல தரமாக இருந்தன.

இந்த ஆராய்ச்சி அரங்கிலேயே மிகவும் பயனுடைய பேச்சுக்களில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது சித்தவைத்திய உரைக்கோவை! மதுரையைச் சேர்ந்த டாக்டர் லலிதா காமேசுவரன் எம். பி. பி. எஸ்., பிஎச். டி. (லண்டன்) அவர்கள் தமிழ் இலக்கியத்திலுள்ள மருந்துக் குறிப்புக்களை எடுத்துச் சொன்ன போது தமிழ் மக்களின் விஞ்ஞான அறிவையும் வளர்ச்சியையும் எண்ணி அங்கு கூடியிருந்த அன்பர்கள் எல்லாரும் பூரிப்பு அடைந்தார்கள்! இத்தனை ஆங்கிலக் கல்வியும், மேனாட்டுப் பட்டங்களும் பெற்

சென்னை, செட்டிநாட்டு அரண்மனையில் ராஜா சர் முத்தையா செட்டியார் உலகத் தமிழ் மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு அளித்த விருந்தில்.



னுள்ள ஒரு டாக்டர் தமிழ் நூல்களை இவ்வளவு நுட்பமாகக் கற்று எப்படித்தான் இத்தனை தெளிவான உணர்வோடு, நயமான ஆங்கிலத்தில் பேசுகிறார் என்று நான் வியந்து கொண்டிருக்கும் போதே நண்பர் கிருஷ்ணசாமி பாரதியார் என் அருகில் வந்து பேசுபவர் யாரென்று சொல்லி எனது வியப்பைத் தெளிய வைத்தார்! நாவலர் சோமசுந்தர பாரதியாரின் வழிச் செல்வமாகிய இந்த அம்மையார் இனிமேல் சித்த வைத்தியத்தைப் பற்றி ஒரு முழு நீள ஆங்கில நூலை எழுதி வெளியிட்டால், தமிழரின் விஞ்ஞான அறிவைப் பற்றிய பல தப்பெண்ணங்கள் மறைவதோடு, அறிவியற் கலைகளுக்கும் அது ஒரு பெரிய தொண்டாக அமையும் என்று கருதுகிறேன்.

வைத்தியத்தைப் பற்றிய இந்த ஆராய்ச்சி அரங்கில் என்னை மிகவும் கவர்ந்த மற்றொரு பேச்சு டாக்டர் உத்தமராயன் அவர்களுடைய சரளமான தமிழ் உரையாகும். அதுபோலவே டாக்டர் பத்மநாபன் அவர்களுடைய பேச்சையும் குறிப்பிட வேண்டும்.

மற்றப்படி பல்கலைக் கழக ஆராய்ச்சி அரங்கிலே நடைபெற்ற இலக்கிய உரைகளைப் பற்றி ஒரு விஷயத்தை இங்கே சுட்டிக்காட்ட வேண்டியது எனது கடமையாகும். அரங்கிலே பேசிய அறிஞர்கள் சிலரிடம், வெளிநாட்டவரானாலும் சரி, தமிழகத்து அறிஞரானாலும் சரி, சிலரிடம் அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையும், நியாயமற்ற உறுதியும் ஒலித்தன! விவாதத்துக்கும் சர்ச்சைக்கும் உரிய கருத்துக்களைச் சொல்லும் போதுகூடத் தயக்கமே இல்லை! ஒரே தடல் அடியாக அடிக்கிறார்கள்! என் அனுபவத்தில் பழைய பரம்பரையைச் சேர்ந்த பெரும் புலவர்கள் சிலரை நான் சந்தித்ததுண்டு. அறிஞர்கள் என்று எல்லாரும் ஒப்புக் கொண்ட மேதைகள் சிலரிடம் நெருங்கிப் பழகியிருக்கிறேன். இவர்கள் யாரிடமும் நான் கண்டிராத பெருமிதப் போக்கைச் சிலரிடம் இந்த அரங்கிலே கண்ட போது மனம் வேதனைப்பட்டது. மேனாட்டு அறிஞர்களில் சிலர் நம்முடைய தமிழ் மொழியில் ஆர்வம் செலுத்தி, நம்மை மதித்து இங்கே வந்து கலந்து கொண்டு, நம்மிடமே நமது மொழியைப் பற்றிப் பேசுவது நமக்கெல்லாம் பெருமைதரக்கூடிய நிகழ்ச்சிதான். சந்தேகமில்லை. ஆனால் இவர்களை நமக்கும் நமது மொழிக்கும் அதிகாரிகள் என்று நாம் கருதுவதோ, அல்லது அவர்கள் கருதும்படி நாம் நடந்து கொள்வதோ அறிவீனமாகும். ''தேமதுரத் தமிழோசை'' என்ற பாரதியாரின் சொற்களை "The sacred Tamil of Madhurai" (மதுரையின் புனிதத் தமிழ்) என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஒரு வெளிநாட்டு அறிஞரை ஆதாரத்தோடு எனக்குத் தெரியும். அவர் இத்தகைய விவாதங்களில் எல்லாம் புகுந்து அடித்து நொருக்கிக் கொண்டிருந்தார்!

இன்னொரு குறிப்பும் இங்கே கூறவேண்டும்:

இந்த ஆராய்ச்சி அரங்கத்துப் பேச்சுக்களில் சொல் ஆராய்ச்சிகள் பெரிய இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டன. தமிழ் என்றால் மொழி என்றும், இலக்கியம் என்றும் இரண்டு பகுதி உண்டு அல்லவா? மொழி பற்றிய ஆராய்ச்சி நமக்கு அவசியந்தான். ஆனால் ஒரு மொழிக்கு அல்லது பாஷைக்கு உயிராக இருப்பது அதன் இலக்கியமே ஆகும்! உடம்பாக இருப்பது மொழி! உயிரை மறந்து உடம்புக்குச் சிங்காரங்கள் செய்வதோ, அல்லது உடம்பினை இழுக்கு என்று கருதி உயிரை மட்டுமே பார்த்து உடம்பைக் கவனியாமல் விடுவதோ தவறுதான். ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனாலும், ''குஞ்சி அழகும், கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்சள் அழகுமே'' அழகென்று கருதுவது போல், ஒரே சொல் ஆராய்ச்சியிலும் மொழி ஆராய்ச்சிகளிலும் இறங்கி அதிலேயே முங்கி மூழ்கினால் எப்படி?

இலக்கிய அரங்கு என்பது பள்ளிக்கூடத்து வகுப்பு அறையோ அல்லது நாலைந்து பேராக இருந்து தனித்த முறையிலே செய்கிற நெருங்கிய திறனாய்வோ அல்ல! கருத்து வகுப்பு அல்ல, கருத்து அரங்கு அது! ரிஷிய சிருங்கர் திராவிடரா இல்லையா, அவருக்குக் கொம்பு இருந்ததா அல்லது கொம்பு கிடையாதா என்பது பற்றி ஒன்றரை மணி நேரம் ஆராய்ச்சி! பன்னிரண்டாம் நூற்றாண்டில் பேசப்பட்ட தமிழின் ஒலி இயல் என்ன, சீன நாட்டிலே சென்று வாழ்ந்த ஒரு திராவிடச் சாமியாரின் தலையிலும் மார்பிலும் ரோமங்கள் எப்படி வளர்ந்திருந்தன என்பது போன்ற சர்ச்சைகளை எல்லாம் கேட்கும் போது உங்களுக்கும் எனக்கும் சிரிப்பு வரலாம். அல்லது அழுகை வரலாம். ஆனால் இவற்றை விரும்பி விரும்பிக் கேட்கும் அறிஞர்கள் இருக்கக்கூடும் அல்லவா? எனவே, அவர்கள் இந்த நிகழ்ச்சிகளைக் கேட்கட்டும். இவற்றை விரும்பாத நம் போன்ற அப்பாவி மனிதர்கள் தமிழ் இசை பற்றியும், நாட்டுப் பாடல் பற்றியும், கலைச் சொல்லாக்கம் பற்றியும் கேட்பதற்கு உகந்த முறையில் ஒரே சமயத்தில் பல நிகழ்ச்சிகளைப் பல அறைகளிலே ஏற்படுத்தியிருந்தார்கள். நாள்தோறும் பிற்பகல் நேரத்தில் இத்தகைய ஆராய்ச்சிகளையும், இவை முடிந்த பிறகு உல்லாசக் களிப்புக்காக நாடகங்களையும், இசை நிகழ்ச்சிகளையும், நடனங்களையும் இந்த அரங்கிலே நடத்தினார்கள். இவற்றையும் பார்க்க இயலாத மற்றவர்களுக்கு என்று பூம்புகாரிலே சில சொற்பொழிவுகளும், பல கேளிக்கைகளும், சில பல இசை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்தப் பூம்புகார்த் திடலுக்கு இப்போது செல்லுவோமா? ஆனால் இதென்ன நடு வழியிலே யார் இப்படி நிற்கிறார்கள்? பல்கலைக் கழகத்திலும் புகாமல், பூம்புகாரிலும் இல்லாமல் வெளியில் நிற்கும் இந்த நண்பர்கள் யார்? விதம் விதமான சிறுகதைகளும், புதிய புதிய கவிதைகளும், வகை வகையான நவீனங்களும், நாளும் நாளும் எழுதிக் குவிக்கிற பாரதியின் பரம்பரையா இது? இரண்டு இடங்களிலும் இல்லாமல் இவர்கள் ஏன் இங்கே நிற்கிறார்கள்? பத்திரிகைக்காரர்களும் சில புலவர்களும்கூட இதோ இவர்களோடு சேர்ந்து நிற்கிறார்களே! அப்படி என்ன பேசுகிறார்கள் இவர்கள், இங்கே வழியில் நின்று கொண்டு?

(அடுத்த இதழில் முடியும்)

பொன்னிவனத்துப் பூங்குயில்

கொத்தமங்கலம் சுப்பு

இரண்டாம் அத்தியாயம்

சாகஸக் குயிலி வந்தாள்

அம்பு, குறி வைத்த இலக்கில் தைக்கும். வம்பு, குறி வைத்தவரையே தாக்கும். இவை இரண்டுக்கும் இது ஒன்று தான் வித்தியாசம். ஆனால் வேகத்தில் அம்பைக் காட்டிலும் வம்பின் வேகம் அதிகம். பாராக்காரன் குயிலியின் கையைப் பிடித்தவுடனே வண்டியின் பின்னால் ஓடிவந்த வம்புக்காரப் பையன்கள் எல்லோரும் அம்புகளைப் போல் ஆளுக்கொரு பக்கம் ஓடினார்கள்.

பாராக்காரன் வண்டியில் வந்தவரை, ''ராம், ராம்'' என்று வணங்கிக் கொண்டு இருக்கும்போது, வேகமாகக் குயிலி அந்த இடத்தை விட்டு நடக்க ஆரம்பித்தாள். இந்தப் பிடியிலிருந்து தப்பி விட்டாள். மறுபடியும் பிடிக்க



மாட்டான் என்று யார் சொல்ல முடியும்? தப்பினால் போதும் என்று அவள் மான் குட்டி போல் தாவிக்கொண்டே ஓடினாள். வண்டியில் வந்தவர் யார்? அந்தப் புண்ணியவானுக்கு நன்றி சொல்லி வணக்கம் தெரிவிப்போம் என்ற எண்ணம் அவளுக்கு வரவில்லை. 'ஏழையின் நன்றி எவருக்கு வேண்டும்?' ஆனால் இப்படித் தப்பி ஓடிச் செல்லும் போதுகூட அவள் துடுக்கு அவளை விட வில்லை. பாராக்காரன் பிடியை விட்டவுடன் அவனைப் புன்சிரிப்போடுகூட ஒரு முறை வெறித்துப் பார்த்தாள். ''என்னமோ பிடித்தாயே! தப்பித்துவிட்டேன், பார்த்தாயா?'' என்ற ஏளனம் அந்தப் பார்வையில் தொனித்தது. கேலியாக, ''ராம், ராம்'' என்று அவனை வணங்கினாள். அடுத்த கணம் ஏன் அங்கு நிற்கிறாள்? ஓடினாள்.

இவள் சொல்லிய 'ராம் ராமை'ப் பாராக்காரன் கவனிக்கவில்லை. அதைப் போலவே அவளுடைய வணக்கத்தையும் உத்தர விட்டவர் பொருட்படுத்தவில்லை. அவரும், அவருடைய தோழர்களும் விடுபட்டு ஓடும் மானையே வெறித்து வெறித்துப் பார்த்தார்கள். நடையில் அன்னத்தையும், சாயலில் மயிலையும்; ஓட்டத்தில் மானையும், உடம்பில் துடிப்பையும் கண்டார்களே அன்றி அவளைக் காணவில்லை. பின்னழகில் மயங்கிப்பெருமூச்சுவிட்டான் சர்க்கரை.

''பூவில் இவளுக் கிணைஏது—என்
புத்தியில் மணக்குது சவ்வாது''

என்று பாடினான்.

''சபாஷ், சபாஷ்!'' என்றார் கிருஷ்ண வேஷக்காரர். ''இவனுக்குச் சபாஷ் போடாதீர்கள். இவனுக்குச் சர்க்கரை என்று பெயர் வைத்தவர்களுக்குச் சபாஷ் போடுங்கள்'' என்றான் சியாமா.

கிருஷ்ண வேஷம் தரித்தவர் இரண்டு பேர்களுடைய பேச்சையும் செவிகளில் வாங்கிய வண்ணம், திரை வழியே அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். அவள் தலை மறைந்த பிறகுதான் திரும்பினார்.

'' அலைகடலின் ஆழத்திலே
ஆணிமுத்து குவியல் உண்டு
அடவியின் நடுவே,
அழகான மலருமுண்டு
காட்டில் எரித்த நிலா
கரடில் பழுத்த பலா
கடவுள் படைப்பினில் நாம்,
கண்டதெல்லாம் கொஞ்சமடா ''

என்று மனசில் ஒரு பெருமிதத்தோடு புகன்றார். சர்க்கரை உடனே ஓர் ஏட்டை எடுத்து அந்தப் பாட்டை அதில் எழுதிக் கொண்டான். சியாமாவோ அவரது முகத்திலிருந்த உணர்ச்சிகளை உள்ளத்தில் எழுதிக் கொண்டான்.



'' தப்பித்தோம், பிழைத்தோம் '' என்று ஓடினாள் குயிலி. ஒரு சந்தின் மறைவில் போய் நின்றாள். ஒரு முறை சுற்றிப் பார்த்தாள். தன்னுடைய படையினர் ஒருவரையும் அங்கு காணோம். ''சிட்டாய்ப் பறந்துட்டாங்களே'' என்று சிரித்தாள். குயிலி அவர்களை இகழவில்லை. அதுதான் இயற்கை.

கஞ்சிக்கு உள்ளவர்களிடத்தில் தான் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எல்லாம் உண்டு. இறப்பு எந்த நிமிஷத்திலும் வரும். ஒரு கல்லை விட்டு எறிந்தால் போதும், மனிதனின்கண்பட்டாலும் போதும் என்ற நிலையில் இருக்கும் மைனாவும் குருவியும்,



பஞ்சவர்ணக் கிளியும் இருக்கும் வரையில் ஆனந்தத்தோடு வாழ்வோம் என்ற எண்ணத்தில்தான் வாழ்கின்றன. பறவைகள் மட்டுமென்ன, பற்றற்ற துறவிகளும் அப்படித்தான்.

தனிமையில் நின்ற குயிலி, தன் கைத் தழும்பை மறுபடியும் பார்த்தாள். காவல்காரன் பிடித்ததற்கு அவள் வருத்தப்படவில்லை. அந்தத் தழும்பை அவன் பார்த்திருப்பானோ என்ற வெட்கம் வந்தது. அதற்குத்தான் கவலைப்பட்டாள். தன் வயதை ஒத்தவர்கள் எல்லாம் எப்படி எப்படியோ வாழ்ந்து கொண்டிருக்க, தான் மாத்திரம் தெருவில் தனியாகத் திரிந்து கொண்டிருப்பதற்கு வருந்தவில்லை. தலை விரிந்து கிடப்பதற்கு அவள் தலை குனியவுமில்லை. கையை ஒருவன் பற்றி இழுத்ததற்கும் கவலைப்படவில்லை. ஆனால், அவளுக்கு அறிவு தெரியாத காலத்தில் அவள் உடலில் ஏற்பட்ட சிறு வடு அவளுக்கு வருத்தத்தை ஊட்டியது. கையிலே இருந்த சிறு தழும்பு அவள் கருத்திலே கையகலம் படர்ந்திருந்தது. அதை அவள் ஒரு பெருங் குறையாகக் கருதியதால் ஊராரும் அதைப் பார்க்கவே தன் கையைப் பிடிக்கிறார்கள் என்று கருதினாள். தன் உடைகளை ஒரு முறை சரி செய்து கொண்டாள். தழும்பைத் துணியால் மறைத்துக் கொண்டாள். அப்படி ஒன்றும் அது விகாரமான தழும்பில்லை. அதை அவள் சொன்னால் தான் மற்றவர்களுக்குத் தெரியும். முழங்கை வரை இழுத்து யார் பார்க்கப் போகிறார்கள்? இந்தச் சமாதானமெல்லாம் அவளுக்குத் தோன்றவில்லை. அதை அவள் குறையென்றே கருதினாள்.

''பெண்ணே! தலை தப்பியதே தம்பிரான் புண்ணியம்; ஒரு தழும்புக்குக் கவலைப்படுகிறாயே?'' என்று அவள் மனச்சாட்சி கூறியது. ''களுக்'' என்று அவளே சிரித்துக் கொண்டாள்.

ஆம், சிரித்தாலும் அழுதாலும் ஏன் என்று கேட்க ஆள் இல்லை. என்றாலும் சிரிக்காமல் இருக்க முடியுமா? அவளே சிரித்துக் கொண்டாள். குஷி பிறந்தது. கட்டை விரல், பாம்பு விரல் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து, வெற்றிலை போடுவதுபோல் தன் வாய்க்குள் விரலைத் திணித்துக்கொண்டு, ''உஷ்'' என்று ஒரு சீட்டி அடித்தாள். எங்கேதான் இருந்தார்களோ? புற்றிலிருந்து ஈசல் வருவது போல் அவளுடைய நண்பர் குழாம், 'பொலபொல' வென்று ஓடி வந்தது. வரும் போதே டோலக் சின்னதம்பி, ''அக்கா! உன்னை அடிச்சானா?'' என்று வீராவேசத்துடன் கேட்டான்.

''அடிக்க விடுவேனடா? கம்பை ஓங்கினான், தலையிலே விழுந்திருந்தா அப்பத் தெரியும்'' என்று அவளும் விருப்புடன் கூறினாள்.

''நானே ஒண்ணு குடுத்திருப்பேன் அக்கா!'' என்று தன் டோலக்கின் முதுகில் ''பளார்'' என்று தட்டினான் சின்னத் தம்பி. அவன் டோலக்குக்கு ஒருபுறம்தான் தோலுண்டு.

''சபாஷ்டா, வீரா! என்ன தம்பி! கம்பு ஓங்கின உடனே உன்னைக் காணோம்?''

''இல்லேக்கா. நம்ம பயலுக எல்லாம் பயந்து ஓடினாங்க. ''ஓடாதீங்கடா, ஓடாதீங்கடா'' என்று சொல்ல நான் போனேன்.''

''அதுதானே பார்த்தேன். நீ பயப்படுவாயாடா?'' என்று அவன் முதுகில் அவள் தட்டிக் கொடுத்தாள். உடனே கூட இருந்த பையன்கள் குபீர் என்று சிரித்தார்கள்.

''ஏன் குயிலி! அந்த வண்டியிலே உட்கார்ந்திருந்தயே...எப்படி இருந்தது?''

''ஆ! ஜம் ஜம் என்றிருந்ததுடா. என்ன வேகம், என்ன சொகம். இரண்டு குதிரையில்லே இழுத்தது. குதிரை வண்டியிலே போக நிசமாவே கொடுத்து வைச்சுப் பொறக்கணும்டா.''

''ஏன் அக்கா அந்தக் குதிரை பின்னாலே நடந்திச்சா?''

''இடக்குப் பண்ணிச்சான்னு கேட்கிறியா? அதுங்க போர்ப் புரவிகள் இல்லே? அது பின்னாலே வருமா? மேலே உட்கார்ந்திருக்கிற வீரர்கள் தான் சில சமயம் குதிரையைத் திருப்பிட்டு பின்னாலே வருவாங்க.''

''குயிலியை ஒரு நாளைக்கு ராணியா ஆக்கி விட்டுடணும்டா. அப்ப நாமெல்லாரும் குதிரை வண்டியிலே போகலாம்'' என்றான் சின்னத்தம்பி.

அவன் கன்னத்தில் பளீரென்று ஓர் அறை விழுந்தது. அடித்தவள் குயிலி தான்.

''இதுக்கு நான் ராணியாகணுமோ? உங்களுக்கெல்லாம் குயிலியைக் கண்டா பிடிக்கலே போலிருக்கு'' என்றாள் அவள். அவள் கண்கள்கூடச் சிறிது கலங்கின.

''இல்லேக்கா. உன்னைப் பிரியணும்னு சொன்னான்? வண்டியிலே உட்காரணும்கிற ஆசையிலே அப்படிச் சொன்னான்'' என்றான் மாங்கொட்டை.

''போங்கடா, தம்பி. ஆசையே உதவாது. பின்னாலே உட்கார்ந்ததுக்கே பிடரிலே கைபோட்டான். உள்ளே உட்கார்ந்தா அடி அம்மாடியோ?'' என்றாள் அவள். பையன்கள் இருவரும் சிரித்தார்கள். ''ஏன் அக்கா வண்டி

யிலே உள்ளே உட்கார்ந்திருக்கிறவங்க யாருக்கா? அதைக் கவனிச்சியா?''

''நமக்கேண்டா, அந்தக் கவலே? யாரோ பயந்தவங்க. அதனுல்தான் திரை போட்டு மூடிட்டுப் போருங்க. இல்லாட்டி நம்மைப் போல் சுதந்திரமாக நடந்து போக மாட்டாங்களா?''

''அடேய், அதோ நம்ப குதிரை'' என்று அவள் தன் கண்ணுல் ஓரிடத்தைக் காட்டினுள்.

''ஆம்'' அவர்கள் குதிரை அங்கு நின்றது. ஒருவரல்ல, இருவரல்ல.... எத்தனே பேர்கள் வேண்டுமென்ருலும் ஏறி அமரலாம். அதுதான் கோட்டைச் சுவர். அத்தனே பேர்களும் அங்கு ஓடினுர்கள். குதித்துத் தாவிச் சுவரின் மீது அமர்ந்து கொண்டார்கள். சின்னத் தம்பி தன் டோலக்கை முழக்க ஆரம்பித்தான். குயிலி உட்பட எல்லாச் சிறுவர்களும், இரண்டு தோள்களேயும் குலுக்கிக் கொண்டு பொய்க்கால் குதிரைக்காரர்களேப் போல் சுவரில் அமர்ந்து அவள் வாசிப்புக்கு ஏற்றபடி ஆட ஆரம்பித்தார்கள்.

''அக்கா! இதுலே இருக்கிற சந்தோஷம் அந்த வண்டியிலே இருந்ததா?'' என்ருன் மாங்கொட்டை.

''ஏண்டா, இல்லே! மல்லிகைக் கொடியிலே சிட்டுக் குருவி உட்கார்ந்து ஆடற மாதிரி இருந்ததுடா!''

''தனிக் குருவிதானே ?''

''அது என்னமோ நிசம்தான்.— இப்படி எல்லாரும் உட்கார்ந்திருக்கிற மாதிரி இல்லே.''

''பின்னே ஏன் அதிலே ஏறி உட்கார்ந்தே ?''

''அட, நாஞ உட்கார்ந்தேன் ? கோட்டைக்குள்ளே வரவேண்டியிருந்தது, நின்னுகிட்டே தூங்கற காவல்காரன் இல்லே. நடந்துகிட்டே தூங்கிறவனேயும் காணும். கில்லேதார் மேல் பார்வை பார்க்க வரார்போல் இருக்கு. எல்லாரும் வரிசையாக நின்ருர்கள். ஓர் ஆள் தடுத்திட்டான். நானும் சமாளித்துப் பார்த்தேன். முடியல்லே. வண்டியிலேஏறி நின்னுக்கிட்டு ஏமாத்திஉள்ளே வந்துட்டேன். குதிச்சிருப்பேன். கொஞ்சம் ஆசைப் பட்டுட்டேன். வண்டியிலும் பதவியிலும் ஏறி உட்கார்ந்திட்டா இறங்க மனசு வருமாடா?''

''அவன் அதுக்குத்தான் சாட்டையாலே ஒண்ணு வைச்சான்?''

''என்னடா சாட்டை. தஞ்சாவூர் மண்ணுலே செங்கோலே அடிக்கடி கை மாறுது. இவன் என்னமோ சாட்டைக் குச்சியைச் சதம் என்கிருன்.''

''உஷ்.... அரண்மனே விஷயம். இரைஞ்சு பேசாதே!''



'' என்னோடு கூட வருவதாக இருந்தால் ஹைஹீல்ஸ் ஷூவும் கோபுரக் கொண்டையும் போட்டுக் கொண்டு வரக்கூடாது !''

''ஏண்டா, பயப்படறே? அரண்மனேயான் பேச்சு ஊருக்குப் புரியாது. ஊரான் பேச்சு அரண்மனேக்குப் புரியாது. உன்னேப் போல யாராவது போய்ப் பத்த வச்சாத்தான் உண்டு. எனக்கு வந்த கோபத்திலே குதிரைக்காரனே ஓங்கி ஒண்ணு வைச்சிருப்பேன்.''

''ஆமா, அங்கே அடிக்காம இங்கே வந்து ஏன் பேசறே ?''

''பொம்பளே கையாலே அடிபட்டா ஆம்பளேக்கு அவமானம் என்று விட்டேன்.''

''ஆ, ஆ, ஆ!'' என்று எல்லாப் பையன்களும் சேர்ந்து வேடிக்கையாகக் கூச்சலிட்டார்கள்.

ஏன் குயிலி ''பேச்சுப் புரியாதவன் ஆளுகிருன் என்று உனக்கு மாத்திரம் கோபம் வருதே. இந்த ஊருக்கு ஏன் அது தெரியல்லே?'' என்ருன் கந்தன்.

'' தெரியாமலா இருப்பாங்க ?.... தெரிஞ்சுதான் சும்மா இருக்காங்க. எவன் ஆண்டா என்ன? காவேரியைச் சுருட்டிக் கக்கத்திலே வைத்துக் கொண்டா போகப் போருன்? மண்ணும் மதிலும் அப்படியேதான் நிற்கும். சோழ மகாராஜா ஆண்டபோதும் சோறுதான் சாப்பிட்டாங்களாம். பாண்டியன் வந்த போதும் தூண்டிலேதான் மீன் பிடிச்சாங்களாம். பல்லவன் ஆண்டபோதும் பல்லால்தான் பாக்கைக் கடிச்சாங்களாம். நாயகர் ஆண்டபோதும் நாக்கால்தான் பேசினுங்களாம். மராட்டியர் வந்த பிறகும்

மண்ணுலேதான் விளையுது. ஆற்காட்டான் கலகத்திலேயும் ஆறுலேதான் நீர் ஓடிச்சு.''

''அக்கா, நீ ரொம்பப் பொறுப்பில்லாமப் பேசுறே!''

''உனக்கும் எனக்கும் பொறுப்பு வந்து என்னடா மிச்சம்? உடம்பிலே வலுவுள்ளவங்களுக்கு அல்லவா பொறுப்பு வரணும்? மின்னுமே, இடி இடிக்காம, வீட்டிலே கூரை ஒழுகாமே, எங்கேயோ மழை பெய்தால் இங்கே தண்ணி வருகுது. வேட்டியிலே அழுக்குப் படாம விளையுது. கரிகால மகாராஜா புண்ணியத்திலே காவேரியிலே சோறே வருது. எவன் ஆண்டால் என்ன? இதுக்காகச் சண்டைக்குப் போனா குடியானவனுக்கா பட்டத்தைக் கொடுத்திடப் போறாங்க? எருது பரதேசம் போனாலும் ஏருலேதானே பூட்டுவாங்க. இன்னைக்கு ஏரைப் புடி. நாளைக்கு ஈட்டியைப் பிடி. வெற்றி வந்தாக் கொடியைப் பிடி. கூட நடந்து வா. அவ்வளவுதானே உழைக்கிறவனுக்கு?.... இல்லே, ராசாங்கத்திலே பங்கா கொடுப்பாங்க? இதையெல்லாம் பார்த்துப் பழகித்தான் சும்மா விட்டாப் போதும்னு இந்தச் சீமை மக்கள் எல்லாம் இருந்துட்டாங்க.''

''சின்ன மனுசனுக்குத் தேசபக்தி வந்தால் சிரமமும், சில்லறைச் செலவும்தான் மிச்சம். தடி எடுத்தவனுக்குப் பக்தி வந்தால், தலையிலே கிரீடம் ஏறும்! நமக்கேண்டா ராசாங்கத்துப் பேச்சு. சோளக் கதிர் பசியைக் கிளப்பி விட்டுட்டது. ஏதாவது திங்கணும்டா.''

''காவேரியிலே சோறே ஓடுதுன்னு சொன்னே. இப்ப பசிக்கிறதுங்கறியே. நல்லா இருக்கா'' என்று கந்தன் சொல்லும்பொழுது எங்கிருந்தோ ஒரு மூன்று வயதுப் பையன் வீறிட்டு அலறும் குரல் கேட்டது.

''அழுவாதே, அழுவாதே. உன்னைக் கொன்னு போட்டு விடறேன் பாரு!'' என்று ஒரு மூன்று வயது இளம் பாலகனை ஒருத்தி 'படீர் படீர்' என்று அடித்துக் கொண்டிருந்தாள். இதைக் கண்ட குயிலி தொப்பென்று கோட்டைச் சுவரிலிருந்து கீழே குதித்து அவனை நோக்கி ஓடினாள். அவள் ஓடுமுன் அவள் குரல் அங்கு ஒலித்தது.

''ஏய், நிறுத்தம்மா. ஏம்மா பச்சைப் புள்ளையைப் போட்டு அடிக்கிறே?'' என்று ஓடிப் போய் அவள் கையைப் பிடித்துத் தடுத்தாள் குயிலி.

''என் மகனை நான் அடிக்கிறேன்? உனக்கென்ன இதைப் பத்தி?'' என்று ஆத்திரத்துடன் பதில் சொல்லிவிட்டு அந்தப் புண்ணியவதி தன் கையைக் குயிலியின் பிடியிலிருந்து திமிறி விடுவித்துக் கொண்டு குழந்தையின் முதுகில், ''இனி மேல் கேட்காதே, கேட்காதே!'' என்று சாத்தினாள்.

குயிலியின் கோபம் தலைக்கு மேல் ஏறியது. அவள் நடையில் ஒரு மிடுக்கு உண்டாகியது. அந்தத் தாயின் கையை ஒரு தள்ளுத் தள்ளிவிட்டுக் குழந்தையைத் தன் தோளில் தூக்கிக்கொண்டு, ''என்னம்மா, கேட்டான். உன் மகன்? இந்தத் தஞ்சாவூர்ச் சீமைக்குப் பட்டம் கட்டச் சொன்னானா? என்ன கேட்டான்? எதுக்கு இப்படி அடிக்கிறே? வா, தம்பி, சும்மா இரு. உனக்கு என்னையா வேணும்?'' என்று கொஞ்சினாள்.

குழந்தை தன் அழுகுரலை நிறுத்தி விட்டு அவள் முகத்தைக் களிப்புடன் நோக்கினான்.

''ஆமா. அந்தப் பொண்ணு குடுத்துடும். நீ அழுகையை நிறுத்து'' என்றாள் தாய்.

''என்னடா, தம்பி, அப்படிக் கேக்காததைக் கேட்டுட்டே? சந்திரன் வேணுமா? சூரியன் வேணுமா?''

''அதெல்லாம் வைக்க எங்க வீட்டுலே இடம் ஏது? அவனுக்குப் பசிக்குதாம். அந்தக் கடையிலே விற்கிற புட்டைக் கொண்டா என்று கதறுகிறான்.''

''இதுக்குப் போட்டு அடிப்பியா அம்மா. புட்டுத்தானே தம்பி, — குழாய்ப் புட்டா, சீனிப் புட்டா. என்ன வேணும்? நான் வாங்கித் தாரேன்'' என்று அவனைச் சமாதானப் படுத்திக் கொண்டே அரசமரக் குறட்டின் அடியில் புட்டு விற்கும் கிழவியிடம் போனாள் குயிலி. அவள் மட்டும் சென்றிருக்கலாகாதா? கூடவே அவள் பட்டாளமும் வரவே, கிழவி பயந்து கடையைக் கட்டி விட்டாள்.

''என்ன குயிலி, பழைய பாக்கி குடுக்கலியே?''

''உதிர்ந்த புட்டுதானே கொடுத்தே? பாக்கியையும் புட்டு புட்டுத்தான் தருவேன். ஆமா, ரெண்டு அப்பம் இருந்தால் குடு.''

''அப்பமா, அப்பமே வித்துப் போச்சே. இந்தப் பாரு'' என்று துண்டை உதறி விட்டாள் பாண்டி சீமைக் கிழவி.

குயிலிக்குப் பரிதாபம் தாங்கவில்லை. நேரே நன்னுராவ் மிட்டாய்க் கடைக்கு ஓடினாள்.

''ராவுஜி, இந்தக் குழந்தைக்குப் பசிக்குது. ஏதாவது தின்னக் குடுவே.''


''அட, உனக்குக் குழந்தை வேறே இருக்குதா?'' என்றான் அந்தக் கிண்டல்காரன்.

(தொடரும்)

தமிழ் வலம் வந்த தூதுவர்கள்



Marguerite Barnett





山崎元一

Genichi Yamazaki

ஜனவரி மாதம் நான்காம் தேதிக்குப் பிறகு சுமார் ஒரு வார காலம் வரை சென்னை நகர சேப்பாக்கம் பகுதியில் உள்ள சர்வ கலாசாலை நூற்றாண்டு மண்டபம் பக்கம் போன யாருக்குமே நாம் சென்னையில்தான் இருக்கிறோமா அல்லது ஏதாவது ஐரோப்பிய நாடுகளின் தலைநகரத்தில் இருக்கிறோமா என்ற பிரமை ஏற்பட்டிருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. காரணம் சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் பங்கு கொள்ளச் சுமார் நாற்பது நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். சர்வகலாசாலை நூற்றாண்டு மண்டபத்தில் வளைய வளைய வந்து கொண்டிருந்தார்கள்.

அண்டையில் இருக்கும் இலங்கையிலிருந்தும் எங்கோ இருக்கும் ஆர்ஜெண்டைனாவிலிருந்தும், இந்தோனேஷியாவிலிருந்தும், இத்தாலியிலிருந்தும், கொரியாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் ஜெர்மனியிலிருந்தும், தாய்லந்திலிருந்தும், ஆப்பிரிக்காவிலிருந்தும் பிரதிநிதிகள் ஆர்வத்துடன் வந்து குழுமியிருந்தார்கள். அவர்களில் சிலரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது பல சுவையான செய்திகள் கிடைத்தன.

தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பு, தமிழ் கலாசாரம் முதலியவற்றில் அவர்கள் பெரும் மதிப்பு வைத்திருப்பது பற்றியும் சென்னை நகரத்தின் விருந்தோம்பலைக் கண்டு அவர்கள் பிரமித்தது பற்றியும் அவர்கள் பலருடன் உரையாடியபோது தெரிந்து

கொள்ள முடிந்தது. அவர்களில் சிலரை இப்போது நீங்களும் சந்தியுங்களேன்!

டாக்டர் கார்ல் கெல்லர்

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கு மண்டபத்தில் இளைஞர் போல் சுறுசுறுப்பாக அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்த முதியவர் ஸ்விட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த டாக்டர் கார்ல் கெல்லர். நல்ல உயரம். பின்னால் காற்றில் பறக்கும் கேசம். முகத்தில் எப்போதும் புன்சிரிப்பு. 'வணக்கம்' என்ற சொல்லை லாகவமாக உச்சரிக்கும் தன்மை. லாசேன் சர்வகலாசாலையில் மதங்கள் பற்றிப் போதிக்கும் பேராசிரியர்.

இந்தியாவுக்குப் புதியவரல்ல இவர். சில ஆண்டுகளுக்கு முன் கேரள மாநிலத்தில் வந்து தங்கியிருந்தபோது மலையாள மொழி கற்றார். அப்போதுதான் பேராசிரியர் யேசுதாசன் இவரைத் தமிழுக்கும் அறிமுகம் செய்து வைத்தார். அவ்வளவுதான்! கெல்லரின் ஈடுபாடு திருக்குறளில் ஆரம்பித்துக் கம்பராமாயணம் வழியாகப் பதிற்றுப் பத்தில் புகுந்து நெடுநெல்வாடை வரை சென்றது. லாசேன் சர்வகலாசாலையில் இவர், அராபிக், ஹிப்ரு, மலையாளம், தமிழ் முதலிய மொழிகளைப் போதிக்கக் கூடியவர். இப்போது கன்னட மொழி கற்றுக் கொண்டிருக்கிறார்.

இரண்டே மாதங்கள் இந்தியாவில் குறிப்பாக பெங்களூரில் தங்கிவிட்டுத் திரும்பிய ஒரு மாது ஸ்வீடன் நாட்டுப் பத்திரிகை ஒன்றில் இந்தியாவைப் பற்றித் தரக் குறைவாக ஒரு கட்டுரை எழுத ஆரம்பித்தபோது டாக்டர் கெல்லர் வெகுண்டு எழுந்து அந்தப் பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதினாராம். கட்டுரை தொடராமல் நின்று விட்டது!

''மனிதனுக்கு தர்ம உணர்ச்சியும் பக்தி உணர்ச்சியும் அடிப்படைத் தேவைகள். அவைகளுக்குத் தமிழ் இலக்கியங்கள் வெகுவாக உதவுகின்றன'' என்ற கொள்கையுடைய கெல்லருக்குத் தமிழ் எழுதத்தெரியும்; படிக்கத் தெரியும். சென்னை நகர பஸ்களில் குறள் அடிகள் எழுதப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறார்.

ஸ்டீபன் பார்னெட்

அமெரிக்க நாட்டு இளைஞர். சிகாகோ சர்வகலாசாலை மூலம் எம்.ஏ. பட்டம் பெற்றவர். அந்த எம். ஏ. பட்டத்தையும் இரண்டு சந்தர்ப்பங்களில் சமூக இயலுக்காகவும், வேதாந்த பாடத்துக்காகவும் பெற்றிருக்கிறார். 'டபிள் எம்.ஏ.' பட்டம் பெற்ற இவர் அதே சர்வகலாசாலையில் டாக்டர் பட்டம் பெறுவதற்காகத் தேர்ந்தெடுத்திருக்கும் விஷயம் விசித்திரமானது.

பட்டிண நாகரிகத்துக்கும் தொழில் வள முன்னேற்றத்துக்கும் ஏற்பத் தமிழ் மொழி வளர்ச்சியை எப்படி இணைப்பது என்பதுவே இவர் தேர்ந்தெடுத்திருக்கும் விஷயம். இதற்காக இவர் இன்னும் சில காலம் தமிழ் நாட்டில் தங்கியிருக்கத் திட்டமிட்டிருக்கிறார்.

மேற்கத்திய இசைத் துறையிலும் அரங்க நிர்வாகத்திலும் ஈடுபாடுடைய இவருக்கு, தமிழ் நாட்டில் கவர்ச்சி யளிப்பது மிருதங்க வாத்தியம். மணிக்கட்டை உபயோகப் படுத்திக் குச்சியினால் ஓசை எழுப்பும் 'டிரம்' வாத்தியத்துக்கும் விரல் நயத்தினால் ஓசை எழுப்பும் மிருதங்கத்துக்கும் இடையே உள்ள பாகுபாடுகளைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் இவருக்கு நிறுத்தத் தெரிவதில்லை. திரு பாலக்காட்டு மணி ஐயருக்கு இவர் ஓர் ஏகலைவன் போல.

தமிழர் பாணியில் தட்டாடை உடுத்துவதையும் கரம் கூப்பி வணங்குவதையும் விரும்பும் இவருக்குத் தமிழ் வார்த்தைகளும் பேச வருகின்றது. தமிழில் கையெழுத்தும் போடுகிறார்.

ஸ்ரீமதி மார்க்கொட் பார்னெட்

இவரும் சிகாகோ சர்வகலாசாலையில் எம். ஏ. பட்டம் பெற்று டாக்டர் பட்டத்துக்கு ஆராய்ச்சி செய்ய இந்த இரண்டாம் தமிழ் மாநாட்டை ஒட்டிச் சென்னைக்கு வந்திருப்பவர். தற்கால அரசியல், குறிப்பாகத் தமிழ் நாட்டு அரசியல் ஆராய்ச்சியில் இறங்கியிருக்கும் இவர், திராவிட முன்னேற்றக் கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும் என்பது பற்றிக் கட்டுரை எழுதப் போகிறார். தமிழ் பேசவும் படிக்கவும் கற்றுக் கொண்ட இவருக்கு இன்னும் தமிழ் எழுதும் பழக்கம் வரவில்லை. முதல் தடவையாகப் பாரதத்துக்கு வந்திருக்கும் இவருக்கு வீணை இசையில் அலாதி ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. அதைக் கற்கவும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்.

இவர் கணவர்தான் மிருதங்க அன்பரான திரு ஸ்டீபன் பார்னெட்.

கணவனும் மனைவியுமாக இந்த மாநாட்டுக்கு விஜயம் செய்த பல ஜோடிகளில் இந்த ஜோடியும் ஒன்று.

கெனிச்சி யெமசாக்கி

ஜப்பானிலுள்ள டோக்கியோ சர்வகலாசாலையில் புராதன இந்திய சரித்திரத்தையும் பௌத்த மத வளர்ச்சியையும் பாடமாக எடுத்துப் படித்து பி. ஏ., எம். ஏ. பட்டங்களைப் பெற்ற இளைஞர் கெனிச்சி யெமசாக்கி. இந்தியாவுக்கு இப்போதுதான் முதல் தடவையாக விஜயம் செய்கிறார். ஜப்பானில் அவர் சொந்த ஊர் ஒரு கிராமம்தான். ஆகையால் டோக்கியோ நகரம் அவருக்கு எப்படி வியப்பை அளிக்கிறதோ, அப்படியே சென்னையும் அவருக்குப் பிரமிப்பை ஊட்டுகிறதாம். அவர் அடையாளச் சீட்டில் PH. D (Cand) என்றிருந்தது. 'எந்த சர்வகலாசாலையில் டாக்டர் பட்டம் பெற்றீர்கள்?' என்று கேட்டபோது அவர் சிரித்தார். டாக்டர் பட்டத்துக்குப் படிக்கும் காண்டிடேட் என்பதற்கு (Cand) என்று சுருக்கியிருக்கிறாராம். மிகுந்த சங்கோசப் பேர்வழி. காமிராவில் கலர் பிலிம்களை மாட்டிப் படம் பிடித்த வண்ணமாக இருக்கும் இவருக்கு இந்திய வேதாந்த தத்துவ சாஸ்திரங்களிலும், தமிழ் நாட்டுக் கலைகளிலும் ஈடுபாடு அதிகம் உண்டாம். விரைவிலேயே தமிழ் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டு விடலாம் என்று நம்புகிறார்.

— மேனு

விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு

வலியை அதி வேகமாக வெளியேற்ற

புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'

இப்பொழுது முதன்முதலாக இந்தியாவில் வழங்கப்படுகிறது

வலிதான் எங்கள் பிரச்னை: 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக் கழகத்தில் வலியைப் பற்றிய ஆராய்ச்சிகள் செய்துவரும் விஞ்ஞானிகள் வலியை வேகமாக வெளியேற்றுவதற்கான புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளனர்—அதுதான் புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'.

மைக்ரோஃபைண்ட் என்றால் என்ன? புதியதொரு விசேஷமான செய்முறையின் மூலம், 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள வலிநிவாரணப் பொருளை மேலும் 30 மடங்கு நுணுக்கமாக்கியிருப்பதுதான் மைக்ரோஃபைண்ட் என்கிறோம். இப்பொழுது ஒவ்வொரு மாத்திரையிலும் இந்த வலிநிவாரணப் பொருள்களின் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக் கூறுகள் அடங்கியிருக்கின்றன. இதன் விளைவாக, முன்பைவிட இருமடங்கிற்கும் அதிகமான வலிநிவாரணச் சக்தி, முப்படங்கு வேகமாக இயங்கி வலியைத் துரிதமாக வெளியேற்றிவிடுகிறது.

வேகமாகச் செயல்புரிகிறது—நீடித்த பயனைத் தருகிறது: புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'வில் உள்ள சுறுசுறுப்பாக இயங்கும் வலிநிவாரணப் பொருள், மிகவும் சுலபமாகவும், துரிதமாகவும் இரண்டறக் கலந்து உங்கள் உடலில் 5 முதல் 7 மணி நேரம் வரை தங்கியிருக்கிறது. இதனால் தான் மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' வலியை அதி வேகமாக வெளியேற்றி, நீண்ட நேரம் பயனளிக்கிறது.

உட்கொள்ளச் சுலபமானது: புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'வை வெறும் மாத்திரையாகவோ, தண்ணீரில் கலக்கியோ, ஒரு டம்ளர் தண்ணீருடனோ அல்லது சூடான பானத்துடனோ—எப்படி வேண்டுமானாலும் சாப்பிடலாம்.

கீழ்க்கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: சோர்வு • தலைவலி • உடல் வலி • பல்வலி • மூட்டுவலி • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷம் • ப்ளூ • டெங்கு • தொண்டை அழற்சி.

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் சாப்பிடவும். குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொல்படி.

புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்




ஒரு மாத்திரையில் உள்ள அணுக்கூறுகள் [illegible]



மைக்ரோஃபைண்ட் ஆக இருப்பதனால் புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'வின் ஒவ்வொரு மாத்திரையிலும் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக்கூறுகள் அடங்கியுள்ளன—எனவே, அது மேலும் துரிதமாக இரண்டறக் கலந்து, விரைவில் நிவாரணம் அளிக்கிறது.

புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதிநவீனமான வலிநிவாரணியாகும்.





புதிய மைக்ரோஃபைண்ட் 'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்துவிடுகிறது

நிக்கோலஸ் தயாரிப்பு



மகாபாரதம்

ராஜாஜி

பீஷ்ம சபதம்

தேவ விரதனுக்கு வயது வந்ததும் இவ்வாறு கங்காதேவி அவனைச் சந்தனுவிடம் ஒப்படைத்தாள். ராஜகுமாரனைப் பிரியமாகப் பெற்றுக்கொண்டு சந்தனு ராஜா தன் நகரத்துக்குச் சென்றான். சில நாட்கள் கழித்து அவனுக்கு யுவராஜ பட்டாபிஷேகமும் செய்வித்தான்.

நான்கு வருஷங்கள் சென்றன. ஒரு நாள் ராஜா யமுனையாற்றங் கரைக்குப் போயிருந்த போது அங்கே உயிரைக் கவரும்படியான திவ்விய வாசனை ஒன்று கமழ்ந்தது. இதற்குக் காரணம் என்னவென்று தேடித் திரிய, தேவ கன்னிகையைப் போன்ற அழகிய வடிவம் கொண்ட ஒரு பெண்ணைக் கண்டான். முனிவர் ஒருவரிடம் பெற்ற வரத்தின் பயனாக அவளிடமிருந்து இந்தத் திவ்விய வாசனை வீசி வனம் முழுவதும் நிரம்பிற்று.

ஃ ஃ ஃ

கங்கையை விட்டுப் பிரிந்தது முதல் அதுவரை காத்து வந்த வைராக்கியம் இந்த வாசனை வீசியதும் கரைந்து போயிற்று. அந்தக் கன்னிகையை மனைவியாக அடைய வேண்டுமென்று சந்தனு தாங்க முடியாத விருப்பம் கொண்டான்.

''நான் செம்படவப் பெண். என் அப்பன் செம்படவத் தலைவன். அவனைக் கண்டு சம்மதம் பெறுவாயாக! உனக்கு க்ஷேமம் உண்டாகுக'' என்றாள் அந்தக் கன்னி.

அவள் பேசின பேச்சின் இனிமை அவள் வடிவத்துக்கு ஏற்றதா யிருந்தது.

பெண்ணின் தகப்பனான செம்படவத் தலைவன் மிக்க சாமர்த்தியசாலி.

'' மகாராஜாவே ! பெண்ணாகப் பிறந்த இவளை யாரேனும் ஒருவனுக்குக் கொடுத்துத்தான் தீர வேண்டும். இவளுக்குத் தகுந்த புருஷனும் நீ ஆவாய். சந்தேகமில்லை. ஆனால், எனக்கு ஒரு சத்தியம் செய்து தரவேண்டும்'' என்றான்.

''நீ கேட்பது கொடுக்கக் கூடியதாக இருந்தால் நான் ஒப்புக் கொள்வேன்'' என்றான் சந்தனு.

''இவளிடத்தில் உனக்குப் பிறக்கும் குமாரனை உனக்குப் பின் ராஜாவாகப் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் '' என்றான் செம்படவத் தலைவன்.

மன்மத தாபத்தினால் அதிகமாகத் தகிக்கப்பட்டவனானாலும், செம்படவன் கேட்ட இந்த நிபந்தனையை ஒப்புக் கொள்ள அரசனுக்கு மனம் வரவில்லை. கங்கா புத்திரனான தேவ விரதனை விட்டு விட்டு எவ்வாறு வேறு குமாரனுக்குப் பட்டமளிக்க முடியும்? காரியம் நிறைவேறாமல் துக்கத்துடன் தன் நகரமான ஹஸ்தினாபுரத்துக்குத் திரும்பினான். விஷயத்தை யாரிடமும் சொல்லாமல் மனத்துக்குள்ளேயே வியாகுலப்பட்டு இளைத்துப் போனான்.

ஒரு நாள் தேவ விரதன் தகப்பனைப் பார்த்து, ''அரசனே! உமக்கு எல்லா விதச் சுகமும் இருக்க ஏன் துக்கத்தில் மூழ்கியிருக்கிறீர்? என்ன காரணத்தினால் கவலைப்பட்டு இளைத்துப் போய்க் கொண்டு வருகிறீர்?'' என்று கேட்டு விஷயத்தை ஓரளவு வெளியிடச் செய்தான்.

''பிள்ளாய்! நீ சொன்னபடி நான் கவலையுற்றிருப்பது உண்மை. கவலை யாதெனில், குலத்தில் நீ ஒருவன் தான் புத்திரனாக இருக்கிறாய். நீயோ யுத்தத்துக்கு வேண்டிய பயிற்சியில் எப்போதும் ஈடுபட்டிருக்கிறாய். உலக வாழ்க்கை நிலையில்லை. யுத்தம் நிச்சயமாகக் கிட்டும். உனக்கு ஏதாவது அபாயம் வந்தால் நமது குலம் அழிந்து விடுமல்லவா? நீ ஒருவனே நூறு புத்திரர்களுக்குச் சமமாக இருக்கிறாய். ஆனாலும் சாஸ்திரம் படித்தவர்கள் நிலையில்லா இவ்வுலகத்தில் ஒரு புத்திரன் இருப்பதும் இல்லாமையும் ஒன்றே என்கிறார்கள். நம்முடைய

குலத்தின் பாரம்பரிய க்ஷேமம் ஒரு புத்திரன் உயிரிலேயே தங்கி நிற்பது உசிதமில்லை. சந்ததி கெடாமல் இருப்பதற்காக ஆசைப்படுகிறேன். இதுதான் என் துக்கத்துக்குக் காரணம்'' என்று அரசன் மகனிடம் சொன்னான். முழுக் கதையையும் சொல்லத் தகப்பன் வெட்கப்பட்டான்.

அறிவாளியான தேவவிரதனுக்குத் தகப்பனாரின் மன நிலை தெரிந்துவிட்டது. பிறகு ராஜாவின் சாரதியை அந்தரங்கமாக விசாரித்து யமுனாநதிக் கரையில் நடந்ததைத் தெரிந்துகொண்டான். அதன் மேல் செம்படவராஜனிடம் தானே சென்று அவன் மகள் சத்தியவதியைத் தன் தகப்பனாருக்காகக் கேட்டான்.

செம்படவன் தேவ விரதனுக்குச் சொன்னான் : ''என் மகள் ராஜமகிஷியாவதற்குத் தகுந்தவள். இவளுக்குப் பிறக்கும் குமாரன் ராஜாவாக இருக்க வேண்டுமல்லவா? சந்தனுவுக்குப் பிறகு ராஜ்ய பாலனம் செய்ய நீர் பட்டாபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறீர். இதுவே தடையாக நிற்கிறது. என்னை மன்னிப்பீராக.''

இதைக் கேட்ட தேவவிரதன், ''இவளுக்குப் பிறக்கும் மகன் ராஜாவாக இருப்பான். என் பட்டாபிஷேகத்தை நான் தியாகம் செய்துவிட்டேன் !'' என்று சத்தியம் செய்து கொடுத்தான்.

''பரத சிரேஷ்டரே! ராஜ வம்சங்களில் இதுவரை யாரும் செய்யாததை நீர் செய்து விட்டீர். நீர் வீரர். இந்தக் கன்னிகைக்கு நீரே பிரபு. இவளைப் பெற்ற தகப்பனைப் போல் நீரே அழைத்துப் போய் அரசனுக்குக் கொடுக்கும் அதிகாரியாவீர். பெண்ணின் தகப்பனாகிய நான் சொல்வதைப் பொறுமையுடன் கேட்க வேண்டும். உம்முடைய வாக்கில் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆயினும் உமக்கு உண்டாகும் சந்ததியைப் பற்றி எனக்கு எவ்வாறு நிச்சயம் உண்டாகும்? மகாவீரராகிய உமக்குப் பிறக்கும் மகனும் வீரனாகத்தான் இருப்பான். அவன் ராஜ்யத்தை அபகரிக்கப் பார்ப்பான் அல்லவா ? இதுவே பெண்ணைப் பெற்றவனுடைய சந்தேகம்'' என்றான் செம்படவன்.

இந்தச் சிக்கலான கேள்வியைக் கேட்டதும், தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதே கருத்தாகக் கொண்ட தேவவிரதன் உடனே எதிர்பாராத ஒரு சத்தியம் செய்து தந்தான். ''ஆயுள் முழுதும் நான் பிரமசரிய விரதம் பூண்டு நிற்பேன். என் உயிர் இந்தத் தேகத்துடன் ஒட்டியிருக்கும் வரையில் நான் புத்திரோற்பத்தி செய்யவில்லை'' என்று செம்படவத் தலைவனுக்கு தேவவிரதன் பிரதிக்ஞை செய்து உறுதிமொழி தந்தான்.


தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். ''பீஷ்மன்!'' ''பீஷ்மன்!''



என்று அசரீரி கோஷம் உண்டாயிற்று. ''பீஷ்மன்'' என்றால் அற்புதமான செயலைச் செய்தவன் என்று பொருள். அதுவே அன்று முதல் தேவவிரதனுடைய பெயராயிற்று. அதன் மேல் கங்காபுத்திரன் சத்தியவதியை அழைத்துச் சென்று தகப்பனிடம் ஒப்புவித்துத் தகப்பனை மகிழ்வித்தான்.

சத்தியவதியும் சந்தனுவும் பெற்ற மக்கள் சித்திராங்கதனும் விசித்திர வீரியனும் ஒருவர்பின் ஒருவராக அரசு புரிந்தார்கள். விசித்திரவீரியனுடைய மனைவிகள் அம்பிகை, அம்பாலிகை. இவர்களின் மக்கள் முறையே திருதராஷ்டிரனும் பாண்டுவும். திருதராஷ்டிரனுடைய மக்கள் நூறு கௌரவர்கள். பாண்டுவின் மக்கள் பஞ்ச பாண்டவர்கள்.

பீஷ்மாச்சாரியார் குலத்துக்குத் தலைவராக எல்லோராலும் பூஜிக்கப்பட்டுப் பாரத யுத்தம் முடியும் வரையில் வாழ்ந்திருந்தார்.



அம்பையும் பீஷ்மரும்

சத்தியவதியின் குமாரன் சித்திராங்கதன் ஒரு கந்தர்வனோடு சண்டை செய்து அவனால் கொல்லப்பட்டான். அவனுக்குப் பிள்ளைகள் இல்லாதபடியால் முறைப்படி அவன் தம்பி விசித்திர வீரியனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டது. விசித்திர வீரியனுக்கு வயது வரும்வரையில் பீஷ்மரே ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்தார்.

விசித்திர வீரியன் விவாகத்துக்குத் தகுந்த வயது அடைந்ததும் காசி ராஜாவின் கன்னிகைகளுக்குச் சுயம்வரம் என்று கேள்விப்பட்டு பீஷ்மர் தேர் ஏறிச் சுயம்வர சபைக்குச் சென்றார். ஒருவர் மேல் ஒருவர் போட்டியாகக் கோசலம், வங்கம், புண்டரம், கலிங்கம் முதலிய பல தேசத்து ராஜ குமாரர்கள் சபையில் கூடியிருந்தார்கள். கன்னிகைகள் அழகும், குணமும் உலகப் பிரசித்தியா யிருந்தபடியால் போட்டி மும்முரமாக இருந்தது.

பீஷ்மருடைய புகழ் க்ஷத்திரிய குலத்தில் நிகரற்றிருந்தது. இவர் சுயம்வரத் திருவிழாவைப் பார்த்துப் போக வந்தார் என்றே எல்லோரும் முதலில் எண்ணினார்கள். பெயர்களைக் கொடுத்த போது இவரும் கொடுத்தார். யௌவன ராஜகுமாரர்கள் எல்லோரும் ஏமாற்றமடைந்தார்கள். அவர் சென்றது தன் தம்பி விசித்திர வீரியனுக்காக. ஆனால் இது ஒருவருக்கும் தெரியாது.

''பாரத சிரேஷ்டருடைய அறிவும், படிப்பும் அதிகம். ஆனால் வயதும் ரொம்ப அதிகமாகவே இருக்கிறது. கிழவரான இவருக்கு இந்தச் சுயம்வரத்தில் என்ன வேலை? இவருடைய பிரதிக்ஞை என்னவாயிற்று? ஆயுள் முழுவதும் பிரம்மசாரியாக இருப்பேன் என்று இவர் பொய்ப் புகழா பெற்றார்?'' என்று இவ்வாறெல்லாம் ஏளனமாகப் பேசினார்கள். விவாகத்துக்கு இருந்த மூன்று கன்னிகைகளும் கிழ வீரரைப் பார்த்து விட்டு நிற்காமல் விலகிப் போனார்கள்.

பீஷ்மருக்கு மகா கோபம் பொங்கிற்று. அந்தக் காலத்து மன்னர் குலங்களை ஒட்டிய பண்பாட்டின்படி ''வாருங்கள் யுத்தத்துக்கு!'' என்று சபையிலிருந்த ராஜாக்கள் அனைவரையும் அறைகூவி அழைத்து ஒருவராகவே எல்லோரையும் எதிர்த்து விரட்டி, மூன்று கன்னிகைகளையும் தம் தேர்மேல் ஏற்றிக்கொண்டு, ஹஸ்தினாபுரம் போகப் புறப்பட்டார். சௌபல தேசத்தரசன் சால்வன் மட்டும் விடாமல் துரத்திச் சென்று தடுத்தான். அவனை மூத்த ராஜகுமாரி அம்பையானவள் தன் மனத்தில் வரித்திருந்தாள். சால்வனுக்கும் பீஷ்மருக்கும் கடும் போர் நடந்தது. பீஷ்மர் தனுர்வேதத்தில் கரை கண்ட நிபுணர். சால்வன் தோல்வியுற்றான். ஆனால் கன்னிகைகளின் வேண்டுகோளுக்கிணங்கி, அவனைப் பீஷ்மர் உயிருடன் தப்பிப் போக விட்டார்.

பீஷ்மர் ராஜ குமாரிகளுடன் ஹஸ்தினாபுரம் போய்ச் சேர்ந்தார். விசித்திர வீரியனுக்கு மூன்று பெண்களையும் விவாகம் செய்ய ஏற்பாடுகள் நடந்தன. கல்யாணப் பந்தலில் எல்லாரும் கூடியிருக்கும் சமயத்தில் அம்பை, பீஷ்மரை நோக்கி மெள்ள நகைத்தவாறாக ''கங்கா புத்திரரே! தர்மம் அறிந்த

வரே! நான் சௌபல தேசத்து ராஜாவான சால்வனை என் மனத்தில் புருஷனாகக் கொண்டு விட்டேன். நீர் பலாத்காரமாக என்னைக் கொண்டு வந்தீர். சாஸ்திரம் உணர்ந்த நீர் எவ்வண்ணம் செய்ய வேண்டுமோ அவ்வாறே செய்யும்" என்றாள்.

இவ்வாறு விவாக மண்டபத்தில் அம்பை சொன்னதும் பீஷ்மர் ஆட்சேபணையை ஒப்புக் கொண்டு தகுந்த துணை நியமித்து அவளைச் சால்வ ராஜனிடம் அனுப்பி வைத்தார். அம்பையின் தங்கைகளான அம்பிகை, அம்பாலிகை இருவரையும் விசித்திர வீரியனுக்கு விவாகம் செய்வித்தார்.

ஃ ஃ ஃ

அம்பை சால்வனிடம் சென்றாள். "நீ என்னால் முன்னமேயே வரிக்கப்பட்டாய். பீஷ்மர் என்னை உன்னிடம் அனுப்பி யிருக்கிறார். சாஸ்திரப்படி விவாகம் செய்து கொள்" என்றாள்.



சால்வ ராஜன், "அரசர்களின் மத்தியில் பீஷ்மர் என்னை ஜெயித்து உன்னை வசப்படுத்திச் சென்றார். நான் அங்கீகரிக்க முடியாது. நீ அவரிடமே திரும்பிப் போய், அவர் ஆணைப்படி செய்" என்று சொல்லி அவளைத் திருப்பி அனுப்பி விட்டான்.

ஹஸ்தினாபுரம் திரும்பி வந்து பீஷ்மரிடம் அம்பை விஷயத்தைச் சொன்னாள். "சால்வ ராஜன் அம்பையை வரிக்கவில்லை. நீ இவளை விவாகம் செய்துகொள்ள இப்போது தடையொன்று மில்லையே" என்று விசித்திர வீரியனைக் கேட்க, "வேறு ஒரு புருஷன்மேல் மனம் செலுத்தின ஒரு கன்னிகையை நான் விவாகம் செய்துகொள்ள மாட்டேன்" என்று க்ஷத்திரியப் பண்பாட்டின்படி விசித்திரவீரியன் மறுத்துவிட்டான்.

"எனக்கு வேறு கதி இல்லை. நீரே என்னை விவாகம் செய்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறீர்" என்று அம்பை பீஷ்மரை வற்புறுத்தினாள்.

"என்னுடைய பிரதிக்ஞையை எப்படிப் பொய்யாக்குவேன்? முடியாது" என்று சொல்லி விசித்திர வீரியனை ஒப்புக்கொள்ளும்படி மறுபடியும் பீஷ்மர் வற்புறுத்திப் பார்த்தார். ஆனால், அது முடியவில்லை. அதன்மேல், "நீ சால்வனையே கேட்டுக் கொள்ள வேண்டும்" என்று அம்பையை மறுபடியும் சால்வ ராஜனிடம் போகச் சொன்னார். ஆனால் அம்பை அந்த அரசனிடம் போக வெட்கப்பட்டு பீஷ்மரையே பல வண்ணம் வற்புறுத்தினாள். "நான் போக மாட்டேன்" என்று பீஷ்மர் மனையிலேயே பல ஆண்டுகள் கழித்தாள். ஆனால் பீஷ்மர் ஒப்புக்கொள்ளவில்லை.

பிறகு அம்பை சால்வனிடம் போனாள்.

"மற்றொருவன் ஜெயித்த கன்னியை நான் விவாகம் செய்து கொள்ள முடியாது" என்று அவன் மறுபடியும் சண்டிப்பாய் முன்போலவே சொல்லி விட்டான்.

தாமரைப் புஷ்பம் போல் விசாலமான கண்களையுடைய அம்பை இவ்வாறு ஹஸ்தினாபுரத்திலிருந்து சால்வனிடமும், சால்வனிடமிருந்து ஹஸ்தினாபுரமும் பல தடவைகள் அலைந்து அலைந்து கண்ணீர் சொரிந்தாள். ஆறு வருஷங்கள் சென்றன. அம்பை இதயம் துடித்துத் துடித்து ஒருவிதக் கதியும் காணாமல் வாடினாள். அவளுக்குப் பீஷ்மர் மேல் தாங்க முடியாத கோபம் மேலிட்டது. பல ராஜாக்களிடம் போய் முறையிட்டாள்.

தனக்கு நேர்ந்த அவமானத்துக்காக பீஷ்மரை எதிர்த்துக் கொல்லும்படி ஒவ்வொரு அரசனையும் வேண்டிக் கொண்டாள். பீஷ்மர் என்றால் எல்லோருக்கும் பயம். யாரும் கேட்கவில்லை. பிறகு ஷண்முகப் பெருமானைக் குறித்துக் கடும் தவம் செய்தாள்.

முருகன் பிரசன்னமாகி, அம்பைக்கு ஒரு மாலை தந்தான். "இந்த மாலையை எவன் தரித்துக்கொள்ளுகிறானோ அவன் பீஷ்மருக்குச் சத்துரு ஆவான்" என்று ஆறுமுகன் அம்பைக்கு ஒரு வாடாத தாமரைப் புஷ்ப மாலையைக் கொடுத்தான்.

அம்பை அந்த மாலையைப் பெற்றுக் கொண்டு தன் எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ள ஒவ்வொரு க்ஷத்திரியனிடமும் சென்றாள். "ஆறுமுகக் கடவுள் தந்த இந்த மாலையைப் பெற்றுக் கொண்டு பீஷ்மரைக் கொல்" என்று பலரைக் கேட்டுப் பார்த்தாள். பீஷ்மருடைய விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ள யாருக்கும் தைரியம் வரவில்லை. கடைசியாகத் துருபத ராஜனிடம் போய், அவனும் மறுத்துவிட்ட பின், அவனுடைய அரண்மனை வாயிலில் மாலையைத் தொங்கவிட்டு வனம் சென்றாள்.

பிறகு சில தபோதனர்களிடம் போய்த் தனக்கு நேர்ந்த அவமானத்தைச் சொல்லி முறையிட்டாள்.

"நீ பரசுராமரிடம் போய்க் கேட்டுக் கொள். அவர் உனக்கு வேண்டியதைச் செய்வார்" என்று அவர்கள் யோசனை சொன்னார்கள். அப்படியே செய்தாள்.

பரசுராமர் அம்பையின் கதையைக் கேட்டுக் கருணை கொண்டு "குழந்தாய்! உனக்கு என்ன வேண்டும்? சால்வனிடம் சொல்லி உன்னை விவாகம் பண்ணிக் கொள்ளச் சொல்ல வேண்டுமா? அது என்னால் முடியும்" என்றார்.

அம்பை, "வேண்டாம். பீஷ்மரிடம் நீர் யுத்தம் செய்து அவரைக் கொல்ல வேண்டும். எனக்கு விவாகம் வேண்டாம். பீஷ்மருடைய மரணமே நான் கோரும் வரம்" என்றாள்.

க்ஷத்திரிய சத்துருவான பரசுராமர் பீஷ்மருடன் போருக்குச் சென்றார். யுத்தம் நடந்தது. பீஷ்மரும் பரசுராமரும் சமமான வீரர்கள்; சமமான ஜிதேந்திரியர்கள். யுத்தம் பல நாட்கள் நடந்தது. முடிவில் பரசுராமர் தோல்வியடைந்தேன் என்று ஒப்புக்கொண்டு, அம்பையைப் பார்த்து, "அம்மணி, என்னாலானதை நான் செய்தேன். நீ பீஷ்மரைச் சரணடைய வேண்டியதுதான்" என்றார்.

அம்பைக்குக் கோபமும் துயரமும் தாங்க முடியவில்லை. இமய மலைக்குச் சென்று பரமேசுவரனைக் குறித்துக் கடும் தவம் புரிந்தாள். பரமசிவன் அவளுக்குப் பிரசன்னமாகி, "நீ இன்னொரு பிறப்பு அடைவாய். உன்னால் பீஷ்மர் மரணமடைவார்" என்று வரம் தந்தார்.

காலதாமதமின்றி உடனே மறு பிறப்பு அடைந்து தன் எண்ணம் நிறைவேற வேண்டும் என்பது அம்பையின் ஆசை. சிதையை அடுக்கி அதற்கு நெருப்பு மூட்டி, தீயுடன் தீ கலப்பது போல் கோபத்தினால் ஜ்வலித்த அம்பை அதில் குதித்து மாண்டாள்.

பரமசிவனார் வரத்தின்படி அம்பை, துருபத ராஜனுக்கு மகளாகப் பிறந்தாள். பிறந்த சில ஆண்டுகளுக்குப் பின் அரண்மனை வாயிலில் யாரும் தீண்டுவதற்குப் பயந்து இன்னும் தொங்கிக் கொண்டிருந்த புஷ்ப மாலையைப் பார்த்து, அதைக் கழுத்தில் தானே போட்டுக் கொண்டாள். தகப்பனான துருபத ராஜா, "ஐயோ கெட்டேனே! பீஷ்மருடைய விரோதத்தைப் பெற்றேனே" என்று பயந்து, மகளைத் தன் வீட்டிலிருந்து அப்புறப்படுத்தி வனத்துக்கு அனுப்பி விட்டான். தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அவன் இவ்வாறு செய்தான்.


அம்பை வனம் சென்று தவம் செய்து ஆண் தன்மை அடைந்து சிகண்டி என்கிற வீரனாக மாறிவிட்டாள். அருச்சுனன் சிகண்டியைத் தன் தேர்ப் பாகனாகக் கொண்டு பாரத யுத்தத்தில் பீஷ்மரை எதிர்த்தான். குருக்ஷேத்திரக் களத்தில் பீஷ்மர் வீழ்த்தப்பட்டு அம்பையின் அடங்காத கோபம் தீர்ந்தது. சிகண்டியின் பிறப்பு ஆதியில் பெண்மை என்று பீஷ்மருக்குத் தெரிந்தபடியால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவன் மேல் அம்பு பிரயோகிக்க மறுத்து விட்டார். சிகண்டியை முன்னிட்டுக் கொண்டு அருச்சுனன் பீஷ்மரைத் தாக்கி ஜெயித்தான். பீஷ்மர் மரணம் கிட்டிய தருவாயிலும் தம்மைத் துன்புறுத்திய அம்புகளை ஒவ்வொன்றாக இழுத்து எடுத்து 'இது அருச்சுனனுடைய அம்பு! சிகண்டியினுடையதல்ல!' என்று சொல்லிக் கொண்டு பூமியில் சாய்ந்தார்.

இந்த விஷயம் பின்னால் யுத்த காண்டத்தில் வரும். (தொடரும்)

opening the door to delight!



Delightful eating, that is, J.B. Mangharam's nourishing Energy Food Biscuits provide a treat for mid-morning snacks, afternoon tea, suppertime or anytime you feel the pangs of hunger. Packed in tins or foil-wrapped for freshness. Always keep 'ENERGY FOOD' Biscuits handy.



J.B. MANGHARAM & CO. GWALIOR


The largest National Enterprise producing the widest variety of Biscuits and Confectionery.

சென்னை ஆபீஸ்: தபால் பெட்டி நெ. 1397. 35/37, தம்பு செட்டித் தெரு, சென்னை-1. போன்: 24694

இரு டிரான்ஸிஸ்டர்கள்


G.E.C. யிலிருந்து வருகின்றன

"ஒருசீரான ஒலிச் சிறப்புடன்"



வீட்டிலேயும் சரி, வெளியிலும் சரி—எங்கு வேண்டுமானாலும் இன்னிசையை உங்களிடம் கொண்டுவரும் கச்சிதமான இரு வகை 3—பாண்டு செட்டுகள்.

BC 507: சக்தி வாய்ந்த 8+1 டிரான்ஸிஸ்டர் 3-பாண்டு போர்ட்டபிள் ரிஸீவர், நீள்வட்ட ஒலிப் பெருக்கி உடையது-இரைச்சல் தணிவு-ஒலித் தெளிவு மேம்பாடு-குரல் ஏற்றத் தாழ்வுக் கட்டுப்பாடு-கண்கவரும் கேபினெட். ரு. 328/-, எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. தல வரிகள் தனி.



BC 823: 7+1 டிரான்ஸிஸ்டர் 3-பாண்டு மேஜை மாடல்-இடையறாத குரல் கட்டுப்பாடு-விரிவான அலை வரிசை வீச்சு-பெரிய ஸ்பீக்கர்-தெளிவான பிரதிபலிப்பு-லோ-லேன் மரக் கேபினெட். ரு. 375/-, எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. தல வரிகள் தனி.



G.E.C.

நல்ல ஒலி கேட்கும் உங்கள் உலகம்!
தி ஜெனரல் எலக்ட்ரிக் கோ.
ஆப் இந்தியா பிரை. லிட்..

TRADE MARK GEC - PERMITTED USER:
THE GENERAL ELECTRIC COMPANY OF INDIA PRIVATE LIMITED



''வயிறார உணவு போட வேண்டும் —
வாழும் மனிதருக் கெல்லாம்''

''தனியொருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்''

என்றான் புதுமைக் கவி பாரதி.

''இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றியான்''

என்பது வள்ளுவனின் வாக்கு.

''நீங்கள் விதைக்கிறீர்கள் — அயலான்
அறுவடை செய்கிறான்''

என்றான் ஆங்கிலக் கவி ஷெல்லி.

''தானிய மணிகளை விளைவித்த உழவனின் பசிக்கு அந்தத் தானியம் பயன்படவில்லையானால் தானியக் களஞ்சியங்கள் பொசுக்கப்படட்டும்'' என்று ஆவேசக் கவிதை வடித்தான் இஸ்லாமியக் கவி இக்பால்.

பசி, பட்டினி, பஞ்சம் – மனித குலத்தின் பயங்கரமான பகைவர்கள். மனித குலத்தில் தோன்றிய ஒவ்வொருவரும் வயிறார உண்ண வேண்டும். இந்த உரிமையை மறுப்பது தனி மனிதனின் மிக முக்கியமான அடிப்படை உரிமையை மறுப்பதாகும்.

இந்தப் பேருண்மையை ஐ. நா. சபை பிரகடனப்படுத்தி இருபது ஆண்டுகளுக்குப் பிறகும் வையகத்தின் பல பகுதிகளில் பசிக் கொடுமை, பஞ்சம், பட்டினி.

கடந்த இருபது ஆண்டுகளில் உலகில் விளைச்சல் அதிகரித்திருக்கிறது. விஞ்ஞானம் வேளாண்மைத் துறைக்கு ஏவலாளியாக மாறிற்று. எனினும், உணவு நெருக்கடி உலகுக்குத் தீராத சிக்கலாக உருவெடுத்துள்ளது.

ஒருபுறம் உற்பத்தி பெருகுகிறது. அதே நேரத்தில் விநாடிக்கு விநாடி மக்கள் தொகையும் பெருகிக் கொண்டே வருகிறது. உணவு உற்பத்திக்கும் மக்கள் உற்பத்திக்கும் ஒரு சக்களத்திப் போராட்டமே நடைபெறுகிறது. இதற்கு விடை காண்பதில் விடையின் மூலம் சிக்கலைச் சமாளிப்பதில் இந்தத் தலைமுறையின் முக்கிய கடமையே தொக்கியுள்ளது.

பசிக் கொடுமை, பட்டினியை ஒழிப்பதுதான் இந்தத் தலைமுறையின் அறைகூவலாகும். இந்த அறைகூவலை, இத் தலைமுறையில் சமாளிக்காவிட்டால், மனித சமுதாயத்தை நாசத்தின் விளிம்பிலிருந்து எவராலும் காப்பாற்ற முடியாது.

பட்டினியை, பற்றுக்குறையை, பஞ்சத்தை அனுமதிப்பது உலக சமாதானத்துக்கும், உள்நாட்டு அமைதிக்கும் பேரபாயமாகும்.

இந்த அவசர அவசிய நிலைக்குத் தீர்வு காணத்தான் ரோம் நகரில் உலக உணவு மகாநாடு நடைபெற்றது. 114 நாடுகள் கலந்து கொண்


படம்: ரோம் நகரில் நடைபெற்ற உலக உணவு மகாநாட்டில் அமைச்சர் மதியழகன் பேசுகிறார்.


டன. இந்தியப் பேரரசின் சார்பில் குழுவின் மாற்றுத் தலைவனாகப் பணியாற்றும் பொறுப்பு பெற்று இருபத்தொரு நாட்கள் இத்தாலி நாட்டில் தங்கிப் பலருடன் கலந்து பழகும் வாய்ப்புப் பெற்றேன்.

ரோம் — அந்த வார்த்தைக்குப் பின்னால் எத்தனை சாம்ராஜ்யங்கள் மறைந்திருக்கின்றன. ஜூலியஸ் சீசர், நீரோ மன்னன், மார்க்கஸ் அர்லியஸ், காரகல்லா — இப்படி எத்தனையோ நினைவுகள். ஒரு காலத்தில் சாம்ராஜ்யத்தின் மையமாக இருந்த ரோம் நகரம் இன்று எங்கோ மறைந்தது. உலகின் பல கோடி கத்தோலிக்க மக்களின் லோக குருவான போப்பாண்டவரின் அன்பு ராஜ்யம் இன்று ரோம் நகரிலேதான் உள்ளது. வாட்டிகன் நகரமும் செயிண்ட் பீட்டர் தேவாலயமும் ரோம் நகருக்கு நடு நாயகமாக விளங்குகின்றன.

பழைமையும் புதுமையும் பின்னிப் பின்னிக் கிடக்கின்றன.

மாஜினி, காவூர், கரிபால்டி — இவர்களைப் புதிய இத்தாலியின் தாதிமார்கள் என்று இத்தாலியர் வர்ணிக்கின்றனர். புதிய இத்தாலி — சர்வாதிகாரி முஸோலினியின் இரும்புப் பிடியில் சிக்கிப் பல்லாண்டுகள் தவித்து இன்று மீண்டும் புதிய பாதையிலே நடை போடுகிறது.






படங்கள் : ரோம், வாட்டிகன் காட்சிகள்.

ரோம் நகர வெளி எல்லையிலே உயர்ந்த ஒரு குன்று. குன்றின் உச்சியில் குதிரை மீதமர்ந்த கரிபால்டியின் சிலையை வடித்துள்ளனர். இந்தச் சிலையருகே நின்று பார்த்தால் ரோம் நகரத்தை ஒரே விநாடியில் பார்த்துவிட முடியும். இரவு நேரங்களில் வண்ண விளக்குகளால் நட்சத்திர மண்டலம் போல் காட்சியளிக்கும் ஒளி நகரத்தையும், அந்நகரைச் சுற்றிச் சுற்றி ஓடும் டைபா நதியையும் பார்க்க முடிகிறது.

எத்தனை எத்தனையோ சிலைகள், கோட்டைகள், கொத்தளங்கள், மண்டபங்கள், வெற்றி வளைவுகள், மைதானங்கள், நீரூற்றுக்கள் — அவற்றில் கான்ஸ்டண்டைன் (Constantine Arch) வெற்றி வளைவு புகழ் பெற்றது. சென்னை மாநகராட்சி மன்றக் கட்டடத்தின் சாயலை ரோம் மாநகராட்சி மண்டபத்தில் பார்க்க முடிகிறது.

முஸோலினியின் அலுவலகக் கட்டடம் இன்று கண்காட்சி சாலையாக மாற்றப்பட்டுள்ளது. வெனிஸ் மைதானத்துக்கு அருகேயுள்ள கட்டடத்தின் மேல்மாடியில் பலகணிக்கு வெளியேயுள்ள மாடத்தில் அந்த நாட்களில் முசோலினி வெறிநிறைந்த சொற்பொழிவுகளை ஆற்றுவாராம். அந்த நினைவு இன்று பரிகாசத்துக்குரியதாகிறது.

ரோம் நகருக்கும் இத்தாலியத் தொழில் நகரான மிலான் நகருக்கும் இடையே ஏறக்குறைய நானூறு மைல்களுக்குப் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இத்தாலிய நெடுஞ்சாலை ஓர் அற்புத சாதனை. நானூறு மைல் தூரத்தை நாலரை மணி நேரத்தில் கடந்தேன். அவ்வளவு விரைவான மோட்





டார் கார்கள். பல குன்றுகளை இணைத்த கம்பீரமான பாதை.

மிலான் நகரம்—நமது கோவையைச் சுற்றியுள்ள இருபது மைல் நிலப் பரப்பை நினைவூட்டுகிறது. எல்லாத் தொழில்களின் தலைமை நிலையமாக விளங்குகிறது. மக்கள் மிக மிகச் சுறுசுறுப்பாக உள்ளனர். எங்கும் விரைவு, வேகம். ரோம் நகருக்கு முற்றிலும் மாறான இயல்பு. மிலான் நகர மக்கள் தாங்கள் 'இத்தாலிய நாட்டின் ஜெர்மானியர்' என்று பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். ரோம் நகரின் ஓய்வு, களியாட்டம், மந்தகாசம் இங்கு காணோம். பல தொழிற் சாலைகளைப் பார்க்கும் வாய்ப்புப் பெற்றேன். இங்குள்ள தொழிலாளர்களின் வீடுகள் என்னை மிகவும் கவர்ந்தன. இந்தத் தொழிலாளர்களைக் கண்டு மற்றத் தொழிலாளர்கள் பொறாமைப் படுகின்றனர்.


இத்தாலி நாட்டின் முக்கிய நதி போ நதி. போ நதிக் கரையில் விவசாயச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இரு நாட்கள் போ நதிக் கரையிலுள்ள விவசாய முறைகளையும் பழத் தொழிற் சாலைகளையும், பால் பண்ணைகளையும் பார்வையிடும் வாய்ப்பு பெற்றேன்.

கண்ணுக்கெட்டிய தூரம் திராட்சைத் தோட்டங்கள். ஆப்பிள் பழங்கள் கொத்துக் கொத்தாகக் காட்சியளிக்கின்றன.

காடும் கரம்புமாய்க் கிடந்த பாழ் வெளியில் நிலமற்ற உழவர்களுக்கு நிலத்தை உரிமையாக்கி உற்பத்தியைப் பெருக்கும் முயற்சி நடைபெறுகிறது



பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஓர் அங்குலம் நிலத்துக்குக்கூட சொந்தக்காரனாக இல்லாத குடியானவன் வீட்டில் டெலிவிஷனையும், பியட் காரையும் பார்த்தேன். பத்து ஏக்கர் நிலம் தனக்கு உரிமை யாக்கப்பட்டுள்ளது;



அதற்குரிய பணத்தை முப்பது ஆண்டுகளில் அரசுக்குச் செலுத்த வேண்டும் என்றான்.

பிளாரன்ஸ் நகரம் — இத்தாலியக் கலையின் உறைவிடம் — புகழ்பெற்ற இத்தாலியக் கவிஞன் தாந்தே தொடர்பு கொண்ட நகரம். இந்த நகருக்குக் கலைக் கண்காட்சி என்று மறுபெயரிடலாம். பல நூற்றாண்டுகளாக — ஒப்பற்ற சிற்பிகள், ஓவிய மன்னர்கள் — இந்தத் திருநகரைக் கலைக்கூடமாக மாற்றி இந்நகரை இத்தாலிய மறுமலர்ச்சியின் முன்னோடியாக்கியுள்ளனர்.

பிளாரன்ஸ் நகரில் உள்ள எல்லாப் பொருள்களும் கலை முத்திரை பெற்றவை. மாதா கோவிலின் பித்தளைக் கதவுகளைப் பற்றிக்கூடப் பெருமையாகப் பேசிக்கொள்கின்றனர். இந்த நகரங்களின் மாதா கோவில்கள் சமுதாயகூடமாக இலங்கியுள்ளன. மக்களின் வாழ்வு மாதா கோவிலை மையமாகக் கொண்டு சுழன்றுள்ளது.

பிளாரன்ஸ் நகரில் உள்ள டிரினிட்டி பாலம் பழம் பெரும் பாலங்களில் ஒன்று. தாந்தே, மைக்கேல்ஏஞ்சலோ, ராபியல் போன்ற கலை விற்பன்னர்கள்— பிளாரன்ஸ் நகரின் பொலிவுக்கு அழகூட்டியவர்களே. இந்தக் கலைக் கருவூலத்தை — அற்புதப் படைப்புக்களை — உலகு ஆச்சரியத்தோடு பாராட்டுகிறது.

ஃ ஃ ஃ


வெனிஸ் நகரம் ஒரு விசித்திரபுரி. இயற்கை எழில் கொஞ்சும் கடல் நகரம் — கடலோரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட திட்டுக்கள். திட்டுக்களைச் சுற்றி எங்கும் தண்ணீர். அங்கு மோட்டார் கிடையாது. வண்டி, வாகனம் கிடையாது. ஒரு தெருவிலிருந்து ஒரு தெருவுக்குப் படகிலே தான் போக வேண்டும். ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டுக்குப் பாலத்தின் வழியாகத்தான் போக வேண்டும். நூற்றுக்கு மேற்பட்ட சின்னஞ்சிறு தீவுகளைப் படகுப் பாதைகள் இணைக்கின்றன. மதுரை நகரம் அளவுள்ள வெனிஸ் நகரத்தில் மோட்டார் சத்தத்தையோ, வேறு வாகனங்களின் ஒலியையோ கேட்க முடியாது. நம்முடைய பஸ்கள் போல் அங்கு படகுப் போக்குவரத்து நடைபெறுகிறது. நகருக்கு வெளியே மோட்டார் கார்களை நிறுத்திவிட்டுப் படகு மூலம் தான் நகருக்குள்ளே நுழைய வேண்டும். வெனிஸ் நகரத்துப் பெரிய சீமானானாலும் அவன் வீட்டு வாயிலுக்கு மோட்டாரை எடுத்துச் செல்ல முடியாது. நூற்றுக்கணக்கான படகுகள் வருவதும் போவதுமாய் உள்ளன. ஒரு காலத்தில் வெனிஸ் நகர மாலுமிகள் பகைவருக்கும் கொள்ளைக் கூட்டத்துக்கும் அஞ்சி இத் திருநகரைப் படகுப் பாதைகளாலும், பாலங்களாலும் இணைத்தனர். இந்தக் கடல் நகரம் உலக வாணிபத்தில் சிறந்த தோர் இடத்தைப் பெற்றது. புகழ் பெற்ற மாலுமி மார்க்கோபோலோ வெனிஸ் நகரத்தைச் சேர்ந்தவன்.

புகழ்பெற்ற மாதா கோவிலும், நகர மண்டபமும், மைதானமும் செயின்ட் மார்க் சதுக்கத்தில் உள்ளன. சுற்றிலும் நீலக் கடலால் சூழப்பட்டுள்ள செயின்ட் மார்க் மைதானம் நகரின் மைய இடமாகத் திகழ்கிறது. இந்த மைதானத்தில் எந்த நேரமும் பல்லாயிரக்கணக்கான புறாக்களின் கூட்டம் இருந்து கொண்டேயிருக்கிறது. வெனிஸ் நகரத் தீவுகளில் ஒன்றான லிடோத் தீவு (Lido) இன்று உலகின் நவீன கடற்கரைகளில் ஒன்று. இந்தக் கடற்கரையோரத்தில் ஆயிரக் கணக்கான குளிக்கும் அறைகள் தென்படுகின்றன. ஏராளமான சூதாட்ட விடுதிகள் இங்கு உண்டு. லிடோ தீவு, கேளிக்கை — சூதாட்டங்களின் உறைவிடமாக விளங்குகிறது. இந்த அம்சத்தில் ஐரோப்பாவிலே மிகப் புகழ் பெற்றதாகக் கருதப்படுகிறது. அகில உலகத் திரைப்பட நிறுவனத்தின் தலைமைக் கட்டடம் இந்த எழில் தீவில் உள்ளது.

வெனிஸ் நகரப் படகுகளில் பயணம் செய்வது ஓர் இனிய அனுபவம். நீலக் கடலும், ஓங்கி உயர்ந்த மாடங்களும், வண்ணப் படகுகளும் அமைதியான சூழலும் வெனிஸ் நகரின் அழகுக்கு அழகூட்டுகின்றன.

வெனிஸ் நகரில் இரண்டு நாட்கள் களித்தேன். மணித் துளிகள் வேகமாக உருண்டோடியதாகத் தோன்றியது. காலம் மெதுவாகச் சென்றிருக்கக் கூடாதா என்ற வருத்தத்தோடு வெனிஸ் நகரிலிருந்து விடைபெற்றுக் கிளம்பினேன்.

நான் வெனிஸ் நகரம் சென்ற நாள் பௌர்ணமி தினம். முழுமதி வானக் கடலில். வெனிஸ் நகரப் படகுக் கால்வாய்கள் வெள்ளித் தகடுகளாய்ப் பிரகாசித்தன. வண்ணப் படகில் நகரைச் சுற்றிப் பார்த்த நினைவு நெடுநாளைக்கு என் நெஞ்சத் திரையில் பசுமையாக இருக்கும்.



நீங்களும்
உஷாவும்
அழகிய
மேலாடைகளும்
மேலும் உஷாவின் மூலமாக மிக நேர்த்தியாகவும் அழகிய முறையிலும் ஆர்கண்டி மற்றும் பலரகத் துணிகளில் பாவாடை சட்டைகள் தைப்பதால் உங்கள் குழந்தைகள் விருந்துக்குத் தயாராகி விடுவார்கள்.
அதிக சிரமம் இன்றி குறைந்த முயற்சியில், பலவிதமான டிசைன்களில் தைக்கலாம். அதனால் உங்களுடைய அழகிய உடைகளை உண்டாக்கிக் கொள்ளும் மகிழ்வையும், திருப்தியையும் நீங்கள் அடைவீர்கள்.
உஷா



ஸூபர் ஸ்பீடி — 5.95
நியு ஸென்டர் கோர்ட் — 13.95
Bata
செயல்படும்போது பாதங்களுக்கு!
பாட்டா காலணிகள் செயல்படும்போது பாதங்களின் பாதுகாப்புக்கென்றே தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இவை, பிரதிகூலமின்றி பாதங்களோடு சேர்ந்து செயல்படும் காலணிகள். சௌகரியத்திற்கும் பாதங்களைத் தாங்குவதற்குமான விசேஷத்தைப் பாருங்கள்: குழுக்கல்களையும் பொருத்தமில்லாத ஒலிகளையும் இணைத்துக்கொள்ளக் கூடிய மெத்தென்றிருக்கும் வலிவான அமைப்பும்—பாதம் நன்கு பதிகின்ற உள்பாகமும், காற்றோட்டமுள்ள வலிந்த மேல் பாகங்கள், புறப்பாதம் பொருந்துமிடங்களிலெல்லாம் பலமிருந்ததாகச் செய்யப்பட்டிருக்கின்றன. கட்டை விரல் தாக்குதலிருக்க, உறுதிகொண்ட அதிகமான பாதுகாப்பு. அடிப்பாகமும் குதிகால்களும் வழுக்குதலை எதிர்ப்பவை. உண்மையிலே உறுதியிருந்த சுடர்ற இணைந்த அமைப்பு!
ஹாக்கி — 8.95



சுவையான சர்ச்சைகள்!

சிலை எடுத்துக் கலை வளர்ப்போம்

சென்ற இதழில் கம்பர், ஔவை முதலிய பழம் பெரும் தமிழ்ப் புலவர்களுக்குச் சென்னை கடற்கரையில் சிலைகள் அமைப்பது பற்றி ஸ்ரீமதி ஜெயா அருணாசலம் வெளியிட்ட கருத்துக்கள் குறித்துச் சென்னை நகர சட்டமன்ற உறுப்பினர் திரு ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டோம். அவர் சொல்கிறார்:

முற்காலத்தில் புராண இதிகாசங்களில் வரும் பாத்திரங்களுக்கு — அவர்களின் உருவம் பற்றி எந்த ஆதாரமும் இல்லாவிடினும் — சிலைகள் வடித்து வந்தனர். பின்னர், சரித்திரத்தில் காணப்பெறும் பெருமக்களுக்குச் சிலைகள் ஏற்படலாயின. இதன் பயனாக நமது நாட்டில் ஈடு இணையற்ற முறையில் சிற்பக் கலை வளர்ந்தது. நாளடைவில், நாட்டுக்கு நல்ல தொண்டு புரிந்தவர்களுக்கும், சமுதாயத்தில் ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்த பெருமக்களுக்கும் நினைவுச் சின்னங்கள் என்ற வகையில் சிலைகள் அமைத்தோம். கோயில்களில் உள்ள சிலைகளாகட்டும், சரித்திரத்தில் இடம் பெற்றவர்களின் சிலைகளாகட்டும், அரசியல்—சமூகத் தொண்டு புரிந்த பெரியோர்களின் சிலைகளாகட்டும், நமது சிற்பக் கலையை வளர்க்கவும் இக்கலையின் பெருமையை உலகமெல்லாம் வியந்து பாராட்டவும் வழிவகுத்தன என்பதை மறுப்பதற்கில்லை.

சட்டத்தால்கூடக் கட்டுப்படுத்த முடியாத சில விஷயங்களுக்கு, முன்பு தெய்வ சக்தியைப் பயன்படுத்தினர். 'பாவம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி மக்கள் தீய வழிகளில் செல்லாமலும், அக்கிரமங்கள் செய்யாமலும் தடுத்தனர் நமது முன்னோர்கள். மக்களை நல்வழிப்படுத்தும் ஒரு சக்தியைத் தெய்வம் என்றனர். அதற்குச் சிலை வடித்துக் கோயில்களும் எழுப்பினர். அதன் பயனாகப் பல சிற்பிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் ஏற்பட்டன. மெரினாவில் உள்ள காந்தியடிகளின் சிலை பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். காந்தியடிகள் நம் காலத்தில் வாழ்ந்தவர். அவரை நேரில் கண்டவர்கள், அவருடன் கலந்து பழகியவர்கள் பலர் நம்மிடையே உளர். எனவே குறிப்பிட்ட சிலை நாம் கண்ட காந்தியடிகளின் உருவத்தினின்றும் மாறுபட்டு விளங்குவதை எடுத்துக் காட்டுவதில் தவறென்ன?

புராணங்களில் வருணிக்கப் பெற்றுள்ள கண்ணனையும் கந்தனையும் நாம் யாருமே கண்டதில்லை. ஆனால் கண்ணன் என்றால் கையில் குழல் இருக்கும், கந்தன் கையில் வேல் இருக்கும் என்று கூறப்படுகிறதல்லவா?.... கண்ணன் கையில் ஒரு வேலைக் கொடுத்து இதுதான் கண்ணன் என்றால் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். கந்தன் சிலை கையில் குழலுடன் அமைக்கப் பெற்றாலும் மக்கள் ஏற்கமாட்டார்கள் அல்லவா? கண்ணன் இப்படித்தான் இருப்பான் என்ற மக்களின் கற்பனை உருவத்துக்கு மாறாக இருக்கும் சிலையையே மக்கள் ஏற்கமாட்டார்கள் என்றால், நாம் கண்ட காந்தியடிகளின் உருவத்தினின்றும் மாறுபட்டு விளங்கும் ஒரு சிலைக்குப் பதில் காந்தியைப் போலவே தத்ரூபமாக விளங்கும் ஒரு சிலையை அமைப்பதுதானே முறை? புராண, இதிகாச பாத்திரங்களின் உருவத்தைச் சிற்ப வடிவில் பார்த்துப் பார்த்து அவர்கள் இப்படித்தான் இருப்பார்கள் என்று மக்கள் இன்று நம்புவது போல, ஔவை, திருவள்ளுவர் சிலைகளையும் நாளடைவில் மக்கள் ஏற்றுக் கொண்டு விடுவார்கள். வருங்காலத்தில் திருவள்ளுவர், ஔவையாரின் சிலைகளைப் பார்க்கும் மக்கள், 'உருவம்' பற்றிய சர்ச்சையையே எழுப்ப மாட்டார்கள்.

'சிலைகளை மெரினாவில் அமைத்தால் கடற்கரையின் அழகு கெட்டுவிடும் என்ற வாதம் பற்றி உங்கள் கருத்து என்ன?' என்று கேட்டதற்குத் திரு ஆசைத்தம்பி கூறுகிறார்:

நம் வணக்கத்துக்கு உரியவர்கள், நமக்கு வழிகாட்டியாக விளங்கியவர்கள் முதலிய பெருமக்களுக்குத்தான் சிலைகள் அமைப்போம். அவர்களின் கொள்கைகளைப் பின்பற்றி நாமும் நல்வழி நடக்க வேண்டும் என்பதுதானே இதன் நோக்கம்? எனவே, மக்கள் அதிகமாக நடமாடும் இடத்தில் தானே சிலைகளும் அமைய வேண்டும்? சாலையில் போக்குவரத்து மிகுதியாக உள்ள இடத்தில்தான் 'டிராபிக் போலீஸ்' தேவை. ஓர் உதாரணம் பாருங்கள். இறை வழிபாடு செய்பவர்கள் பிள்ளையாரை முழுமுதற் கடவுள் என்று கூறுவர். கடிதம் எழுதும் போதும் 'பிள்ளையார் சுழி' போடுவார்கள், தொடக்கத்தில். பிள்ளையார் சுழி போட விரும்பாதவர்கள் 'அறிவே துணை' என்றும்

தொடங்குவது உண்டு. பிள்ளையாரின் உருவம் மூளையின் வடிவத்தில் அமைந்தது. எனவே தான் அறிவின் இருப்பிடமான மூளையின் உருவ ஒற்றுமையுள்ள பிள்ளையாருக்கு மக்கள் மிகுதியாகக்கூடும் நாற்சந்திகளும், காவிரிக் கரை, குளக்கரை இவைகளும் இருப்பிடமாக அமைந்தன. கால் இல்லாத மனிதன் மனிதனுக வாழ இயலும். ஆனுல் அறிவின் இருப்பிடமான மூளை என்னும் உறுப்பினை இழந்தவன் மனிதனுக வாழ முடியாதே! அறிவு பாதுகாக்கப்பட வேண்டியதன் தேவையை மக்களுக்கு உணர்த்த வேண்டியே, மக்கள் மிகுதியாகக் கூடும் இடங்களில் மூளையின் வடிவத்தைப் போன்ற பிள்ளையாருக்குச் சிலைகள் வைத்தார்கள் நம் முன்னேர்கள். பிள்ளையார் சிலையினுல் காவிரி படித்துறையின் எழில் பாழாகிவிடும் என்று யாரும் எண்ணவில்லையே? திருவள்ளுவர், ஔவையார் போன்ரேரின் சிலைகளைக் கடற்கரையில் — மக்கள் மிகுதியாகக் கூடுமிடத்தில் அமைப்பதால் கடற்கரையின் அழகு கூடுமே ஒழியக் குறையாது. எதிர்பார்த்த பலனும் கிட்டும். அமெரிக்காவில் கடற்கரையில் சிலைகள் இல்லை என்பதால் நாமும் அதைப் பின்பற்ற வேண்டுமா என்ன?

சிற்பக் கலை வளர இதுபோன்ற சிலை அமைக்கும் முயற்சிகள் பெரிதும் உதவும் என்பது திரு ஆசைத்தம்பியின் அசைக்க முடியாத நம்பிக்கை.

ஒரு கோப்பை காப்பியருந்தியவாறே பேட்டியைத் தொடங்கியவர் நான் விடைபெறுவதற்குள் இன்னெரு கோப்பை காப்பியை ருசி பார்க்க ஆரம்பித்துவிட்டார். 'ஒரு நாளைக்கு நீங்கள் எவ்வளவு தடவை காப்பி.....?' என்று இழுத்தாற் போலக் கேட்டு வைத்தேன்.

''முற்பகலில் குளிப்பதற்குள் ஆறு, ஏழு தடவைகள் காப்பி சாப்பிடுவேன். பிற்பகலில் இரண்டு தடவைகள்தான்!'' என்ருர். இதுவரை சுமார் நாற்பது நூல்கள் எழுதியுள்ளார். திரு ஆசைத்தம்பி அவர்களிடம் எம். எல். ஏ. என்ற வகையில் ரேஷன் கார்டு தேவை முதல் அண்ணன்— தம்பி பாகப் பிரிவினை வரை பல்வேறு காரணங்களுக்காக உதவி கோரி வருகிறவர்கள் பலர். 'தினமும் இரவில் பன்னிரண்டு மணிக்குத்தான் சாப்பிட ஒழிகின்றது' என்று அவர் கூறுவதைக் கேட்டால் சட்டமன்ற உறுப்பினரின் பொறுப்பு எத்தகையது என்பது ஓரளவு விளங்கும்.

— பாணன்

"ஆஹா! போடப்பா, அப்படிப் போடு!"

அவ்வை டி. க. ஷண்முகம் எழுதுகிருர்: 1931ஆம் ஆண்டு. அப்போது நாங்கள் கும்பகோணத்தில் நடித்துக் கொண்டிருந்தோம். திரு எஸ். ஜி. கிட்டப்பா அவர்கள் எங்கள் அரங்கிலேயே — எங்கள் நாடகக் காட்சி அமைப்புகளைக் கொண்டே நடிக்கக்கூடிய வாய்ப்பு நேர்ந்தது. 'நந்தனுர்' நாடகம் நடைபெற்றது. ஏராளமான கூட்டம். கதாகாலக்ஷேபக் கலையில் அந்நாளில் தலைசிறந்து விளங்கிய ஹரிகேசவநல்லூர் முத்தையா பாகவதர் அவர்கள் ஆர்வத்தோடு வந்திருந்தார். வெளியே சிறிதும் இடமில்லாததால் அரங்கின் உட்புறம் அவருக்கு நாற்காலி போடப்பட்டிருந்தது. அன்று எஸ். ஜி. கிட்டப்பா இசை மழை பொழிந்தார் என்றே சொல்ல வேண்டும். ''நாளைப் போகாமல் இருப்பேனே'' என்ற பாடலில் மேல் ஸ்தாயியில் சஞ்சாரம்செய்து கொண்டிருந்தார். பாகவதரை நாங்கள் பார்த்தோம். அவர் மெய்ம்மறந்து ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார். மேலே போர்த்தியிருந்த ''சாதரா''வை விரித்துப் பிடித்துக் கொண்டு, ''ஆஹா, போடப்பா போடப்பா; அப்படிப் போடு. நல்லவேளை, நீ எங்கள் துறைக்கு வராமல் நாடகத்தோடு நிற்கிருயே! நாங்கள் பிழைத்தோம்! ஈசுவரன் உன்னைக் காப்பாற்றட்டும்'' என்றெல்லாம் சொல்லிப் பலவிதமாகப் பாராட்டியதை நாங்கள் பக்கத்திலிருந்து கேட்டோம். திரு எஸ். ஜி. கிட்டப்பா நாடக மேடையை விட்டு, இசைத் துறைக்கு வராமல் இருக்க வேண்டுமே என்று இறைவனை வேண்டிக் கொண்டிருந்த வித்வான்கள் சிலரையும் நான் அறிவேன்!

இது போன்ற சுவையான சம்பவங்களுடன் அமைந்துள்ளது நாடகமும் தமிழிசையும் என்ற கட்டுரை. தமிழிசைச் சங்கம் வெள்ளி விழா சிறப்பு மலரில் இடம் பெற்றுள்ளது. மேலும் இம்மலரில் தமிழிசையின் சரித்திரத்தைச் சங்க காலம் தொட்டு இக்காலம் வரை ஆராயும் கட்டுரைகள், பண் ஆராய்ச்சிக் கட்டுரைகள் முதலியன உள்ளன. இசை ஆர்வமுள்ளோருக்குச் சுவையான விருந்து. ஏராளமான புகைப் படங்களுடன் உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் அழகாக அச்சாகி யுள்ளது.



விலாசம்: தமிழிசைச் சங்கம், சென்னை - 1; விலை: ரூ. 5-00.

வலியா? ஜலதோஷமா?





பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

அமிர்தாஞ்சனம்

உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம், வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கை கண்ட நிவாரணி அது

வலிகளுக்கு: தசை வலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்: சாதாரண ஜலதோஷமானால், மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானால், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம்
கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.



அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி.

am-3769

(பேராசிரியர் நீலகண்டனின் இருப்பிடத்தின் ஹால். நீலகண்டனின் மனைவி பார்வதி கையிலிருந்த தோத்திரப் புத்தகத்தைப் பார்த்து இரைந்து முணு முணுத்தவாறு ஓரத்து நாற்காலி ஒன்றில் உட்கார்ந்திருக்கிறாள். மறுபக்கத்து மூலையில் டீபாயின் மேலிருக்கும் டெலிபோன் மணி அடிக்கிறது.)

பார்வதி (புத்தகத்தைப் பார்த்துக் கொண்டே): சித்ரூபி பரதேவதா பகவதி ஸ்ரீ ராஜ ராஜேசுவரி (எழுந்து போய் டெலிபோன் ரிஸீவரை எடுத்து) பகவதி ஸ்ரீ ராஜ ராஜேசுவரி.... யாரு....? கல்யாணமா? இது கல்யாண சத்திரமில்லே.... புரொபசர் வீடு!.... என்ன சொல்றேன்?.... புரியலே! ஹுஹும்! ஒண்ணும் புரியலே! வச்சுடுங்கோ? (டெலிபோனை வைத்துவிட்டு) இங்கிலீஷிலே இப்படிப் பேசிச் சொன்னா எனக்கென்ன புரியுமாம்? (புத்தகத்தைப் பார்த்து) அம்பா மோஹினி தேவா த்ரிபுவனி ஆனந்த சந்தாயினி......

(நீலகண்டன் பெண் நீலா வெளியிலிருந்து வருகிறாள்.)

நீலா: என்னம்மா, ஆனந்தம்? வாசலிலே நிற்கிற கறிகாய் வண்டிக்காரன் கொள்ளை மலிவு போல விசைக்கு விலையைச் சொல்லிக் கடைசியிலே கிலோவாக நிறுத்திக் காட்டி உன்னை ஏமாத்தியிருப்பான். நீ சாமர்த்தியமாய்க் கறிகாய் வாங்கி விட்டதாக ஆனந்தப் பட்டுக் கொண்டிருக்கிறயாக்கும்?

பார்வதி: நான் அசடுதான்! ஆனால் சமர்த்துக் குழந்தைகளைப் பெற்றுவிட்டதற்காகவாவது ஆனந்தப்படலாமோல்லியோ? ஹுஹும்! (புத்தகத்தைப் பார்த்து) ஆனந்த சந்தாயினி வாணிபல்லவபாணி வேணு முரளி....

நீலா: ஓஹோ! ஐ ஆம் வெரி ஸாரி மதர் ஸ்தோத்திரம் வாசித்துக் கொண்டிருந்தாயா? நீ ரொம்ப நல்லவள்தான். ஆனால் அதற்காகக் காய்கறிக்காரன் உன்னை இப்படியே ஏமாற்றிக் கொண்டிருக்க அனுமதிக்கலாமா? படிக்கற்களைச் சரியாகப் போட்டிருக்கிறானா வென்று பார்க்கலாமே!

பார்வதி: தங்கமாய்ப் பார்க்கலாம்! அப்படித்தான் போன மாசம், சந்தேகப்பட்டு அந்த வண்டிக்காரனையே கேட்டேன்! அவன் சர்வ அலட்சியமா அந்த ஒரு கிலோ படிக்கல்லை எடுத்து என் கையிலே வைத்தான். அது என் கை நழுவி என் பாதத்திலே விழுந்து சரணாகதி அடைந்தது. பாதம் மூணு கிலோ கனத்துக்கு வீங்கிப் போச்சு. அப்புறம் இப்போ தெல்லாம் தள்ளி நின்றேதான் தராசைக் கவனிக்கிறேன்.

நீலா: அட படுபாவி! நீ இதை என் கிட்டே சொல்லவேயில்லையே!

பார்வதி: நீதான் உன் சிநேகிதி கல்யாணத்துக்காகப் போயிருந்தாயே! நல்ல வேளை! நீ வந்து பார்க்கணும்ங்கிறதுக்காக அந்தக் கால் வீக்கம் காத்துக் கொண்டிருக்கவில்லே.

நீலா: பைதிபை...! நீ கல்யாணம்னு சொன்னவுடன்தான் நினைவு வருகிறது.

பார்வதி: எனக்கு உன்னைப் பார்க்கிற போதும் சரி, பார்க்காத போதும் சரி, அதே ஞாபகம்தான்! (பெருமூச்சுவிட்டு) ஹும்!

நீலா: அம்மாவுக்கு 'மூட்' சரியாக இல்லே. அப்புறம் சொல்றேன்.

பார்வதி: மூடுமில்லே, மாடுமில்லே! சொல்ல வந்ததைச் சொல்லி முடி.

நீலா: நான் பஸ்ஸிலே வர்ற போது என் சிநேகிதி வசந்தாவைப் பார்த்தேன்.

பார்வதி: எந்த வசந்தா? காமாட்சியின் பெண் வசந்தாவா?

நீலா: எஸ்! எஸ்! அவளேதான்! அவளோட உறவுக்காரர்களுக்கு அண்ணா ஜாதகம் வேணுமாம். பெண்ணுக்கு அப்பா ஒரு ஐ. ஏ. எஸ். ஆபீஸராம்.

பார்வதி: எனக்கு ஒரு ஐ. ஏ. எஸ். மாப்பிள்ளைதான் முக்கியம்! சம்பந்தியைப் பற்றிக் கவலைப்படலே.

நீலா: நீ என்னம்மா பெரிய அரசியல்வாதி மாதிரி டீயர் டீயர்னு சப்ஜெக்ட் மாத்தறே?.... நான் சொல்ல வந்த முக்கிய விஷயம் என்ன தெரியுமா? அந்த வசந்தா வீட்டிலே, குடியிருக்க வேறே இடம் தேடுகிறார்களாம்.

பார்வதி: ஏன் நீலா! இந்தப் பிளாக்கிலே இரண்டு இடம் இருக்குன்னு சொல்லக் கூடாதோ? காமாட்சி தங்கம்னா தங்கம்! அந்தக் காலத்து மனுஷி.

நீலா: வசந்தா இந்தக் காலத்து மாடர்ன் கேர்ள்! அவள் இங்கு வந்தால் எனக்குப் பொழுது போகும். நான் சொல்லிவிட்டேன். அவர்களும் நிறைய வாடகை கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அவள் அப்பா எங்கேயோ 'டூர்' போயிருக்கிறாராம். அடுத்த வாரம் வந்தவுடன் 'ஹவுஸ் ஓனரை'ப் பார்த்து நிச்சயம் செய்வார்.

பார்வதி: இன்னொரு போர்ஷனுக்கும் யாராவது தெரிஞ்சவா வந்துட்டா நல்லது! ஒண்ணைத்தான் அந்த வங்காளக்காரர் பிடித்துக் கொண்டு விட்டார். பாஷை புரியாதவாளோட இருந்துண்டு என்னாலே பிராணனை விட முடியாது.

(மிரட்சியுடன் டெலிபோனைப் பார்க்கிறாள்.)

நான் இனிமேல் டெலிபோனில் யாரும் கூப்பிட்டால் பதில் சொல்லாமல் இருந்து விட்டுப் போகிறேன்.

நீலா: குளத்தோடு கோபித்துக் கொண்டு யாரோ குளிக்காமலே இருந்தார்களாம்....! போம்மா!.... உனக்கு நான் உடனடியாக இங்கிலீஷ் சொல்லித் தரப் போகிறேன்.



ஒருமைப்பாடு வீடு

பார்வதி: உன்னுடைய வேகத்தைப் பார்த்தா உடனடியாக எனக்கு ஒரு கவுனை மாட்டி ஏதாவது கான்வென்டிலே கொண்டு போய் உட்கார்த்திவிடுவாய் போலிருக்கே !

நீலா: நீ பேசப் பழகிக் கொண்டா போதும். அமெரிக்காவிலிருந்து பாரதத்துக்கு வர நினைக்கிறவாளுக்கு, இங்கே வந்தா சுலபமாக இருக்கட்டும்னு தமிழிலே பேசக் கத்துக் கொடுக்கிறாளாம்? அந்த சிஸ்டம்.....

பார்வதி: எனக்குப் பேச இங்கிலீஷ் சொல்லிக் கொடுத்து அமெரிக்காவுக்கு அனுப்பப் போறியா?

நீலா: யார் கண்டார்கள்? உனக்கும் சான்ஸ் கிடைக்கலாம். எவ்வளவு அழகா நீ, வாசலிலே பூஜை அறையிலே எல்லாம் கோலம் போடுகிறாய்! அது ஒரு கலைதானே ! மாடிசன் அவென்யூவிலேயே மாக்கோலம் போட்டுக் காண்பித்துப் பிரஸ் கான்ப்ரன்லே நடத்துவாய். இப்போ முதலில் இங்கிலீஷ் கத்துக்கோ. டெலிபோனிலே யாராவது கூப்பிடுகிறார்கள். புதிய குரல். இங்கிலீஷிலே பேசுகிறார்கன்னு வைத்துக் கொள்வோம். கூப்பிடுகிறவர்கள் யாருன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா ?

பார்வதி : ஆமா, சொல்லு!

நீலா: 'நீங்க யாருன்னு'தானே கேட்கத் தோன்றும் !

பார்வதி: ரைட்! தெரியாதவாகிட்டே எப்படிப் பேசறது?

நீலா: 'ஹூ ஆர் யூ?' அப்படீன்னு 'நீங்க யாரு ?' அப்படீன்னு அர்த்தம்.

பார்வதி: ஹூ ஆர் யூ?

நீலா: வெரிகுட்! கரெக்டாக உச்சரிக்கிறாயே! இன்னும் இரண்டு மூன்று தடவை அழுத்திச் சொல்லு, பார்ப்போம்.

பார்வதி: ஹூ ஆர் யூ? (வாயிற் பக்கத்திலிருந்து நீலகண்டன் உள்ளே வருகிறார். அதைக் கவனிக்காமலேயே பார்வதி மீண்டும் அழுத்தமாக உச்சரிக்கிறாள்.) ஹூ ஆர் யூ ?ஹூ ஆர் யூ...?

நீலகண்டன் (நாற்காலியில் உட்கார்ந்து): நாசமாய்ப் போச்சு! கால் நூற்றாண்டுக்கு மேலாகவே உன்னோடே குடித்தனம் நடத்திக் குப்பை கொட்டுகிற என்னைப் பார்த்தா 'ஹூ ஆர் யூ?'ன்னு கேட்கிறே !

பார்வதி (திடுக்கிட்டு): ஐயையோ ! நீங்க வந்ததைப் பார்க்கலே! நான் இங்கிலீஷ் கத்துக்கறேன். வேறொன்றுமில்லே.

நீலகண்டன்: ஆரம்பமே ஆர்ப்பாட்டமாக இருக்கே....? நான் யாருன்னு இப்போ நிச்சயப்படுத்திக் கொண்டு விட்டாயா ?


நீலா: போங்கப்பா! சில சமயங்களிலே அம்மா டெலிபோனில் பேசச் சங்கடப் படறாளேன்னு, சின்ன டியூஷன் ஆரம்பிச்சேன்.

நீலகண்டன்: உனக்குப் பொழுது போகலேன்னு அவளை இப்படியா கிண்டல் பண்றது? தமிழ்ப் பண்டிதர், இந்த நாளைய பண்டிதர் இல்லே, அந்த நாளைய மனிதர் இங்கிலீஷ் கற்றுக் கொண்டாராம்.

பார்வதி: எப்படியாம்? சொல்லுங்களேன்.

நீலகண்டன்: அவர் உன் மாதிரி போனில் பேசுவதற்காகக் கற்றுக் கொள்ளவில்லே. சம்பள பிரமோஷனுக்காக. ரொம்பநாளாக ஒரே குறைந்த சம்பளத்திலேயே உட்கார்ந்திருந்தார். வெள்ளைக்கார டி. இ. ஓ.





பள்ளிக்கூடத்துக்கு விஜயம் செய்யும்போது அவரிடம் நேரடியாக மன்றாடும்படி ஒரு நண்பர் யோசனை சொன்னார்.

நீலா: யோசனையோடே இங்கிலீஷூம் சொல்லிக் கொடுத்தாரா ?

நீலகண்டன்: சிம்பிள் இங்கிலீஷ் சொல்லிக் கொடுத்தார். டி. இ. ஓ.வுக்கு ஒரு விண்ணப்பத்தை யாரை விட்டாவது எழுதி வாங்கிக் கொடுத்துவிட்டு அவர் முன்னால் போய் நின்றால் 'உம் வயது என்ன?' என்று சம்பிரதாயமாகக் கேட்பார். அப்புறம் 'எத்தனை வருஷ சர்வீஸ்?' என்பார். கடைசியாக 'உமக்குச் சம்பள உயர்வு அவசியமா?' என்று கேட்பார். வேறு கேள்விகளுக்கு இடமிருக்காது. வெள்ளைக்காரன் அநாவசியமாகப் பேச மாட்டான். அதனாலே பிஃப்டி தர்ட்டி, எஸ், அதாவது வயது ஐம்பது, சர்வீஸ் முப்பது, சம்பள உயர்வு தேவை என்பதற்கான சுருக்க பதில்களை — மூன்றே வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்தார்.

நீலா: ரொம்ப சிம்பிள்தான்!

நீலகண்டன்: ரொம்ப சிம்பிள் விஷயம் தான் ரொம்ப டேஞ்சராகப் போச்சு ! அந்த டி. இ. ஓ. முதல் கேள்வியாக, 'எத்தனை வருஷ சர்வீஸ்?' என்றார். பண்டிதரோ, தாம் வரிசைக்கிரமமாக உருப் போட்டிருந்த வேகத்தில் 'பிஃப்டி' என்றார்! வயதை 'தர்ட்டி' என்றார். ஆத்திரமடைந்த துரை கேட்ட 'உமக்கு மூளைக் கோளாறு?' என்ற மூன்றாவது கேள்விக்கு அழுத்தமாக 'எஸ்' என்று சொன்னார்!

நீலா: வேலை கோவிந்தா!

(டெலிபோன் மணி ஒலிக்கிறது)

நீலகண்டன் (பார்வதியைப் பார்த்து): எடுத்து 'ஹூ ஆர் யூ?'ன்னு கேளேன்.

பார்வதி: உங்க பண்டிதர் கதையைக் கேட்ட பிறகுமா எனக்கு இங்கிலீஷ் பேசப் பைத்தியம்?

(நீலகண்டன் டெலிபோனை எடுக்கிறார்)

நீலகண்டன்: எஸ்! நீலகண்டன் ஹியர்! எஸ்! எஸ்! 99099. கரெக்ட்...... எஸ் ! எஸ்...! ரைட்டோ! வெல்கம்! (டெலிபோனை வைத்துவிட்டு) நாசமாய்ப் போச்சு!....இன்னிக்குத் தூக்கம் கோவிந்தா!

நீலா: யாருப்பா வரப் போகிறார்கள்?

நீலகண்டன்: யாரோ கன்யாலாலாம் ! கொஞ்ச நேரத்துக்கு முன்னாலேகூட போன் பண்ணினாராம். யாரோ சண்டைக்கு வந்து விட்டாளாம்!

நீலா: சரி, சரி! புரியறது! அம்மா பேரை கேஸ்! கன்யாலாலுக்கு என்ன?

நீலகண்டன்: என்னவா ? இந்தப் பிளாக்கிலே ஒரு போர்ஷனுக்குக் குடிவரப் போற ராஜஸ்தான் ஆசாமி! அவருக்கு இன்று இரவு பதினொன்றரை மணிக்குத்தான் கிரகப் பிரவேசத்துக்கான நல்ல வேளையாம். சற்றுத் தொந்தரவாக இருந்தாலும் மன்னித்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

நீலா: சாட்டர்ஜி வந்துட்டார் ! கன்யாலால்ஜீ வரப் போறார்!

நீலகண்டன்: நீலகண்டஜீ இருக்கவே இருக்கிறேன். நீண்ட தாடிஜீ யாராவது வந்து இந்தப் பிளாக்கைப் பூர்த்தி பண்ணட்டுமே...! (போகிறார்கள்) (தொடரும்)

விளையாட்டில் வீராங்கனை




நாலைந்து பெண்மணிகள் ஓட்டப் பந்தய மைதானத்தில் கூடி நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

''என்ன உயரம்! என்ன உயரம் இவள்!''

''அதுதாண்டி அவள் உயரம் தாண்டலில் தேசிய வீராங்கனையாகத்திகழ்கிறாள். 1965ல் பெங்களூரில் 1.55 மீட்டர் உயரம் தாண்டித் தேசிய ரிகார்டை ஏற்படுத்திவிட்டாளே! மூன்று தடவை தங்கப் பதக்கம் பெற்ற பாக்கியசாலி!''

''நாமெல்லாம் எவ்வளவு தான் உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவிகள்தான். லோரட்டா கோமஸைப் பார், பருந்து போல ஜிவ்வென்று உயர்ந்து கோலைத் தாண்டிக் கீழே விர்ரென்று விழும் அழகே அலாதிதான்!''



''பருந்து போல என்ன; பாங்காக்கில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள கோமஸ் விமானமேறியே பறக்கப் போகிறாளாக்கும்!''

''அப்படியா, கோமஸ்! உனக்கு அட்வான்ஸ் பாராட்டுதல்கள்!'' என்று ஒரு தோழி மிஸ் லோரட்டா கோமஸின் கரத்தைக் குலுக்கப் போனாள். ஆனால் அவள் அதை ஏற்றுக் கொள்ளாதது கண்டு அங்குள்ள அனைவருக்கும் ஆச்சரியமாயிருந்தது!

''என்னடி! எங்களது பாராட்டுதல்கள் உனக்குத் தேவையில்லையா?'' என்று ஒருத்தி வினவினாள்.

''கைக்கெட்டியது வாய்க்கு எட்ட வில்லை என்பார்கள்! பாங்காக் போகத் தேர்தெடுக்கப்பட்டும் அந்நியச் செலாவணி நிலைமை எனக்கு 'பாஸ்போர்ட்' தரவில்லை!'' என்றாள் லோரட்டா கோமஸ் வருத்தத்துடன்.

ஃ ஃ ஃ

ஐந்தடி ஏழு அங்குலம் உயரமுள்ள விளையாட்டு வீராங்கனை லோரட்டா கோமஸ் பொன்மலை தொழிற்சாலை போர்மனின் மகள். அவளது நாலு சகோதரர்கள் விளையாட்டுக் கலையில் பூஜ்யமாயிருந்தும் இவள் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்று வருகிறாள். எஸ். எஸ். எல். ஸி. சர்டிபிகேட்டும் உயரம் தாண்டலில் பெற்ற பரிசும் இவள் பெரம்பூர் பெட்டி கட்டும் தொழிற்சாலையில் வேலைக்குச் சேரச் சான்றிதழ்களாகத் திகழ்ந்தன. தூரம் தாண்டல், தட்டு வீச்சு, குண்டு வீச்சு, நானூறு மீட்டர் ஓட்டம், ஹார்டில்ஸ் ஆகிய வற்றிலெல்லாம் தமிழகப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றிருக்கிறாள்!

'''பூ' என்று ஊதினால் காற்றில் பறந்து விடுவதுபோல் ஒல்லியாயிருக்கிறாள் கோமஸ்! அவளுக்குச் சதைப் பற்று போட்டால் நன்றாக இருக்கும்!'' என்று கூறினாள் சக தோழி.

''நான் உயரம் தாண்டலிலிருந்து 'ரிடையர்' ஆகணும்னு ஆசைப்படுகிறாயா? என் ஆசைக் கனவு இன்னும் பாக்கி யிருக்கு!'' என்று பதில் சொன்னாள் கோமஸ்.

''எல்லா விளையாட்டு வீராங்கனைகளுக்கும் இல்லாத திறமை லோரட்டா கோமஸுக்கு இருக்கிறது. வெகு நன்றாக ஐரோப்பிய சங்கீதமும், சினிமா சங்கீதமும் பாடக் கூடியவள். சக விளையாட்டுக் கலைஞர்களுக்கு இவளது சங்கீதக் கச்சேரி 'ஓசி'யில் கிட்டி விடும்!'' என்றார் அறிமுகப்படுத்திய அதிகாரி.

''அதுமட்டுமல்ல; எனக்குச் சமையல் தெரியும்; தையல் கலை தெரியும்; சித்திரக்கலை தெரியும்!'' என்று அடுக்கிக் கொண்டே போனாள் மிஸ் லோரட்டா கோமஸ்.

''இவையெல்லாம் தெரிந்தும் இவளிடம் ஒரு குறை - தன்நம்பிக்கையின்மை; உலகப் போட்டிகளில் கலந்து கொள்ளும் திறமை பெற்ற இவளுக்குத் தன்னம்பிக்கை வளர வேணும்!'' என்றார் விளையாட்டு வீரர் திரு சி. சங்கரன்.

''அதிர்ஷ்டமும் இருக்க வேண்டும் என்று சொல்லுங்கள். சென்னை நேரு ஸ்டேடியத்தில் தேசியப் போட்டியில் உயரம் தாண்டலில் வீராங்கனையாகி, மெக்ஸிகோவில் நடக்கும் உலகப் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்பதுதான் என் ஆசை; கனவு!'' என்று தெரிவித்தாள் லோரட்டா கோமஸ்.

விளையாட்டுத் திறமையைச் சுவாமி அருளினாலும் அந்நியச் செலாவணிக்குப் பூசாரி அல்லவா வரம் தர வேண்டும்!

— குண்டுமணி



ஓநாய்க் கோட்டை
கதை: வாண்டுமாமா
சித்திரம் ரமணி..
2
நிராயுத பாணியாகவும் தோல்வி கண்ட துரோகியைக் கொல்வ- தென்பதுதான் அந்நிகழ்ச்சியின் விதிமுறை. முதல் வீரனின் வாள் முனைக்குத் தப்பிய ஆனந்தனை மற்றொரு வீரன் கேடயத்தால் கீழே தள்ள, மூன்றாவது வீரன் தன் ஈட்டியை ஓங்குகிறான், அவன் உயிரைக் குடிக்க. அப்போது........
நண்பா, சற்றுப் பொறு. உயிர்ப் பிச்சை கேட்கவில்லை, ஓடி ஒதுங்கவில்லை. சுத்த வீரனைப் போல ஒப்புமுறையிலே வாள் வீசிய இவன் யார் என்பதை அந்த முகமூடியை அகற்றிப் பார்த்து விடுவோம். பிறகு உன் ஈட்டி முனை அவனை யமனுலகத்துக்கு அனுப்பட்டும்..
ஐயோ...! இது மங்கள நூரத்து மன்னர் ஆனந்தரல்லவா..?
என்ன..? ஆனந்தரா? வீரத்தின் இருப்பிடமான அவரா? நாட்டுப்பற்று மிக்க அவரா துரோகி?
இருக்காது. இது ஏதோ சூழ்ச்சி...
அண்டை நாட்டு மன்னருக்கு நாம் அளிக்கும் மரியாதையா இது?
விருந்தாளியாக வந்தவருக்கு எத்தகைய அவமானம்?
வஜ்ரகீர்த்தி, வடிகட்டின முட்டாள் நீ! உன் ஏற்பாட்டின் லட்சணத்தைப் பார்த்தாயா? ஆனந்தன் சாகவில்லை. அவனுக்கு ஆதரவும் அனுதாபமும் அதிகமானதுதான் கண்ட பலன். வெறி கொண்ட மக்களிடம் உன்னைக் காட்டிக் கொடுத்து விடட்டுமா?
ஐயோ! மகாராஜா வேண்டாம். இப்படியொரு நிலை ஏற்படுமானால் அதற்கும் தயாராகவே ஏற்பாடு செய்துள்ளேன். என்னை நம்புங்கள்.
என் அன்பார்ந்த மக்களே! எங்கோ, யாராலோ, எப்படியோ தவறு நேர்ந்து விட்டது. ஆனந்தருக்கு நேர்ந்த அவமானத்திற்காக வருந்துகிறேன். இதற்குக் காரணமான நபரைக் கண்டு பிடித்துத் தக்கபடி தண்டிப்போம்.
ஆனந்தா! என் மெய்க்காப்பாளர்கள் உன்னை அழைத்துச் செல்வார்கள். அவர்களுடன் சென்று உடை மாற்றிக் கொண்டு உடனே என் அரண்மனைக்கு வா. உன் விருந்துக்குப் பிறகு செல்லலாம்.
தங்கள் விருப்பப்படியே செய்கிறேன்.


அந்த நிலையிலும் சிம்மவர்மரிடம் சிறிதும் சந்தேகங் கொள்ளாத ஆனந்தன் உடைமாற்றிக் கொண்டு அவரைக் காணச் செல்லுகிறான்.
ஆனந்தா, சதி கண்டு பிடிக்கப்பட்டது. உன்னைக் கடத்தி, முகமூடி அணிவித்து, துரோகியாக்கிக் கொரிக்கை மைதானத்திலே கொண்டு வந்து நிறுத்தும்படி தன் ஆட்களுக்குக் கட்டளை பிறப்பித்து எழுதிய கடிதம் இதோ. இதைக் கண்டு பிடித்த பெருமைக்குரியவன் வஜ்ரகீர்த்திதான்.
யார் அது என்றறியலாமா?
விஜய சிம்மன்..
விஜய சிம்மரா? அவர் என் மதிப்புக்குரியவரல்லவா? என் மீது பகை கொள்ளக் காரணம்?
பொறாமைதான். உன் புகழில் ஏற்பட்ட புழுக்கம். ஒருவேளை இதிலே நீ தப்பிவிட்டால் என்ன செய்வதென்று இன்னுமொரு கொடிய செயலையும் கூட செய்திருக்கிறான். சொல்லவே நெஞ்சு நடுங்குகிறது.
சொல்லுங்கள் அரசே! இப்போது நடந்ததைவிடவா கொடுமை?
உன் அருமை மனைவி – ரூபமதியை.
ஆ..! ரூபமதிக்கு என்ன அரசே? சொல்லுங்கள்...
நேற்றிரவு. காவலர்கள் உறங்கிவிட்ட நேரம். நீயும் இல்லை. யாரோ அழைக்கும் குரல் கேட்டு ரூபமதி தனித்துக் கையில் ஒரு தீவட்டியுடன் வாசலுக்கு வந்திருக்கிறாள்....
அந்த இருளிலே வாசலில் நின்றவனைக் கண்டதும் அப்படியே மயங்கி விழுந்து விட்டாள். நினைவிழந்த அவளைத் தூக்கிக் கொண்டு முக்காடிட்ட அந்த – உருவம் இருளில் மறைந்து விட்டது..

புதிய
டினோபால் எகானமி பேக்



மேலும்,
'வாளிக்கு ஒரு பாக்கெட்'
மற்றும் 'ரெகுலர் பேக்'

**பளிச்சிடும்
வெண்மைக்கு
—டினோபால்**

® டினோபால் என்பது
ஜே. ஆர். கெய்கீ எஸ். ஏ.,
பால், ஸ்விட்ஸர்லாந்து அவர்களின்
ரெஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்காகும்

சுஹ்ரத் கெய்கீ லிமிடெட், பம்பாய்-1

shilpi SGT 31 A/67 Tam

ராம்தீர்த் பிரஹமி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1) (ரிஜிஸ்டர்டு)



இலவசப் பரிசு! 1968-ம் வருடத்திய கவர்ச்சிகரமான காலண்டர்

ராம்தீர்த் பிரஹமி ஆயில் பெரிய பாட்டில்ஒன்றோ அல்லது சிறிய பாட்டில்கள் இரண்டு வாங்குபவர்களுக்கு அழகிய, கவர்ச்சிகரமான 1968-ம் வருடத்திய காலண்டர் ஒன்று இலவசப் பரிசாக அளிக்கப்படும் உங்கள் அருகாமையிலுள்ள ஸ்டோரில் இன்றே வாங்கி அதற்கான இலவசப் பரிசையும் பெறுங்கள்.

யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளவாறு ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்கியமாக வாழ்வீர்கள்.

விலை ரூ. 3. (தபால் செலவு உள்பட)

SHRI RAMTIRTH YOGASHRAM
DADAR - BOMBAY-14

மதராஸ் டிப்போ : 25, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ் - 3
போன் : 34258

எமது சென்னை ஆபீஸில் யோகாசன வகுப்புகள் நடத்தப்படுகின்றன

இலங்கைக் கடிதம்

கொழும்பு, டிசம்பர் 25உ.

சென்னையில் சங்கீத விழா வழக்கமான உற்சாகத்துடன் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே நேரத்தில் கர்நாடக இசையை வளர்க்க இலங்கையில் ஒரு சிறந்த ஸ்தாபனம் தோன்றியது. சங்கீதத்தையும் பரத நாட்டியம் போன்ற நளினக் கலைகளையும் ஸ்தாபன ரீதியாகப் போதிக்க ஒரு சங்கீத சபை இங்கு உதயமாகியிருப்பது இதுவே முதல் முறை. கர்நாடக இசை பயில வேண்டுமானால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்குப் போக வேண்டும், பரதம் பயில வேண்டுமானால் அடையாறு போக வேண்டும் என்ற நிலையை மாற்றிக் கொழும்பிலேயே இவற்றைப் பயிற்றுவிக்கச் சகல வசதிகளையும் செய்து கொடுப்பதுதான் கொழும்பு மாநகரில் புதிதாகத் தோன்றியுள்ள இலங்கைச் சபையின் இலட்சியமாகும்.

திருமுருக கிருபானந்தவாரியார் சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பொழுது இந்தச் சபையின் அங்குரார்ப்பண விழாவை மங்களமாக நடத்தி வைத்தார். முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதியரசர் திரு பி. ஸ்ரீஸ்கந்த ராஜாவைத் தலைவராகவும், சமாதான நீதிபதி திரு கே. நாகலிங்கத்தை உபதலைவராகவும், திரு கே. ராஜப்பனைக் கௌரவக் காரியதரிசியாகவும் கொண்ட இந்தச் சங்கீத சபையின் வருங்காலம் மிக மிகச் சிறப்பாக அமையும் என்பதற்குச் சான்றாக இச்சபையின் முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்துவது திரு கௌரி ராஜப்பன் என்று சொன்னால் போதுமானது. அவரது கச்சேரிகள் எங்கு நடந்தாலும் மக்கள் அதை ரசிக்கத் திரளாகக் கூடுவது ஒன்றே அவருக்கு இலங்கையில் இருக்கும் செல்வாக்குக்கு ஒரு சான்று. திரையிலும் மேடைகளிலும் வானொலியிலும் பல முறை பாடி ரசிகர்களின் பேராதரவைப் பெற்றவர் அவர். நல்ல குடும்பத் தலைவியாக விளங்கி அழகியதொரு குழந்தையின் நலனைக் கவனிக்கும் தாயாக இருப்பினும் இசைக் கல்லூரியின் வெற்றியில் ஆர்வம் கொண்டு தமது ஒவ்வொரு நிமிட ஓய்வையும் அதற்காகவே செலவிட்டு வருகிறார். பொருளாதார, வசதியற்ற குழந்தைகளுக்கும் நல்ல முறையில் பாடக் கற்றுக் கொடுத்து மகிழ்விக்க வேண்டும் என்பதுதான் தமது ஜீவிய லட்சியம் என்கிறார் அவர். அவருடைய இந்த மேலான முயற்சிக்கு இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

வேலைநிறுத்த விஷ ஜுரம்

கடந்த சுமார் முப்பது தினங்களாக நடைபெற்று வந்த தந்தி தொலை பேசிப் பகுதி இயக்குநர்களின் வேலைநிறுத்தம் ஒரு விதமாக இவ்வாரம் முடிவுக்கு வந்து அவர்கள் வேலைக்குத் திரும்பி விட்டார்கள். கடந்த ஒரு மாதகாலமாக இலங்கைக்கும் வெளி உலகுக்கும் இடையிலும் இலங்கைக்குள்ளேயும் டெலிபோன் தந்தித்தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டிருந்தன. இதனால் மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் ஏற்பட்ட இடைஞ்சல்கள் சொல்லத் தரமன்று. அவர்களுடைய கோரிக்கைகளை ஆராய அரசாங்கம் ஒரு கமிட்டியை உடனடியாக நியமிக்குமென்று உறுதி கூறப்பட்டதின் பேரில் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்திருக்கிறது. ஆனால் நாட்டிலே இன்று பல துறைகளிலும் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கொழும்பு நகரில் மட்டும் இருபத்திநான்கு பெரிய வர்த்தக ஸ்தாபன ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஜனவரி முதல் வாரத்தில் பொது வேலைநிறுத்தத்தை நடத்த இடதுசாரி யூனியன்கள் திட்டமிட்டுத் தீவிரமாக வேலை செய்து வருகின்றன. அந்தச் சமயத்தில் பொதுஜனக் கொந்தளிப்பு ஏற்படுமானால் அதைச் சமாளிக்க அரசாங்கமும் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது.

அரசாங்கத்தைக் கவிழ்க்கும் ஒரே இலட்சியத்துடன் நடக்கும் அரசியல் வேலை நிறுத்தங்களுக்கே இடதுசாரிகள் வித்திட்டு வருகிறார்கள் என்பதை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். நல்ல வேளையாக இந்த அரசியல் சதியில் சிக்காமல் திரு எஸ். தொண்டமான் தலைமையில் உள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தப்பிவிட்டது திருப்தியைத் தருவதாக இருக்கிறது. கடந்த இருபதாம் தேதியன்று திரு தொண்டமான் ஏழு லட்சம் தோட்டத் தொழிலாளர்களை ஒரு பெரிய வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதாக இருந்தார். இலங்கை ரூபாய் மதிப்புக் குறைப்பையொட்டி இதர துறைகளிலுள்ள ஊழியர்களுக்கு அரசாங்கம் கணிசமான அளவு விசேஷப் படியை அளிக்க வேண்டுமென உத்தரவிட்டிருக்க, தோட்டத் தொழிலாளரின் தினச் சம்பளத்தில் பதினைந்து சதத்தை மட்டுமே கூட்டியது. இதை ஆட்சேபித்தே திரு தொண்டமான் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவிருந்தார். ஆனால் கடைசி நேரத்தில் தோட்டத் தொழிலாளரின் விசேஷப் படியை இரண்டு மடங்காக அதிகரிக்க அரசாங்கம் சம்மதித்தது. அம்மட்டல்ல, இதுவரை வர்த்தக வட்டார ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கும்போதெல்லாம் தோட்டத் தொழிலாளரைப் பற்றி நினைப்பதேயில்லை. இப்பொழுது இதர துறைத் தொழிலாளருக்குச் சம்பள உயர்வு அளித்தால் அப்பொழுது தோட்டத் தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வு அளிக்க வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இது திரு தொண்டமானுக்குப் பெரிய வெற்றி. நாட்டின் பொதுநலனை முன்னிட்டு நெருக்கடியான இந்த நேரத்தில் வேலைநிறுத்தம் செய்யாமல் விட்டதற்காக அவரை அரசாங்கமும் மற்றவர்களும் வாயார வாழ்த்துகிறார்கள். — ரஜனி

முகத்தைப் பார்த்தவுடனேயே சுரேஷுக்குத் தெரிந்துவிடும் ஆசாமி வலையில் விழக் கூடியவரா இல்லையா என்று. சும்மாவா? இந்தத் 'தொழிலில்' அவனுக்கு ஒன்பது வருட அனுபவம் இருந்ததே! ஆரம்ப நாட்களில் அசட்டுப் பிசட்டென்று கொஞ்சம் தடுமாறத்தான் செய்தான். அண்ணன் ஜமீல் எப்படி அவ்வளவு கணக்காகக் கல்லடிக்கிறான் என்று வியந்து வாடின நாட்கள் எத்தனையோ? ஒரு தடவை 'மைனர் செயின்', செண்ட் மணக்கும் சில்க் சட்டை, பச்சைப் புகைக் கண்ணாடி, தழையத் தழைய உடுத்த பட்டுக் கரை வேஷ்டி, தகதகவென்று மின்னின சிங்கப்பூர் சப்பல்கள் முதலிய அலங்காரங்களுடன் கூடிய ஒரு பேர்வழியை



காமன் கணை தொடுக்கும்

ஜி. எஸ். பாலகிருஷ்ணன்

'ஜாலி நபர்' என்று தப்பாகக் கணக்கிட்டுப் போய் எவ்வளவு 'பேஜாரா'யிற்று தெரியுமா? போலீஸ், கிலீஸ் என்று என்னென்னவோ பயமுறுத்தினர் அவர். அவருக்கு மனைவி இருந்தாளாம். பர ஸ்திரீகளைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டாராம்! எப்படியிருக்கிறது கதை?.....இன்று பட்டை பட்டையாக விபூதி இட்டுக் கொண்டிருந்தாலும், இதயத்தின் மூலையிலே எங்காவது களங்கம் ஒட்டிக் கொண்டிருந்தால்கூடக் கண்டுபிடிக்கும் அளவுக்குத் திறமை வளர்ந்திருந்தது.

பாழாய்ப் போன ரயில் இன்னும் வந்த பாடில்லை. ஜமீல் வேறு 'மப்ளரை' முண்டாசாகக் கட்டிக் கொண்டு போட்டிக்கு ஆஜராயிருந்தான். அவனது இன்றையத் தோற்றத்தைக் கண்டால் அநுபவசாலிகள்கூடக் கிட்ட நெருங்கத் தயங்குவார்கள். பூனைக் கண்ணையும், புலிச் சட்டையையும் (அந்த நாசமாய்ப் போன தாயத்தையாவது தூக்கி எறியக் கூடாது?) முகத்தில் வழிந்தோடிய ரௌடிக் களையையும் கண்டால் யார் மனம்தான் கலங்காது? ஆசை காட்டி அழைத்துப் போய், நாலு அறை தந்து அனுப்பி விடுவானோ என்று யாரேனும் அநுமானித்தாலும் வியப்பதற்கில்லை.

....வருகிற ஆசாமிக்குத் தெரியுமா, அவன் வடிகட்டின இளிச்சவாயனென்று? ஆம்! அவன் சுத்த இடியட்! தொழிலுக்கு வந்த புதிதில் சுரேஷுக்கு இதெல்லாம் எங்கே தெரியும்? ஜமீல் ஏதோ மலையைப் புரட்டுவதாக எண்ணிக் கொண்டிருந்தான்.

தன்னுடைய ஆடை அலங்காரத்தை ஒரு தடவை நோட்டம் விட்டு அகமகிழ்ந்தான் சுரேஷ். ஆங்கிலோ – இந்திய மிஸ்ஸி தந்த தொப்பி. சிங்கப்பூர் கலர் கைலி. அழுக்காயிருந்தாலும் டெரின் சட்டை டெரின் சட்டைதானே? கையிலே சிகரெட்! மடப்பயல் ஜமீலாட்டம் துண்டுப் பீடியில்லை! வாயிலே நாலு 'இங்கிலீஷ்' வார்த்தைகள்!

அகால வேளையில் வந்து தொலையும் வண்டிகளை நம்பித்தான் அவன் தொழில் நடந்து கொண்டிருந்தது. ஹோல்டாலும், கூஜாவும், டிபன் காரியருமாக இறங்கி வருகிறவர்களைக் கண்டால் அவனுக்கு ஒரே கொதிப்பு; கசப்பும்கூட. அதே போல் இளம் மனைவி மீது இடித்துக் கொண்டு சல்லாபம் செய்தபடி நடந்து வரும் வாலிபர்களைக் கண்டாலும் எரிச்சல். தன் தொழிலுக்கு உதவாத

வர்களை யெல்லாம் ரயில்வே நிர்வாகம் ஏன் பிரயாணம் செய்ய அனுமதிக்கிறது என்றுகூட அவன் எண்ணுவதுண்டு. ஏதோ மிடுக்காக நடை போட்டு வரும் காளைப் பருவத்தினரை நம்பித்தான் அவன் வயிறு வளர்த்தான் என்று எண்ணுவது தவறு. நடுத்தர வயதினரும், நாடி செத்தவர் களும்கூட அவன் உதவியை நாணமின்றி நாடியிருக்கிறார்கள். ஏன், ஒன்றும் தெரியாத, மீசைகூட இன்னும் சரிவர முளைக் காத 'பிஞ்சுப் பிள்ளை'கள்கூடப் 'புது அனுபவம்' தேடும் ஆர்வத்தில் அவனை அணுகியிருக்கிறார்கள். திரும்பிப் போகையில் அவர்கள் முகத்தைப் பார்க்க வேண்டுமே! அதில் தேங்கி வழிந்தது ஏமாற்றமா, அருவருப்பா, பயமா.... இல்லை, எல்லாம் கலந்த 'அவியல்' உணர்ச்சியா என்று யாருக்குத் தெரியும்? அதை ஆராய்ந்து கண்டு பிடிப்பதால் எவருக்கு என்ன பயன்?

அதோ கைகாட்டிக்குப் பக்கத்திலே ரயில் வந்து விட்டது. பெட்டிகள் எல்லாம் ஒரே ஈரமாக இருப்பதிலிருந்து பக்கத்து ஊரில் எங்கேயோ மழை பெய்திருக்கிறது என்று அனுமானிக்க முடிந்தது. ஜமீல் தன் தாயத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

அப்பாடிச் செய்தால் தொழிலில் பிரமாத வெற்றி கிடைக்கும் என்று சொல்லி யிருந்தாராம் அதை விற்ற பக்கிரி. சுரேஷ் சிகரெட்டைக் கொளுத்தி நாலு இழுப்பு இழுத்தான். சுறுசுறுப்புப் பிறந்தது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது. இரண்டு தரம் குஷியாகச் சீட்டியடித்தபின், பிரயாணிகள் வெளியேறும் கதவருகில் போய்த் தவம் கிடந்தான்.

முதல் முதலில் வெளியே வந்தவர் ஒரு மொட்டைச் சாமியார். விட்டுத் தள்ளு. அடுத்தபடியாக ஒரு பெரிய குடும்பம். தொடர்ந்து இன்னொன்று. டென்னிஸ் மட்டையும் கையுமாக வரும் இந்தப் பிள்ளைக்கு அநேகமாக உள்ளூரில் வீடு இருக்கும். விடுமுறைக்கு வருகிறவனாக இருப்பான். இந்த வயதான பாட்டியை இப்பொழுது யார் அழைத்தார்கள்? சனியனுக்குச் சாவதற்கு என்ன? போ....போ.... அடுத்தபடியாகச் சில சிப்பாய்கள்.... இந்த மூக்குக் கண்ணாடி வாத்தியாரம்மாவாகத் தான் இருக்கும்... போம்மா சீக்கிரம்.....



எழவு இந்தச் சாமான் வண்டி வேறே, பிழைப்பைக் கெடுத்துக்கிட்டு.... இந்த 'மைனரை'க் கொஞ்சம் ஆழம் பார்ப்போமா? பெரிய நம்பிக்கையில்லே.

''என்ன ஸார்.... ரூம் தேடறியா 'மேன்' ஊருக்குப் புச்சா.... இப்படி வா ஸாரு.... நான் ஒஸ்தி எடம் புடிச்சுத் தரேன் பிரதர்.... வாடகை குறைச்சல். மின் விசிறி..... பாத்ரூம்.... ஸ்பிரிங் கட்டில். எல்லா வசதியும் இருக்கு ஸார்....'' என்று அடுக்குகையில் 'எல்லா' என்ற வார்த்தையில் பைய ஓர் அழுத்தம் கொடுத்தான். தொடர்ந்து, விஷமத்தனமாக, தங்கப் பல் தெரிய அர்த்த புஷ்டியுடன் கனைத்தான்.... கண்ணைச் சிமிட்டினான். ஊஹூம்! அந்தப் பாழாய்ப் போன 'மைனர்' எதையும் காதில் போட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. 'டாக்ஸி'யைப் பார்த்து ஓடி விட்டார். பிரமன் இந்த 'நல்ல பிள்ளை'களை எல்லாம் ஏன்தான் படைத்தாரோ? தூரத்தில் நின்று கொண்டிருந்த ஜமீல், தனக்கு 'ஒன்றும் அகப்படவில்லை' என்று சைகை காட்டினான். மனம் கசந்தது ; உடல் வேறு தள்ளாடிற்று.

'வெயிட்டிங் ரூம்' வெறிச்சென்றிருந்தது. சில பிச்சைக்காரர்கள் ஒரு மூலையில் துண்டை விரித்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். ரயிலடி நாய் எச்சில் தொட்டிக்குப் பக்கத்தில் படுத்தபடி மோனத் தவம் இயற்றிக் கொண்டிருந்தது. பிளாட்பாரச் சிப்பந்திகளின் பூட்ஸ் ஒலி மட்டும் அவ்வப்போது கேட்டது. ''ஏம்பா, சுரேஷ், உனக்கு வேணுமா அந்தக் குருட்டு கிராக்கி?'' என்றான் கூலிப் போர்ட்டர் சங்குப்பிள்ளை.

''என்ன அப்பேன் உளர்றே? குருட்டுக் கிராக்கின்னு என்ன அர்த்தம்?''

''உனக்குத் தெரியாது? நிஜமாகவே தெரியாதா? கதை விடாதே....அடே அந்தப் பயல் ஜமீலைக் கேட்டுப் பாரு; நிறையச் சொல்வான். நாலு வாரமா அவன்தான் அந்தக் குருட்டுப் பயலைக் கூட்டிப் போறான். கண் போனபின் ஏன் இந்தக் கண்ணறாவி என்பதுதான் புரியவில்லை..... இந்தத் தடவை 'ஜமீலோடே என்னை அனுப்பாதே. வேறு ஆள் பிடி'ன்னு அவன் கத்தறான். நீதான் கூட்டிப் போய் உன் ரூபாரவைக் காட்டேன். ரூபாயாக் கொட்டும்.''

இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் குருடன்' என்று வர்ணிக்கப்பட்ட அந்த ஆசாமி, சிறுவன் ஒருவன் தோளைப் பற்றியபடி அருகில் வந்து விட்டான்.

''சவத்துப் பயலோட ஜோரைப் பாரு! இவன் முகரக்கட்டைக்குக் கறுப்புக் கண்ணாடி வேறு? ஞாயிறு தவறாமல் இந்த வண்டியில் வந்து விடுகிறான். பார்வையில்லாமல் எப்படித்தான் பிரயாணம் செய்கிறானோ?... இவன் ஊரில் சாராயம் ஊத்தக் கூடாதாம்! இங்கே வந்தவுடன் பீப்பாய் வயிற்றை நிரப்பிக் கொண்டு விடுகிறான்.... சீ, என்ன ஜன்மம்'' என்று ஏதோ முணுமுணுத்தான் சங்குப் பிள்ளை.

சைக்கிள் ரிக்‌ஷாவில் சுரேஷுக்குப் பக்கத்தில் வீற்றிருந்தார் அந்தக் 'குருடர்'.

''ஏன் ஸார்.... நம்பளுக்கு பிறவியிலிருந்தே கண் தெரியாதா ஸார்? எப்படி ஸார் 'மிஸ்டேக்' வந்தது?''

அந்த மனிதர் கடகடவென்று சிரித்தார். தன் நாசியைத் தாக்கியது 'செண்ட்' மணமா, சாராய நாற்றமா என்று நிர்ணயிக்க முடியாத அளவு மரத்துப் போயிருந்தது சுரேஷின் மூளை. ஏனோ இந்த மனிதரைப் பார்த்ததிலிருந்து அவன் கொஞ்சம் குழம்பியிருந்தான். சென்ற ஒன்பது வருடங்களில் எத்தனையோ ஆசாமிகளை அவன் இதுபோல் அழைத்துச் சென்றிருக்கிறான். கொஞ்சம்கூட உணர்ச்சி வசப்பட்டதில்லை. ஆனால் இவர் முற்றிலும் மாறுபட்டவராக இருந்தார். இவரிடம் அவனை அறியாமலே ஒரு மதிப்பும், பயமும் பிறந்திருந்தன.

''ஏம்பா, என்ன கேட்டாய்? நான் பிறவிக் குருடா என்று? ஊனக் கண் அநேகமாக அழிந்துவிட்டது. இருப்பினும், ஸ்பரிசித்து எதையும் புரிந்து கொள்வேன்.... ஒரு காலத்தில் உலகின் அழகையெல்லாம் கண்டு ரசித்துப் படங்கள் எழுதிக் கொண்டிருந்தேன்.''

''சித்திரக்காரரா ஸார்? கண்ணை இழந்தபின் வரைய முடியாதே! படைத்தவன் உங்களை ஏன் இப்படிச் சோதிக்கிறான்? அவனுக்குக் கண்ணில்லையா?''

''படைத்தவன் என்று ஒருவன் இருக்கிறானா தம்பி? நீ நம்புகிறாயா? நான்கூட ஒரு காலத்தில் நம்பினேன். அதன் விளைவாக எத்தனை பக்திப் படங்கள் வரைந்தேன், தெரியுமா?''


'லேட்ட'ரினும் சுருட்டை அவர் பற்ற வைப்பதற்கும், ரிக்‌ஷா திடீரென்று நிற்பதற்கும் சரியாயிருந்தது. அவர் கரம் பற்றி ஒரு வீட்டுக்குள் அழைத்துச் சென்றான் சுரேஷ். கயிற்றுக் கட்டிலில் அவர் உட்கார்ந்ததும், அது கிறீச்சிட்டது. ஊதுவத்தியின் மணமும், மட்டப் பவுடரின் வாசனையும் நாசியைத் தாக்கின. உள்ளே எங்கோ ஓர் இளம் பெண் நடமாடுகிறாள் என்பதை உணர்ந்தார் அவர். ''காலையில் சந்திக்கிறேன் சார்.... குட்நைட்! ரூபா! ஐயாவைக் கவனித்துக் கொள்'' என்று சொல்லிவிட்டுச் சுரேஷ் வெளியேறினான்.

யாரோ ரேடியோவை முடுக்கினார்கள். தொடர்ந்து கண்ணாடி வளையல்கள் கலகலவென்று கிலுங்கின. மல்லிகைப் பூவின் சுகந்தம்.... அவர் ஆசையுடன் கையை நீட்டினார். எதிர்பார்த்தது எதுவும் நிகழவில்லை. ரூபா என்ற பெயருக்குச் சொந்தமான அழகுச் சிலை அசையாமல் நின்று கொண்டிருந்தது என்பது அவருக்கு எப்படித் தெரியும்? வியப்பினால் அவள் விழிகள் மலர்ந்திருந்தன என்பதும் அவருக்குத் தெரியாதுதான். இதயம் 'படக் படக்' என்று அடித்துக் கொண்டிருந்தது..... அவள் ஏன் அப்படி மௌனமாக விம்மினாள்?

''இதோ பார்! எனக்குக் கண் தெரியாது.... உன் பெயர் என்ன?''

''ரூபா!'' என்று மெதுவாக மொழிந்தாள் அவள்.

''ரூபா, ஏன் பயப்படுகிறாய்? எங்கே, இப்படிப் பக்கத்தில் வந்து உட்கார்.''



ORWO

நீங்களே ஆச்சரியமடைவீர்கள்


ஆர்வோ கலர் பிலிம்கள் எவ்வளவு சுலபமாகவும், தத்ரூபமாகவும் இயற்கை தரும் இன்பக் காட்சிகளையும், மகிழ்ச்சியைப் பெருக்கும் குடும்ப நிகழ்ச்சிகளையும் கிராமத்து எழில்தரும் காட்சியையும் படம் பிடிக்கிறதென்பதை பார்க்கும்போது நீங்களே ஆச்சரியமடைவீர்கள். ஆர்வோ கலர், கறுப்பு வெளுப்பு பிலிம்கள் 120 127, 35 mm. அளவில் தேவையான வேகத்துக்கும் மாதிரிக்கும் கிடைக்கின்றன.

வினியோகஸ்தர்கள்: ஆர்வோ பிலிம்ஸ் ஈஸ்டர்ன் யூனிட், சென்னை - கல்கத்தா
ஆர்வோ பிரைவேட் லிமிடெட், பம்பாய் - டெல்லி

ORWO Manufactured by: VEB FILMFABRIK WOLFEN, THE GERMAN DEMOCRATIC REPUBLIC

NAS 5125cA

டாடா அக்ரிகோ மண்வெட்டிகள்



மிகவும் சிறந்தவை

டாடா - அக்ரிகோ மண்வெட்டிகள் உங்கள் பணத்திற்கு சிறந்த மதிப்பளிக்கும் தரமான தயாரிப்புகள், ஏனெனில்;

* டாடா - அக்ரிகோ மண்வெட்டிகள், உயரிய டாடா கார்பன் ஸ்டீல் உபயோகித்து இணைப்புகள் இல்லாமல் ஒரே தகட்டில் உருவானவை.

* டாடா-அக்ரிகோ மண்வெட்டிகள், பிடிகள் திண்மையாக பொருந்துமாறு உள்ள துவாரங்களுடன் முனை சற்றே வளைத்துத் தட்டப்பட்டவை.

* டாடா - அக்ரிகோ மண்வெட்டிகள் நீண்டகால உழைப்பிற்காக, பளபளப்பான முனைகள் உள்ளவை.

* டாடா - அக்ரிகோ மண்வெட்டிகள் மற்ற டாடா தயாரிப்புகளைப் போலவே உற்பத்தியின் ஒவ்வொரு நிலையிலும் தரக்கட்டுப்பாடு செய்யப் பெற்றவை மேலும் 40 ஆண்டு உற்பத்தி அனுபவமும் துணை நிற்கிறது.

டாடா-அக்ரிகோ மண்வெட்டிகளை அங்கீகாரம் பெற்ற டாடா வியாபாரிகளிடமிருந்து பெறுங்கள், அல்லது எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்கு அசல் டாடா பொருட்கள் கிடைக்க இதுவே சிறந்த வழி.

உங்கள் டாடா-அக்ரிகோ விற்பனையாளர்களிடம் உங்கள் வேலைகளுக்குத்தகுந்த மண்வெட்டிகள் கிடைக்கும். பம்பாய் மண்வெட்டிகள், மேற்கு இந்தியா மண்வெட்டிகள், கிழக்கிந்தியா மண்வெட்டிகள், ஸ்வான் நெக் மண்வெட்டிகள், மைசூர் மண்வெட்டிகள் மற்றும் சூலம் போன்ற மண்வெட்டிகள், ஷவல்கள், கடப்பாரைகள், பிக்காசுகள், கத்தியல்கள் முதலியவைகளும் கிடைக்கும்.

TATA I A C 1966

அக்ரிகோ

டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெடின் ஒரு பிரிவு

தலைமை விற்பனை அலுவலகம்:
23 B. நேதாஜி சுபாஷ் ரோடு, கல்கத்தா-1.

கிளைகள்: அகமதாபாத், பெங்களூர், பம்பாய், எர்ணாகுளம், ஜலந்தர் ஸிடி, கான்பூர், மதராஸ், நாகபுரி, புது டில்லி, செகந்திராபாத், விஜயவாடா.

TN-4111R

அவள் அவர் அருகில் வந்து அமர்ந்தாள். கைகளைப் பற்ற முயன்றார் அவர். முடிய வில்லை. இது அவருக்குப் புது அனுபவம்.

''ரூபா!''

''ஸார்!'' என்று சொல்லி அவள் நாக் கைக் கடித்துக் கொண்டதை அவர் எங்கே உணர்ந்திருக்கப் போகிறார்?

''ஏதாவது பேச மாட்டாயா? உன்னைத் தேடி வந்திருக்கும் விருந்தாளியை இப்படித் தான் நடத்துவதா ?''

''டீபோட்டுக்கொண்டு வரட்டுமா ஸார்?'' அவளை அறியாமலே மீண்டும் 'ஸார்' என்ற வார்த்தை வாயை விட்டு நழுவி விட்டது. இந்தத் தடவை அவர் அதைக் கவ னித்து விட்டார்.

''என்ன.... என்னை 'ஸார்' என்று அழைத்தாய் ? உம்.... ஒரு காலத்தில் எத்தனையோ பேர்' 'ஸார்' என்றுதான் அழைத்து வந்தார்கள்..... நான் சித்திரக் கல்லூரியில் பிரின்ஸிபாலாகப் பணியாற்றிய காலத்தில்.... உன் குரல்கூட அசப்பில் கேட்டபொழுது என் மாணவி லீலாவின் குரலை நினைப்பூட்டியது..... புத்திசாலியான பெண். என் பேச்சைக் கேட்காமல் எவனோ தான்தோன்றியுடன் ஓடிவிட்டாள்....!''

ரூபாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. குரலைக்கூடவா நினைவு வைத்துக் கொண் டிருக்கிறார் இவர் ? கவரில் ரோஜா மாலை யுடன் காட்சியளித்த குருவின் படத்தைப் பார்த்தாள். ஒளி சிந்தும் கண்களுடன் கம் பீரமாக நின்று கொண்டிருந்தார் அவர். அந்தப் படத்திலிருந்த ரோஜா மயமான உருவமெங்கே.....? இந்த ஜீவனற்ற மனிதர் எங்கே? ஏன் இந்த வீழ்ச்சி?.... அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

அந்த நாளில் ஹரியின் பெயரைச் சொன் னாலே கலை உலகம் பயம் கலந்த பக்தி யுடன் கையெடுத்துக் கும்பிடும்.... தீவிர இலட்சியவாதி அவர்.....நெருப்பு! மற்றச் சித்திரக்காரர்கள் எல்லாம் 'பால்' உணர்ச்சி யைத் தூண்டும் படங்கள் வரைந்து, பணமும் 'அப்ளாஸு'ம் பெறுகையில், அவர் ஒருவர் மட்டும் மனத்தில் உயரிய எண்ணங்களை வளர்க்கும் படங்களாகத் தீட்டிக் கொண் டிருந்தார். கலை பக்தியை வளர்க்க வேண்டும், நம்பிக்கையை ஊட்ட வேண்டும் என்பது அவர் கட்சி. எப்படி நல்ல சங்கீதத்தில் அபஸ்வரத்துக்கு இடமில்லையோ, அதே போல் கலையில் ஆபாசம் தலைகாட்டக் கூடாது. பெண்ணின் சதை அழகைச் சித் திரிப்பது பேதைமை. அவளை வழிபடும் விளக்காக, அணையாத ஜோதியாகக் காட்டு வதுதான் கலை......

சிறந்த கலையை உருவாக்க முயலும் கலைஞனின் வாழ்வும் துல்லியமாக இருக்க வேண்டும். ஹரியின் கல்லூரியில் சிகரெட் பிடிப்பவர்களுக்கே இடமில்லை என்றால் மற்ற வர்களைப் பற்றிக் கேட்பானேன்! கலைஞன் என்றால் அவன் ஒழுங்காக வாழ மாட்டான், ஏதாவது ஒரு கெட்ட வழக்கமாவது மேற் கொண்டிருப்பான் என்ற சம்பிரதாயச் சொல்லுக்குச் சாவுமணி அடித்திருந்தார் அவர். பெண்களிடம் பிரத்தியேகக் கண் டிப்பு. மனத்தில் யாருக்காவது விகல்ப



மான சபலம் தட்டுகிறது என்ற சந்தேகம் ஏற்பட்டாலே கல்லூரியை விட்டு வெளியேற்றி விடுவார்.

ஏன், ரூபாவை, இல்லை லீலாவைக்கூட அவர் தாட்சிண்யமின்றி வெளியேற்றத்தான் செய்தார்.

''எத்தனை நாட்களாக இந்தக் காதல் நாடகம்? ஒழுக்கம் கெட்டவர்களுக்கு இப் பள்ளியில் இடமில்லை என்று தெரியாதா?''

''ஸார்.... எனக்கு அவரிடம்.....!''

''சீ! வாயை மூடு! உன்னைப் பற்றி நான் என்னென்னவோ எண்ணியிருந்தேன்..... கலையை வளர்ப்பதுதான் உன் கடமை.... கண்களினால் காமன் கணை தொடுப்பதல்ல.''

''ஸார்....!''

''என்னிடம் பேசாதே. என் மன அமைதி கெடும். சீக்கிரம் இங்கிருந்து வெளியேறிவிடு. காமினிகளுக்கு இங்கு இடமில்லை.''

''ஏதோ இலட்சியவாதி என்று சொல்லிக் கொள்கிறீர்களே ஸார்... காதலை உங்களால் புரிந்து கொள்ள முடியாதா ஸார்? நான் விரும்புகிறவரைக் கைப் பிடிப்பதில் என்ன தவறு?''

''விவாதம் செய்ய எனக்குப் பொழுதில்லை. கலைத் தொண்டுக்கும் காதலுக்கும் ஒத்துப் போகாது. ஒழுங்காக இருப்பதானால் இரு.........''

''அதாவது.....?''

கதவு படாரென்று சாத்தப்பட்டது !

சூடான தேநீருடன் குருநாதரை அணுகினாள் ரூபா. அதை அவரிடம் தந்துவிட்டுத் தள்ளி நின்றாள். இது அவள் இங்கு வந்தபின் மேற்கொண்ட வழக்கத்துக்கு விரோதமான செயல்.

''என்ன ரூபா! தூரத்தில் போய் ஒதுங்குகிறாய்? என்னைக் கண்டால் பயமாக இருக்கிறதா?''

''அப்படியொன்றுமில்லை.''

''பின் இப்படிப் பக்கத்தில் உட்காரேன்.'' இதைச் சொல்லுகையில் அவர் முகத்தில் அசடு வழிந்தது. இலட்சிய ஜுவாலை வீசிக் கொண்டிருந்த முகமா அது? அதிலிருந்த கலை வெறி எங்கே? கம்பீரம் எங்கே?

மல்லிகையின் மணம் கம்மென்று வீசினதிலிருந்து அவள் பக்கத்தில் அமர்ந்து விட்டாள் என்பது விளங்கியது. மீண்டும் அவர் கரங்கள் நீண்டன. அவள் உடல் ஏனோ நடுங்கிற்று.

''நீங்கள் பார்வையை எப்படி இழந்தீர்கள்? உங்களைப் பார்த்தால் இங்கு வழக்கமாக வருகிறவர்கள் போல் இல்லை......'' என்று ஏதோ பேசி வைத்தாள் ரூபா.

அவர் கடகடவென்று சிரித்தார்.

''நீயும் வழக்கத்துக்கு மாறாக இருக்கிறாய். இது போன்ற இடங்களில் சந்திக்கும் பெண்கள் போலில்லை.... என் கண்களை எப்படி இழந்தேன் என்று கேட்டாய்?.... உம்.... நான் ஒரு காலத்தில் சித்திரப்பள்ளி ஒன்றின் தலைவனாக இருந்தேன். ஹரி என்பது என் பெயர். வீடுதோறும் காட்சியளிக்கும் பக்திப் படங்கள் எல்லாம் அடியேன் வரைந்ததுதான். இன்று ஆபாச வாழ்க்கை வாழும் நான் அன்று வாழ்ந்த புனித வாழ்வைப் பற்றிப் பேசினால் நம்பவா போகிறாய் நீ? உன்னதமான இலட்சியங்களை நோக்கிப் பறந்து கொண்டிருந்த நான், சிறகொடிந்து தத்தளிப்பேன் என்று எண்ணவே இல்லை. என்ன செய்வது? விபத்தொன்றில் கண்களை இழந்தேன். கடவுளின் லீலா விநோதங்களைத் தீட்டி மகிழ்ந்த எனக்கா இந்தக் கதி நேர வேண்டும்? எல்லாம் இருண்டது. வாழ்க்கை என்பது அர்த்தமற்ற காலக் குவியல் என்ற உண்மை விளங்கியது. என் நம்பிக்கையெல்லாம் என்னை விட்டு நழுவி ஓடிற்று.... வறண்டு போன என் வாழ்க்கைக்கு இனி விடிவு கிடையாது. மிகுதியிருக்கும் நாட்களை இன்பப் போதையிலே கழிப்பது என்று தீர்மானித்தேன். வாரம் தவறாது நான் இந்த ஊருக்கு வருகிறேன். உன்னைப் போல் எத்தனையோ பெண்களைச் சந்தித்து விட்டேன்.''

அவர் ஒரு சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டபின் நெருங்கி உட்கார்ந்தார். அவள் ஸ்பரிசத்துக்காக ஏங்கின அவர் கரங்கள்.

''ஏன் வெட்கப்படுகிறாய்?.... நீ இந்தத் தொழிலுக்குப் புதுசா?''

அவள் கண்களில் வழிந்தோடிய கண்ணீர்த் துளிகளில் ஒன்று அவர் நீட்டி அணைக்க முயன்ற கரத்தில் விழுந்தது.

''சீ, நீ என்ன அழுமூஞ்சியா? என் பொழுதை வீணாக்கி விடுவாய் போலிருக்கிறதே! எங்கே அந்தப் பயல் சுரேஷ்? என்னை ஏன் இங்கு அழைத்து வந்தான்? ஜமீல் எவ்வளவோ தேவலாம் போலிருக்கிறதே!''

தான் வணங்கும் குருவை 'வீழ்ச்சி'யிலிருந்து எப்படிக் காப்பது என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள் அவள்.... மானஸீகமாக அவரிடம் ஏற்படுத்திக் கொண்டிருந்த புனிதமான உறவுக்கு — குருபக்திக்கு—களங்கம் எதுவும் ஏற்பட்டுவிடக் கூடாதே என்பதே அவள் பயம்.... பிரச்னை.... துணிந்து பொய் சொன்னால்தான் எக்கச்சக்கமான நிலைமையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்பதை உணர்ந்தாள்.

''மன்னித்துக் கொள்ளுங்கள். இன்று நான் உங்கள் ஆசையைப் பூர்த்தி செய்ய முடியாது...பொல்லாத இயற்கை...இன்னும் சில தினங்கள் பொறுத்து வாருங்கள்!'' என்று பட்டும் படாமலும் சொன்னாள்.

அவர் ஆத்திரத்துடன் என்ன பதில் சொன்னார் என்றே அவள் கவனிக்கவில்லை. விளக்கை அணைத்துவிட்டு, அவர் கட்டிலுக்குப் பக்கத்தில் தரையில் படுத்துக் கொண்டாள். நிம்மதியாகத் தூங்கினாள்.

நாயர் ஹோட்டலில் டீ குடித்தபடியே ஜமீலிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான் சுரேஷ்.

''நாயை நாலு விட்டேன் பாரு.... அப்படியே சுருண்டு படுத்து விட்டாள்!''

''சீ! சீ! பொம்புளையை அடிப்பாங்களா?'' என்று கேட்டுவிட்டுப் புழுப் பல் தெரியச் சிரித்தான் ஜமீல்.

''பின்னே அடியாமல் படியுமா? தொழிலுக்கு வந்தபின் 'இடக்கல்' பண்ணினால் நல்லாவா இருக்கு? அன்னிக்கு இந்தக் குருடன் என் முகத்தில் காறித் துப்பினான்.''

''அவன் - கிடக்கான் கிறுக்குப் பயல். என்னைக்கூடத்தான் என்னென்னவோ ஏசினான். நான் அழைத்துப் போகும் இடங்களில் எல்லாம் விபரீதி வருமாம்...... செத்துப் போவானாம்!..... இருந்தாலும் ரூபாவை நீ அடித்திருக்கக் கூடாது.''

''டேய், ஜமீல்.... நீ சுத்த மட்டிடா.... உதைக்காவிட்டால் அவள் நாளைக்கும் இதே போல்தானே நடந்து கொள்வாள்? என் பிழைப்பு என்ன ஆவது? அடுத்த தடவை இரும்புக் கரண்டியால் சூடு இழுப்பேன் சூடு. சுத்த சரித்திரம் பிடித்த பெண்.''

கடைசி வார்த்தையைச் சுரேஷ் சொல்லி முடித்ததும் ஹெட்கான்ஸ்டபிள் பாலையா உள்ளே நுழைவதும் சரியாயிருந்தது.

''சலாம் ஏட்டையா.....'' என்று சொல்லிச் சுரேஷும் ஜமீலும் எழுந்து நின்றார்கள்.

''உன் சலாமைக் கொண்டு போய் உடைப்பிலே போடு.... டேய், உன்னைத் தாண்டா சுரேஷ்.... அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டு விட்டாள்.''

''யார் ரூபாவா?''

''ஆமாண்டா.... காலையிலே எழுந்திருக்க இது வேறு கண்ணராவி......!''

''ஐயையோ, ரூபா செத்துப் போயிட்டாளா? நிஜமாகவா?'' என்று உரக்க ஒப்பாரி வைத்தான் சுரேஷ்.

''நீ ஏண்டா அடித்தே? அப்பவே சொன்னேனு இல்லையா..... பொம்புளையை அடிக்கக் கூடாதுன்னு! ஏண்டா அநியாயமாக ஓர் உயிரை வாங்கினாய்?'' என்று கேட்டு, சுரேஷுடன் சேர்ந்து அழுதான் ஜமீல்.

அங்கே கண் ஆஸ்பத்திரியில் ஒரே பரபரப்பு ஏற்பட்டது. ஒவ்வொரு கண் ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்து பார்வை திரும்பும் போதும் இப்படித்தான். கண்களை மீண்டும் பெற்ற ஹரி, டாக்டர் சாமுவேலிடம் ஏதேதோ கேட்டுக் கொண்டிருந்தார்.

''உங்களை யார் என்னிடம் அனுப்பினார்கள்? எனக்கு உங்களை முன்பின் தெரியாதே....''

''உங்கள் மனைவி.''

''மனைவியா?''

''லீலா.....''

''லீலாவா?''

''இந்தக் கடிதத்தைப் படியுங்கள். எல்லாம் விளங்கும்......!''

நடுங்கும் கைகளுடன் கடிதத்தின் மீது கண்ணோட்டம் செலுத்தினார் அவர். புதிதாகப் பொருத்தப்பட்டிருந்த கண்களில் நான் என்ன குருடனா? என்ன நுனி?



மதிப்புக்குரிய குருநாதருக்கு மாணவி லீலா எழுதுவது.

நமஸ்காரம். ஒரு காலத்தில் தங்கள் பேச்சைச் செவிசாய்க்காது கல்லூரியைவிட்டு வெளியேறின எனக்குக் கைமேல் பலன் கிடைத்தது. அந்தக் கதையை எல்லாம் ஏன் வளர்க்க வேண்டும்?...... ரூபாவாக அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்த என் இருப் பிடத்துக்கு. விதி தங்களை இட்டு வரும் என்று கனவில்கூட நான் நினைக்கவில்லை. என் கண்களைத் திறக்க முயன்ற தாங்கள் குருடாயிருப்பதைக் கண்டு நான் எவ்வளவு கலங்கினேன் என்று எழுதிவிட வாய்ப்பாடு பிரயாசை. மதிப்புக்குரிய ஆசிரியராக இருந்து ஞானப்பால் புகட்ட முயன்ற தாங்கள் என்னிடம் தகாத முறையில் தொடர்பு கொள்வதா? எவ்வளவு பயங் கரம்? நடக்கக் கூடாதது நடந்துவிடுமோ என்று அஞ்சினேன். நல்ல வேளை.... பாபத்திலிருந்து காப்பாற்றப்பட்டேன்..... தங்களையும் காத்தேன்.

தாங்கள் கலைக்கூடத்திலிருந்து என்னை வெளியேற்றுகையில் 'காமன் கணை தொடுப்ப தற்கல்ல கண்கள்' என்ற ரீதியில் ஏதோ சொன்னீர்கள். என்ன செய்வது? வாழ்வில் ஏற்பட்ட விபரீதம் காரணமாக என் கண்களை அதற்குத்தான் பயன்படுத்தி வந்தேன்.

குருநாதா! கண்களைச் சரிவர உப யோகித்துக் கலை உருவங்கள் படைத்து வந்தீர்கள் தாங்கள். கடவுளின் லீலா விநோதங்களைச் சித்திரிப்பதற்குத்தான் தங்கள் பார்வை பயன்படுத்தப்பட்டு வந்தது. அவை ஒளி இழக்கப் போய்த்தானே தாங்கள் நம்பிக்கை இழந்தீர்கள் ?

நான் காமன் கணை தொடுக்கும் என் கண் களைத் தங்களுக்கு அளிக்கிறேன். அவை சிறந்த கருத்துக்களைச் சித்திரிக்க உதவட் டும்; பக்தியை வளர்க்கட்டும்..... பிறர் கண்களைத் திறக்கட்டும் !

கண் பாங்குக்கு அன்றே எழுதிவிட் டேன், எனக்குப்பின் அந்தக் கண்களுக்குத் தாங்கள்தான் சொந்தக்காரர் என்று ! குரு தட்சிணையாக நான் அளிக்கும் என் காமன் கணை தொடுக்கும் கண்கள் ஞானக்கண் களாக மாறட்டும் !

இதோ ரூபா மாரடைப்பினால் இறந்து விட்டதாக நானே கண் டாக்டர் சாமு வேலுக்கு 'போன்' செய்யப் போகிறேன். அவர் வருவதற்குள் விஷம் அதன் வேலையைச் செய்திருக்கும்.

குருநாதா! கடவுள் தங்களைக் கைவிட வில்லை !

அன்புள்ள மாணவி

லீலா என்ற ரூபா.''

ஹரியின் புதுக் கண்களை ஆறுகப் பொங்கி எழுந்த கண்ணீர் கழுவிற்று.

கத்தியின்றி ரத்தமின்றி ஆபரேஷன்

உலகம் தோன்றியது முதல் இன்றுவரையில் கத்தி யில்லாமல் அறுவை மருத்துவம் நடந்ததில்லை. ஆனால் விரைவில் கத்தியில்லாமலே அறுவை மருத்துவம் நடைபெறும் காலம் வந்து கொண் டிருக்கிறது.

சில அறுவை மருத்துவர்கள் குறிப்பிட்ட சில துறைகளில் ஏற்கனவே கத்திக்குப் பதில் வேறு புதிய முறைகளைக் கையாண்டு வருகிறார்கள். மூன்று வகைப் புது முறைகளில் ஏதாவது ஒன்றை அவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

இவற்றில் ஒன்று ''ஜெட் கத்தி.'' உண்மையில் இதில் கத்தி எதுவும் கிடையாது. எரியும் வாயு வின் அனல் ஆணி, சதையையும் எலும்புகளையும் மிக நுட்பமாகத் துளைத்து அறுவை மருத்துவம் செய்கிறது. இதன் கடும் வெப்பம் உடனடியாக வெட்டிய பகுதியிலிருந்து வெளிப்படும் இரத்தத்தை உலரச் செய்துவிடுகிறது. இவ்வாறாக அறுவை மருத்துவம் சுத்தமாகவும் விரைவாகவும் நடை பெறுகிறது. வழக்கமான முறையில் கத்தி கொண்டு அறுத்துச் சிகிச்சை செய்கையில் இரத்தம் கொட்டுவதைத் தடுப்பதிலேயே மருத்துவர்களின் நேரத்தில் முக்கால் பங்கு செலவாகிறது.

மற்றொரு புதுமை ஆயுதம் ''லாஸர் கத்தி''. இவை முழு அளவில் புழக்கத்துக்கு வர மேலும் ஆராய்ச்சிகள் நடக்க வேண்டியிருக்கிறது. ஓர் இயந்திரம் மிகவும் குறுகிய திண்மையான ஓர் ஒளிக் கற்றையை உற்பத்தி செய்கிறது. இதுவே லாஸர்.

ஆபத்தான புற்றுநோய்க் கட்டிகளை அறுக்க அமெரிக்காவில் இந்த ஒளிக் கற்றைகளைச் சோதனை முறையில் மருத்துவர்கள் பயன்படுத்த முற்பட்டுள்ளனர். இவற்றை ஒரு விநாடியிலும் மிகக் குறைந்த காலத்துக்குப் பயன்படுத்தி, கண் வைத்திய நிபுணர்கள் கண்ணின் கிழிந்த 'ரெட்டினா' திரையை விழியுடன் மீண்டும் ஒட்ட வைத்துள்ளனர்.

வருங்கால மருத்துவ முறையில் வெப்பத்தை மட்டுமல்லாமல் குளிரையும் அறுவைச் சிகிச் சைக்குப் பயன்படுத்த விஞ்ஞானிகள் முயன்று வருகிறார்கள். இதில் உருவானதே பனிக் கத்தி. இதில் கத்தியும் கிடையாது; பனிக் கட்டியும் கிடையாது. உண்மையில் இது 'பென்சில்' போன்ற ஒரு மெல்லிய குழாய். இதன் வழியாக நைட்ரஜன் திரவம் (அல்லது வேறு கடுங்குளிர் ரசாயனப் பொருள்) பூஜ்யத்துக்கும் குறைவான - 300 டிகிரி (பாரன்ஹைட்) குளிர் நிலையில் செலுத்தப்படுகிறது. இந்தக் கடும் குளிர் அது தீண்டும் உயிர்ப் பொருள் எதையும் அழித்துவிடக் கூடியது. நைட்ரஜன் திரவம் செல்லும் வேகத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் குழாயின் முனையிலுள்ள குளிர் நிலையைக் கட்டுப்படுத்த முடியும்.

இந்தக் 'குளிர் அறுவை' முறையில் வலியில் லாமல் மண்டை ஓட்டில் சிறு சிறு துவாரங்கள் போடச் செய்து, கடுங்குளிர்க் குழாயை மூளையின் ஆழமான உட்பகுதிக்குள் கூடச் செலுத்தி, மூளைப் புற்று நோய்க் கட்டிகளைக் குளிரினால் மடியுமாறு செய்திருக்கிறார் அமெரிக்க டாக்டர் எஸ். கூப்பர்.

கடும் குளிர் முறை காரணமாகக் கட்டிகளை அறுப் பதோ வெளியே எடுப்பதோ அவசியமில்லாமல் போய்விடுகிறது. இவ்வாறு அழிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை உடம்பில் இயல்பாகவே உள்ள தாங்மைப்படுத்தும் முறை படிப்படியாக வெளி யேற்றி விடுகிறது.

— தகவல் : அமெரிக்க விஞ்ஞானச் செய்தி

கல்யாண விசேஷ விற்பனை!

காஞ்சீபுரம், பனாரஸ்

பட்டுச் சேலைகள்

மற்றும்

மில் ஜவுளிகளுக்கு

நம்பிக்கையான இடம்

P. B. லக்ஷ்மண ஸா & பிரதர்ஸ்

(ஏர் - கண்டிஷண்ட்)

பனகல் பார்க், தி. நகர், சென்னை-17 :: போன்: 443435

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2 :: போன்: 86966

❋

தயாரிப்பு நிலையம்:

15, மேட்டுத் தெரு, காஞ்சீபுரம் :: போன்: 562

RAE-PBL-I



உங்கள் குழந்தைகளின் கல்விச் செலவிற்கும், திருமணச் செலவுகளுக்கும் மற்றும் உங்கள் ஓய்வுக்கால வசதிகள் ஆகியவற்றிற்கும் உதவ எளிய முறையில் சிரமமின்றி சேமிக்கவும், அவ்வாறு நீங்கள் சேமித்த பணம் மிகவும் அவசியம் தேவைப்படும் நேரத்தில் உங்களுக்குக் கிடைக்கவும் உத்திரவாதமளிக்கிறது ஆயுள் இன்சூரன்சு. உங்கள் அன்பு மகனின் கல்விச் செலவிற்கும், உங்கள் ஆசை மகளின் திருமணச் செலவுகளுக்கும் வழிவகை செய்கிறது ஆயுள் இன்சூரன்சு — தக்க நேரத்தில் அவர்களுக்கு உதவ நீங்கள் இல்லாது போயினுங்கூட.

அதோடு, முதுமைக் காலத்தில் துன்பமின்றி நிம்மதியுடன் வாழவும் ஆயுள் இன்சூரன்சை நம்பலாம் நீங்கள்.

எனவே, உங்கள் தேவைக்குகந்தப் பாலிசிக்கு உங்கள் எல்.ஐ.சி. முகவரை (ஏஜெண்ட்) நாடவும்.

ஆயுள் இன்சூரன்சு போல
ஆதரவு தருவது எதுவுமே இல்லை

EP.LIC.52.67



குயிலே! உனக்கொரு கோடி நமஸ்காரம்

முகுந்தன்

சோவியத் ரஷ்யாவின்

சோஷலிஸத்தைக்

கிண்டல் பண்ணும்

இந்தக்

கதையை எழுதியவர்

போலந்தில்

பிறந்து ருஷ்யாவில்

வாழ்ந்த

ஜேனஸ் ஒஸென்கா.

கடிகாரங்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றில் நுழைந்தார் ஓர் ஆசாமி. ஒரு கடிகாரத்தைச் சுட்டிக் காட்டி, ''இந்தக் கடிகாரம் எனக்கு வேண்டுமே....!'' என்றார். மணி அடிக்கும் போதெல்லாம் குயில் கூவுவது போல இன்னிசை எழுப்பும் குயில் கடிகாரம் அது.

''மன்னிக்கவும். அது விற்பதற்கில்லை'' என்று பதிலளித்தார் கடைக்காரர்.

''ஏன்.....?''

''இந்தக் குயில் கடிகாரத்தில் 'குயில்' இல்லை இப்போது.... உடைந்து போய் விட்டது......!''

''பரவாயில்லை ; இது குயில் போலக் கூவாவிட்டால் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது எனக்கு.....!''

''இருக்கலாம்; ஆனால் கூவுவதற்கும் சேர்த்துத்தான் இதற்கு விலை வைத்திருக்கிறோம்......!''

''என்ன விலையானாலும் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேனே!....''

''அது தப்பு ; கூவாத கடிகாரத்துக்கு நீங்கள் அந்த விலை கொடுக்கக் கூடாது ; அது நியாயமுமில்லை.... இது அரசாங்க நியாய விலைக் கடை பாருங்கள்....!''

''அப்படியானால் ஒன்று செய்வோம் ; என் வீட்டில் இந்தக் கூவுகிற விசை மாத்திரம் இருக்கிறது. பழைய கடிகாரம் ஒன்றிலிருந்து அதைக் கழற்றி வைத்திருக்கிறேன். அதைக் கொண்டு வந்து தருகிறேன். இந்தக் கடிகாரத்தில் அதைப் பொருத்திக் கொடுத்து விடுங்களேன்.......!''

''மன்னிக்கவும் ; அரசாங்கத் தொழிற்சாலைகளிடமிருந்துதான் நாங்கள் எதையும் வாங்கலாம். தனியாரிடமிருந்து ஒன்றும் வாங்கக் கூடாது என்று சட்டமிருக்கிறது!''

''அதனால் என்ன? நீங்கள் தனிப்பட்ட முறையில் அந்த விசையை வாங்கிக் கொள்ளுங்களேன்......!''

''எனக்கு அது தேவையில்லையே!....''

''நீங்கள் அதை வாங்கக் கூடாது என்று எந்தச் சட்டத்திலும் இல்லையே ?''

''இல்லைதான்; இருந்தாலும்....!''

''பொறுங்கள். நான் சொல்வது முழுவதையும் கேட்டுவிட்டுப் பேசுங்கள்; அந்த விசையை நீங்கள் வாங்கி, இந்தக் கடிகாரத்தில் பொருத்தி, முழு விலைக்கு எனக்கு விற்று விடுங்கள்; விசைக்கு எவ்வளவு நீங்கள் கொடுத்தீர்களோ, அதை அப்படியே உங்களுக்குத் திருப்பித் தந்து விடுகிறேன்..... சரிதானே?......''

''அதுதான் தப்பு என்கிறேன். தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான குயில் விசையுடன்கூடிய கடிகாரங்களை நாங்கள் விற்கக் கூடாது.......!''

''ஓகோ, அப்படியா?.... அதோ அங்கே இருப்பது என்ன? அதுவும் ஒரு குயில் கடிகாரம்தானே ? அதிலே குயில் இருக்கிறதல்லவா ?''

''அது இன்னொருத்தருடையது. குயில் விசையைப் பொருத்துவதற்காக இங்கே கொண்டு வந்தார்..... விசையைப் பொருத்தியாகி விட்டது.... இது அவருக்குச் சொந்தமான கடிகாரம்.....!''

''உதிரியாகக் குயில் விசை உங்களிடம் இருக்கிறதென்று சொல்லுங்கள் !''

''இருந்தது; இப்போது 'ஸ்டாக்' இல்லை. இந்தக் கடிகாரத்தில் இருப்பதுதான் கடைசியாக நாங்கள் விற்ற குயில் விசை !''

''அந்தக் கடிகாரத்திலிருந்து குயில் விசையை மட்டும் கழற்றி எடுங்கள், சொல்கிறேன்..... ஆ, அப்படித்தான்!....''

''நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதே புரியவில்லையே எனக்கு?....''

''இதோ சொல்கிறேன்; இந்தக் குயில் விசை இருக்கிறதே, இது யாருடையது?''

''அரசாங்கத்துக்குச் சொந்தமானது!''

''ரைட்!.... இந்தக் கடிகாரம்?....''

''அதுதான் சொன்னேனே!...தனிப்பட்ட ஆசாமி யாரோ ஒருத்தருடையது என்று?''

''அதுவும் ரைட்! நான் என்ன சொல்கிறேனென்றால் என்னிடம் எனக்கு — அதாவது தனியார் ஒருத்தருக்கு — சொந்தமான குயில்விசை ஒன்று இருப்பதாகச் சொன்னேனல்லவா?.... அதைக் கொண்டு வருகிறேன்.... அப்படியே இந்தக் கடிகாரத்தில் பொருத்தி விடுங்கள்..... கடிகாரமும் சரி, குயில் விசையும் சரி, தனியாருடையதாகவே இருக்கட்டும்.... செய்கிறீர்களா?''

''செய்யலாம்தான்.... ஆனால் ஆபீஸ் நேரத்தில் நான் இதைச் செய்யக் கூடாது.... நான் ஓர் அரசாங்க ஊழியன்....''

''சரி ஐயா! நீர் இங்கே வேலை செய்யாத நேரத்தில் — அதாவது ஓய்வு நேரத்தில்—இந்த வேலையைச் செய்யும்.... அப்புறம் இந்தக் கடிகாரத்திலிருந்து அரசாங்கத்துக்குச் சொந்தமான குயில் விசையைக் கழற்றி எடுத்தீர்களே, அதை அதோ இருக்கும் அரசாங்கத்துக்குச் சொந்தமான கடிகாரத்தில் இணைத்து எனக்கு விற்று விடுங்கள்..... என்ன, சரிதானா?....''

''சரிதான்!''

''இப்போது சொல்லுங்கள்; என்ன விலை இந்தக் குயில் கடிகாரம்?....''

''இரண்டாயிரத்து முந்நூறு ரூபிள்....!''

''இந்தாருங்கள் பணம்.... கடிகாரத்தைப் பாக் பண்ணுவதற்கு முன்னால் ஒரு சின்ன வேண்டுகோள்......!''

''என்ன....?''

''அந்தக் குயில் விசையின் மீது சம்மட்டியால் இரண்டு போடு போடுங்கள்.... அது உடைந்து தொலைக்கட்டும்.... எனக்கென்னவோ இந்தக் குயிலோசையே பிடிப்பதில்லை!''

— உண்மை மனிதரா? கற்பனைப் பாத்திரமா? —

துப்பறியும் நாவல் படிப்பவர்களில் 'ஷெர்லக் ஹோம்ஸ்' பற்றி அறியாதவர்கள் இருக்க மாட்டார்கள். சாதாரண கதா பாத்திரமான 'ஷெர்லக் ஹோம்ஸ்' என்ற துப்பறியும் பாத்திரத்தை 'உண்மையாகவே உயிர் வாழ்ந்த துப்பறிபவர்' என்று பலர் நம்பும் அளவுக்குப் பிரபலமாகச் செய்துவிட்டார் ஆசிரியர் கானன் டாயில். உலகின் பல பாகங்களில் உள்ளவர்கள் ஷெர்லக் ஹோம்ஸின் பெயரில் பல சங்கங்களை ஏற்படுத்தியுள்ளனர். 'ஷெர்லக் ஹோம்ஸ்' உண்மையிலேயே வாழ்ந்து வீர சாகஸம் புரிந்தவர், அவரைப் பற்றிய கதைகள் யாவும் உண்மை நிகழ்ச்சிகள் என்றும் இவர்கள் கருதுகின்றனர்.

லண்டனில் உள்ள ''ஷெர்லக் ஹோம்ஸ் கழக''த்தில் 300 உறுப்பினர்களும், அமெரிக்காவில் 600 பேர்களும் உள்ளனர். மற்றும் ஹாலந்து, டென்மார்க், ஸ்விட்ஜர்லாந்து ஆகிய பல நாடுகளில் இப்படிப்பட்ட பல கழகங்கள் நடந்து வருகின்றன.




'ஷெர்லக் ஹோம்ஸி'ன் 'சாகசபுரி'யான ஜெனிவாவில் உலகெங்கு முள்ள இந்தக் கழக உறுப்பினர்கள் கூடி, 'ஹோம்ஸ்' உலாவிய, சண்டையிட்ட, சாகஸம் புரிந்த இடங்களைச் சுற்றிப் பார்ப்பதாக முடிவு செய்துள்ளனர்; அதுவும் ஒவ்வொருவரும் சம்பந்தப்பட்ட கதைகளில் வரும் கதாபாத்திரங்களைப் போல் ஆடை அணிந்து! இந்தச் சுற்றுலா முடிந்ததும் ஒவ்வொருவருக்கும் 'விருது' வழங்குவதாக இருந்தது. ஆனால் இந்த நிகழ்ச்சி 1968ம் ஆண்டுக்குத் தள்ளி வைக்கப்பட்டது. காரணம், இதில் கலந்துகொள்ளப் பல நூற்றுக் கணக்கானவர்கள் கோரியுள்ளனராம். இதனால் இவ்வாண்டு நடத்த முடியவில்லையாம்!

லண்டனைச் சேர்ந்த 'ஷெர்லக் ஹோம்ஸ்' சங்கத் தலைவர், 'ஹோனலட்' என்பவர் ஒரு கால் சட்டை மட்டும் அணிந்து, ஒரு கயிற்றின் மூலம் ஒரு மலைச் சரிவில் தொங்கவிடப்பட்டார். ஏன் தெரியுமா? ஆராய்ச்சிக்காக! ''கடைசிப் பிரச்னை'' என்ற கதையில் 'ஷெர்லக் ஹோம்ஸ்' ஸ்விட்சர்லாந்து மலை ஒன்றில் தன் எதிரியுடன் சண்டையிடுவதாக ஒரு காட்சி வருகிறது. இந்தக் குறிப்பிட்ட இடம் எது என்று கண்டுபிடிக்கத்தான் இவர் இப்படிக் கயிற்றில் தொங்கினார்!

லண்டனில் ஒரு ஷெர்லக் ஹோம்ஸ் கூடம் உள்ளது. இதில் ஷெர்லக் ஹோமஸுடையது என்று கருதப்படும் கடிதங்கள், துப்பாக்கிகள், அவர் எழுதியதாகக் கூறப்படும் உயில் முதலியன காட்சிப் பொருளாக உள்ளன!

'ஷெர்லக் ஹோம்ஸ்' வசித்ததாக அவரது கதைகளில் கூறப்பட்டுள்ள ''221-பி, பேக்கர் தெரு, லண்டன்'' என்ற விலாசத்துக்கு 'ஷெர்லக் ஹோம்ஸ்' பெயருக்கு நூற்றுக் கணக்கான தபால்கள் இன்னும் வருகின்றனவாம்! இந்தக் கடிதங்கள் சிறுவர்களிடமிருந்து மட்டுமல்ல, பல பேராசிரியர்களிடமிருந்தும் கூடத்தான் வருகின்றன.

ஆதாரம்: ''டிட்பிட்ஸ்''
தகவல்: வி. சம்பத்குமார்



கற்பூரம்

சங்கர சுப்பு

சுவரில் இருந்த கடிகாரம் 'டங் டங்' என்று பன்னிரண்டு மணி அடித்தது.

''அவன் அவள் இடையைக் கைப்பற்றி ஆசையாய் அவளை...! வாசற் கதவு விரிச் சென்று திறந்து கிடந்ததைக்கூடப் பொருட்படுத்தவில்லை!'' என்று முத்தாய்ப்பு வைத்தாற்போல் நாவலை முடித்தார் பிரபல எழுத்தாளர் அச்சுதராமய்யா. கையெழுத்துப் பிரதியின் தாள்களை ஒழுங்காக, சமமாக அடுக்கி ஆரம்பத்தைப் படித்தார். பிறகு ஒவ்வொரு பக்கமாகச் சடசடவென்று திருப்பி நோட்டம் பார்த்தார். முகத்தில் பிரமாதமான திருப்தி கண்டது. தம் முதுகைத் தானே தட்டிக் கொள்ளத் தோன்றியது அவருக்கு.

மேஜையின் மீதிருந்த 'கோல்டு பிளேக்' சிகரெட்டை எடுத்துப் பற்ற வைக்க வேண்டிய நுனியைக் கைக்கட்டை விரல் நகத்தில் பதம் பெறத் தட்டிவிட்டு உதடுகளுக்கிடையில் செருகினார். நெருப்புக் குச்சி எரியும் வாசனை அவருக்கு நிரம்பப் பிடிக்கும்! அதனால் நெருப்புக் குச்சியைப் பெட்டியில் கிழித்தவுடன் சற்று முகர்ந்து விட்டு, சிகரெட்டைப் பற்ற வைத்தார். சிகரெட் பற்றிய பிறகு மீண்டும் எரியும் குச்சியை முகர்ந்தார். குச்சி முக்கால் எரிந்த பிறகு அதை அவித்து மேஜையின் மீது சிகரெட் சாம்பலைத் தட்டுவதற்காக இருந்த பத்தலில் போட்டார்.

நாற்காலியில் சாய்ந்த வண்ணம் சிகரெட்டை மெதுவாய், ருசியாய் இழுத்தார். அறையில் புகை படர்ந்தது. சிகரெட் நுனியில் சாம்பர் கண்டது. தாம் எழுதியிருந்த நாவலின் ஏடுகளை மறுபடியும் புரட்டினார். ஊதா நிற மையில் எழுதியிருந்த கையெழுத்து இரவு விளக்கு வெளிச்சத்தில் கண்ணுக்குக் குளுமையாய் இருந்தது.

இப்போது 'கற்பூரம்' என்ற தலைப்பில் எழுதியுள்ள இந்த நாவல் புத்தக உருவில் வெளிவந்தவுடன் தாம் அடையப் போகும் புகழை ஒரு கணம் சிந்தித்தார். மயிர்க் கூச்சலிட்டது! முதுகுத் தண்டு சில்லிட்டது!

அவ்வளவு பிரமாதமாக அமைந்து விட்டது அந்த நாவல். சில பகுதிகளைத் தாமே திரும்பத் திரும்பப் படிக்கையில் அவர் திடுக்கிட்டார்! 'நாமா இவ்வளவு அருமையாக எழுதியுள்ளோம்! இந்த வார்த்தை இந்த இடத்தில் எப்படி விழுந்தது? எனக்கு இது தெரியாததாயிற்றே! நான் கேள்விப்பட்டது கூடக் கிடையாதே!' என்று வியந்து தமக்குத் தெரியாமல் நாவலில் பிரயோகித்துள்ள வார்த்தையின் பொருளை அகராதியில் தேடிப் பார்த்தார். அவ்வார்த்தையின் பொருள் எந்தச் சந்தர்ப்பத்துக்கு எந்த அர்த்தத்தைக் கொடுக்க உபயோகிக்கப்பட வேண்டுமோ அந்த இடத்தில் கன கச்சிதமாய் விழுந்திருந்தது. அந்த வார்த்தைக்குப் பதில் வேறு வார்த்தையை அவ்விடத்தில் பிரயோகித்திருந்தால் 'அந்த வார்த்தை' கொடுக்கும் அவ்வளவு 'அழுத்தம்' வேறு வார்த்தையிடம் காண முடியாது.

ஆனால் தமக்குத் தெரியாததும், தம்முள் உள்ளதுமான தம் திறமையில் அவருக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

கையில் இருந்த சிகரெட் கருகியது. திருப்பித் திருப்பிக் கையெழுத்துப் பிரதியைப் பார்த்

துக்கொண்டிருந்த அவர் முகத்தில் சற்றே கலவரம் படர்ந்தது. திடீரென்று ஏதோ ஒன்று அவர் மனத்தை நிறைத்து அழுத்த வாரம்பித்தது. அப்போது அவருக்குச் சட்டென்று தன் நண்பன் ஆதிகேசவலுவின் நினைவு வந்தது. அவர் மனத்தை நிறைத்துக் கொண்டிருந்த ஏதோ ஒன்றின் சம்பந்தம் உள்ளவர் அவர். ஆதலால் அவர் மனத்தில் ஆதிகேசவலுக்கு அப்போது இடம் கிடைத்தது. பளிச்சென்று சிரித்த முகத்தோடு 'ஷாங்காய் சில்க்' ஜிப்பாவுடனும் அரையில் தூய வெள்ளை 'கிளாஸ்கோ' மல் வேஷ்டியுடனும் ஆதிகேசவலு அவர் மனத்தில் பிரசன்னமானார்.

ஆதிகேசவலுவும் ஓர் எழுத்தாளர். அவர் ஒரு வாரப் பத்திரிகையில் உதவி ஆசிரியராய் வேலை பார்த்தார். இந்த எழுத்துத் துறையில் அச்சுதராமையாவுக்கு இருக்கும் திறமையும் அநுபவமும் ஆதிகேசவலுக்கு இல்லாது போனாலும் நன்றாக எழுதக் கூடியவர். விளையும் பயிர் அவர்.

ஒரு சமயம், இலக்கியத்தின் விளைந்து வரும் பயிர் ஆதிகேசவலுவின் கதையொன்றை அச்சுதராமய்யா படிக்க நேரிட்டது. அந்தக் கதை அவரைக் கவர்ந்தது. உடனே இளம் எழுத்தாளரை உற்சாகப்படுத்த அவரைத் தட்டிக் கொடுத்து ஒரு பாராட்டுக் கடிதம் எழுதினார்.

தமிழ் இலக்கியத்தின் மேதையிடமிருந்து பாராட்டுக் கடிதம் கிடைக்கப் பெற்றதும், அப்பாராட்டுதலுக்குத் தம் வந்தனங்களைத் தெரிவிக்க ஆதிகேசவலு அச்சுதராமய்யாவை நேரில் கண்டார். பிறகு இருவருக்கும் பரிச்சயம் ஆகியது. முன்னுக்கு வர வேண்டிய அம்சமும், சாத்விக குணமும் மிகுந்திருந்த ஆதிகேசவலுவை அச்சுதராமையாவுக்கு மிகவும் பிடித்து விட்டது. பிறகு நட்பு நெருங்கவே ஆதிகேசவலு தினமும் அச்சுதராமையாவைக் காண அவர் வீட்டுக்கு வருவார். இருவரும் வெகு நேரம் வரை அளவளாவிக் கொண்டிருப்பார்கள்.

ஒவ்வொரு சமயமும் சந்திக்கும்போது, ஆதிகேசவலு, ''இந்தக் கருத்தை வைத்துக் கொண்டு இம்மாதிரி ஒரு கதை எழுதலாம் என்றிருக்கிறேன். தங்களுக்கு இது பிடித்திருக்கிறதா? இந்தக் கருத்தை வைத்துக் கொண்டு கதை எழுதினால் நன்றாக அமையுமா?'' என்று தாம் எழுதப் போகும் கதையின் விஷயங்களை முன் கூட்டி அச்சுதராமய்யாவிடம் சொல்லி, அவருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வார். அச்சுதராமய்யா, ''ரொம்பத் தரமாய் இருக்கிறது'' என்று சொன்னால், உடனே அக்கருத்தை வைத்துக் கொண்டு ஒரு கதை புனைந்து விடுவார். ''இது தமிழ் நாட்டுக்கு ஒவ்வாது. தமிழ் நாட்டில் எடுபடாது'' என்று சொல்லி விட்டாரானால் அக்கருத்தை ஒதுக்கி விடுவார். அப்படித்தான் ஒரு நாள் ''இந்தச் சம்பவத்தை நிலைக்களனாக வைத்துக் 'கற்பூரம்' என்ற தலைப்பில் ஒரு நாவல் ஒன்று எழுத முயற்சி செய்யப் போகிறேன். தங்களுக்குக் கதையும் கருத்தும் பிடிக்கிறதா பாருங்கள்!'' என்று நாவலின் கதை சாராம்சத்தையும் கருத்தையும் எழுதப் போகும் பாணியையும் சொன்னார்.

ஆதிகேசவலு சொன்ன 'நாவல் விஷயம்' மிகவும் மேன்மையாக இருந்தது. அச்சுதராமய்யா அதைக் கேட்டதும், ''இந்த இளம் உள்ளத்தில் விளைந்த கருத்தா இது? நல்ல கற்பனை யல்லவா இது?'' என்று வியந்து விட்டார்.

''இதை நீங்கள் நன்றாக எழுத்துருவில் கொணர்ந்து விட்டால் தமிழ் இலக்கிய உலகத்திலேயே இது சிறந்ததாகி விடும்'' என்று தம் கருத்தைத் தெரிவித்தார்.

''இந்தக் கற்பனை உதயமாகி வருஷம் இரண்டாகி விட்டது. ஆனால் இன்னும் வேளை வரவில்லை, காகிதத்தில் பேனா வழி இறங்க. இன்னும் சில நாட்கள் ஊறப்போட்டுப் பிறகு நன்றாக எழுதலாமென்றிருக்கிறேன்.''

''ஊறப் போட்டால் ஆறிவிடுமே தெரியுமல்லவா? ஆறின கஞ்சி பழங் கஞ்சிதான்!''

பிறகு ஆதிகேசவலு அந்த நாவலைக் கூடிய சீக்கிரம் எழுதி, பிரசுரத்துக்குக் கொடுக்கு முன் அவரிடம் காட்டுவதாகக் கூறி விடை பெற்றுக் கொண்டு சென்றார்.

''நல்ல ரசமான சம்பவம். இதை வைத்துக்கொண்டு நல்ல நாவலாக எழுத வேண்டுமே? விரயம் செய்து விடக் கூடாதே!'' என்று அச்சுதராமய்யா தன்னுள் ஆதிகேசவலு சொன்ன நாவல் விஷயத்தை மென்று கொண்டேயிருந்தார். அதனால் அது அவர் தலையில் பிழம்பாய்த் தேங்கி விட்டது.

''நான் அந்த விஷயத்தை வைத்துக் கொண்டு நாவல் எழுதுகிறேன் என்று சொன்னால் அந்த இளவல் என்ன பதில் சொல்வாரோ?

'நாவல் விஷயத்துக்கு நாம் இரவலுக்குப் போக வேண்டுமா?' இப்படிப் பலப் பல நாட்கள் எண்ணினார். நாட்கள் செல்லச் செல்லத் தன்னால்தான் ஆதிகேசவலு சொன்ன விஷயத்தை நன்றாகக் கையாண்டு நல்ல நாவலாக எழுத முடியும் என்று நினைத்து விட்டார். அந்த நினைப்பு பழுத்து, இப்போது அவர் மேஜை மீதுள்ள தாளில் நாவலாகப் பரிணமித்திருக்கிறது.

கையிலிருந்த சிகரெட் முழுதும் புகைந்து கையைச் சுட்டது. அவசரம் அவசரமாக அந்தத் துண்டைப் பத்தலில் எறிந்து விட்டு மறுபடியும் நாற்காலியில் சாய்ந்தார்.

தாம் எழுதி முடித்துள்ள நாவலின் மூலம் தமக்கு வரப்போகும் புகழையும் பொருளையும் நினைத்துப் பார்த்துக் கொண்டார். நினைப்பு தேகத்தில் வியர்வையைக் கிளப்பியது.

''நாம் புகழ் அடைகிறோம். பொருள் பெறுகிறோம். ஆனால் அது யாருக்கு நியாயமாக உரியது? அப்பா! நாம் வஞ்சகம் அல்லவா செய்து விட்டோம்!'

''அந்த ஆதிகேசவலுவின் சொத்தல்லவா இது? நாம் உண்மையான புகழை அடைய முடியாதே? உலகத்துக்கு இது தெரியாவிட்டாலும் நமக்குத் தெரியுமே? நம் மனத்தை நாம் ஏமாற்ற முடியாதே?

நீங்கள் விரும்பி
உபயோகித்து வரும்

கேசவர்த்தினி

இவ்விளம்பரத்திலுள்ளதுபோல், புதிய அழகிய அட்டைப் பெட்டியில் கூடிய சீக்கிரம் வெளிவரும்.


*



தயாரிப்பாளர்கள் :

கேசவர்த்தினி பிராடக்ட்ஸ்

மதராஸ் -14



பிக்ஸட் டெபாசிட்கள்

கவர்ச்சிகரமான வட்டியில் ரூ 50,000/- வரை
இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

ஒரு வருடமும், அதற்கு மேலும் ஆனால் 2 வருடங்களுக்குள்ளாக	— 6¼ %
2 வருடங்களும், அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்குள்ளாக	— 6½ %
3 வருடங்களும், அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்களுக்குள்ளாக	— 6¾ %
5 வருடங்களும், அதற்கு மேலும் ஆனால் 7 வருடங்களுக்குள்ளாக	— 7¼ %
7 வருடங்களும், அதற்கு மேலும்	— 7½ %

மதராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் லிமிடெட்

எல். எல். ஏ. பில்டிங், 150-A, மவுண்ட் ரோடு, மதராஸ் - 2
போன் : 82026 கிளை : 1231, தெற்கு மெயின் தெரு, தஞ்சாவூர்
டி. வி. நரஸிம்மன் எம். ஏ., ஸி. ஏ. ஐ. ஐ. பி. (செக்ரட்டரி)

Criterion-MII-929-TL

ஆல்போ-ஸாங்

எல்லா வயதினருக்கும்
ஒரு சிறந்த டானிக்

உங்களுடைய உடல்வளர்ச்சிக்கு ஆல்போ ஸாங் அவசியம் தேவை. ஏனெனில் இளையோர் முதியவர்கள் எல்லோருடைய ஆரோக்கியத்திற்கும் உடல் வளர்ச்சிக்கும் தேவையான விசேஷப் பொருள்கள் ஆல்போ ஸாங்கில் இருக்கின்றன.





ஜே. அன் ஜே. டிஷேன்
ஹைதராபாத் (டெக்கான்)

பலத்திற்கும்
ஆரோக்கியத்திற்கும்

பண்டிட் D.கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

69 வருடங்களாக
பிரசித்தி பெற்றது

ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிமிடெட்
சென்னை-17.

பருக்கள் மறைந்து விடுகின்றன

நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தால் முகப்பருக்கள் எல்லாம் மறைந்து விடுகின்றன. இன்றிரவு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகியுங்கள். உங்கள் சருமம் மிருதுவாகவும் வழவழப்பாகவும் மாசு மறுவின்றியும் ஆவதைக் காண்பீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) சருமத்தின் மீது ஏற்படும் முகப்பருக்கள் கட்டிகள், செந்நிறத் தழும்புகள், மேலாக பரவும் படை, படர்தாமரை, வெடிப்புகள் முதலிய உபாதைகளுக்குக் காரணமான கிருமிகளையும், பூச்சிகளையும் அழிக்க விஞ்ஞானமுறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சருமத்தின் மெல்லிய துவாரங்களில் இருக்கும் பூச்சிகளையும், கிருமிகளையும் அழித்தாலன்றி, உங்கள் சரும உபாதைகள் விலகா. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். முகப்பருக்களை மறையச் செய்து சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் இருக்கச் செய்யும் என்ற பூரண நம்பிக்கையுடன் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள்.

''ஆதிகேசவலு என்ன நினைப்பான் நம்மைப் பற்றி? நம் வாயில் மண்ணைப் போட்டு விட்டு, நம் சட்டையில் புகுந்து மினுக்கு கிறானே என்று பொருமமாட்டானா? அதே நம்மை எரித்து விடுமே!''

அவருக்கு உள்ளம் எரிந்தது. எரியும் உள்ளத்தில் எண்ணங்கள் விளைந்தன.

நாவல் தாள்கள் காற்றில் பறக்க ஆரம்பித்தன. அதன் மேல் ஒரு 'கன'த்தை வைத்து விட்டு நாற்காலியில் சாய்ந்தார். இமைகள் அசதியில் ஒன்றை ஒன்று தழுவின.

(2)

இரு தினங்கள் கழித்து அச்சுதராமய்யா கடற்கரைப் பக்கம் உலாவச் சென்றிருந்தார். அப்போது தற்செயலாக எழுத்தாளர்கள் இருவரைச் சந்தித்தார்.

மூவரும் குசலம் விசாரித்துக் கொண்டனர். அப்போது அந்த நண்பர்களில் ஒருவர், ''ஒரு நிதி திரட்ட எண்ணியிருக்கிறோம். தாங்களும் உதவி செய்ய வேண்டும்'' என்று கூறினார்.

''நிதியா? யாருக்கு? ஏன்?'' ஆச்சரியத்துடன் கேட்டார் அச்சுதராமய்யா.

''யாருக்கா? என்ன சார், உங்களுக்குத் தெரியாதா? நம்ம ஆதிகேசவலுக்குத்தான்.''

''நிதி திரட்டும்படி அவருக்கு என்ன ஆகிவிட்டது இப்போது? தமிழ் நாட்டில் எழுத்தாளன் உயிருடன் இருக்கும்போதே நிதி திரட்டிக் கொடுத்துக் கௌரவிக்கப் போகிறீர்களா என்ன? இல்லாத வழக்கமாக இருக்கிறதே! ஆச்சரியம்தான் போங்கள். அப்படியானால் என்னாலானதைக் கொடுத்து உதவுகிறேன்'' என்றார்.

உடனே மற்றவர் ''உயிருடன் இருக்கிறாரா? நீங்கள் இந்த உலகத்தில்தான் இருக்கிறீர்களா! என்ன? ஏது? என்று ஒன்றும் புரியாதவர் போல் பேசுகிறீர்களே? இந்த ஊர்தானா உங்களுக்கு? இத்தனைக்கும் உங்களுக்கு ரொம்பப் பரிச்சயமானவர் அல்லவா ஆதிகேசவலு?'' என்றார்.

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை, ஐயா! விஷயத்தை விவரமாகச் சொல்லுமே. புதிர் போடாதேயும்'' என்று பதறினார் அச்சுதராமய்யா.

''என்னய்யா இது? ஆதிகேசவலு தவறி இன்றுடன் மூன்று நாளாகிறது. உங்களுக்குத் தெரியாதா? நாலைந்து நாட்கள் முன்பு ஏதோ தமிழ்ப் படத்துக்குப் போய் விட்டு இரவு வெகுநேரமாகி வீடு திரும்பினவர் 'தலையை வலிக்கிறது' என்று படுத்தார். படுத்தவர்தான் அப்புறம் எழுந்திருக்கவே இல்லை.''

''அய்யாவ்! நிசமாகவா, விளையாடுகிறீர்களா? என்னால் நம்பவே முடியவில்லையே! அன்றுதான் அவர் என் வீட்டுக்கு வந்திருந்தார். என்னையும் படத்துக்குக் கூப்பிட்டார். எனக்கு வேறு ஜோலி இருந்ததால் அன்று அவருடன் செல்லவில்லை. தமிழ்ப் படம் அவ்வளவு மோசமா? அதுவா அவரைக் கொன்று விட்டது.'' அச்சுதராமய்யாவுக்குச் செய்தி கேட்டு உள்ளங்கால் சில்லிட்டது.

''பெரிய 'பாம் ஷெல்'லான்னா தூக்கிப் போடுகிறீர். ஏதோ பெரிய புளுகு மாதிரி அல்லவா இருக்கிறது உங்கள் செய்தி! என்னாலே நினைக்கக்கூடப் பார்க்க முடியவில்லையே?'' என்று மறுபடியும் கூறிவிட்டுப் பெருமூச்சு விட்டார்.



''ஏன் எங்கிட்டே இதுவரைக்கும் ஒரு தடவைகூட கோவிச்சுண்டதில்லேன்னு பொய் சொல்றீங்க...? நம்ம கல்யாணத்திலே காசி யாத்திரையின்போது நீங்க கோவிச்சுண்டு கிளம்பல்லே?''

''ஆமா சார்! அவர் சிரிச்ச முகமும் சில்க் ஜிப்பாவும் இன்னும் மறக்கலே. அவர் சாவை நினைச்சா அப்படியே நெஞ்சு நிறைகிறது. அவ்வளவுதான். இனிமேல் 'ஐயோன்னு' வருவாரா? 'அப்பா'ன்னு வருவாரா? பாவம் அவர் இளம் மனைவியையும், ஒன்பது மாதக் குழந்தையையும் நினைச்சாத்தான் துக்கம் பீறிட்டுக் கொண்டு வருகிறது. அவர்களை நிர்க்கதியாக விட்டு விட்டுப் போய்விட்டார். அவர்கள் குடும்ப சம்ரக்ஷணைக்குத்தான் நிதி திரட்டத் தீர்மானித்திருக்கிறோம்.''

''அதற்கென்ன, நான் முதலில் ஐந்நூறு ரூபாய் தருகிறேன். பிறகு அப்புறம் ஏதாவது... ஆமாம், மனுஷன் தமிழ் நாட்டுக்கு ஏதாவது எழுதி வைத்து விட்டுப் போயிருக்கிறாரா? என்னிடம் ஏதோ நாவல் ஒன்று எழுதப் போகிறேன் என்று அவர் சொல்லியிருந்தார்.''

''எழுதினாவது, மண்ணாவது! அதுவும் நாவலா? பேஷ்! நம் பத்திரிகைக்குக்கூடப் போன ஒரு மாசமா ஒரு மணி கூட எழுதவில்லை.''

''சரி, நான் வருகிறேன். நாளைக்கு வீட்டுக்கு வாருங்கள். ஐந்நூறுக்குச் 'செக்' தருகிறேன்'', என்று விடைபெற்றுக்கொண்டு அச்சுதராமய்யா கிளம்பினார்.

ஆதிகேசவலுவின் சாவைக் கேட்டதும் நியாயமாக ஏற்பட வேண்டிய அனுதாபம் மனத்தின் ஒரு பக்கமிருந்தாலும் சந்தோஷத்தின் புதுப் பாய்ச்சல்தான் அச்சுதராமய்யாவின் மனத்தை நிறைத்திருந்தது.

ஏதோ பகைவன் மரித்த சேதி போலிருந்தது. பங்காளிக்காரன் போன எக்காளமாயிருந்தது.

'இனி நாவலைத் தைரியமாய்ப் பிரசுரம் செய்யலாம்!' என்று எண்ணம் ஓங்கி எழுந்தது, அவர் மனத்தில்.

'ஒரு வேளை ஆதிகேசவலு நாவலை எழுதத் தொடங்கி யிருக்கலாமோ? பாதி எழுதி வைத்து விட்டுப் போயிருக்கலாமோ? என்ற வினவுக்கும் பதில் கிடைத்து விட்டதே!' வழி நெடுகச் சிந்தனை செய்துகொண்டே நடந்தார்.

திடீரென, எதிர்பாராதவாறு மனத்தின் ஆழத்தில் ஒரு முள் பாய்ந்தது. மனச்சாட்சி தான் குத்தியது. என்ன செய்வது என்று தெரியாமல், வேகாமல் தான் தாமே தம் முன்னே வெந்து துடித்தார்.

'நாவலை ஆதிகேசவலுவின் பெயரில் வெளியிட்டு, அதற்குக் கிடைக்கும் சம்மானத்தை அவர் மனைவியிடம் ஒப்படைத்து விடலாம். வேண்டாம், திருட்டுச் சொத்து, அவலப் புகழ்!' என்று ஒருகணம் நினைத்தார்.

'இப்போது ஆதிகேசவலுவின் குடும்பம் வேண்டுவது புகழல்ல, பொருளல்லவா ? 'நாவலைத் தன் பெயரிலேயே பிரசுரித்து, புகழைத் தான் கவிகரித்து, சன்மானமாகக் கிடைக்கும் தொகையை ஆதிகேசவலுவின் விதவை மனைவியிடம் கொடுத்து விடுவோம்' என்ற அவல நினைப்பு மறுகணம்.

அவல நினைப்பின் கூத்துத் தான் வெற்றியடைந்தது. "கற்பூரம்" என்ற நாவல் புத்தக உருவில் வெளியானதும் அச்சுதராமய்யாவை உலகமே போற்றியது. 'இதுவரையில் உலக இலக்கியத்திலே கண்டிராத புதுமை' என்றும், 'கற்பனையின் சிகரம்' என்றும் பத்திரிகைகள் புகழ்ந்தன.

"புகழ்.... புகழ்.... புகழ்" என்று நாற்காலியின் சட்டத்திலே தலைசாய்த்துக் கண்ணயர்ந்திருந்த அச்சுதராமய்யாவின் வாய் முணுமுணுத்தது. திடீரென்று கண் விழித்துக் கொண்ட அவர் தாம் இதுவரை கண்டது ,கனவு எனப் புரிந்து கொண்டார். கனவை நனவாக்க விரும்பினவர்போல், கண்ட கனவை மறுபடியும் மனத்திலே அசை போட்டார். 'புகழ்.... புகழ்.... புகழ்' என்று அரற்றினர். அரற்றினவர் திடீரென வலி பொறுக்காது மார்பைப் பிடித்துக்கொண்டார். 'அம்மா!' என்ற அலறலோடு நாற்காலியில் சாய்ந்து விட்டார்.

3

மறுநாள் காலை ஏழு மணியிருக்கும். ஆதிகேசவலு கையில் ஒரு பையுடன் அச்சுதராமய்யாவின் பங்களா வாசற்கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்.

வாசல் தோட்டத்தில் பூக்கொய்து கொண்டிருந்த சமையற்காரன் கிட்டாணை, "அச்சுதராமய்யா இருக்கிறாரா?" என்று வினவியதற்கு, "இன்னும் எழுந்திருக்கலே போலிருக்கு. ராத்திரி முழுக்கக் கண் விழித்து ரொம்ப நாழி ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். போய் அவர் அறையிலே பாருங்கோ" என்று பூக்கொய்து கொண்டே பதில் சொன்னான்.

ஆதிகேசவலு பங்களாவுக்குள் நுழைந்து அச்சுதராமய்யாவின் படுக்கை அறையை நோக்கிச் சென்றார். அறையின் வாசற்படியை அடைந்ததும், அச்சுதராமய்யா நாற்காலியில் சாய்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தார்.

நாற்காலியின் பக்கம் சற்று நெருங்கி, "சார், நான் வந்திருக்கிறேன், ஆதிகேசவலு!" என்றார்.

பதில் இல்லாது போகவே, நாற்காலி பக்கம் சென்று பார்த்தார். அச்சுதராமய்யா கண்களை மூடிக் கொண்டு நாற்காலியின் பின் சட்டத்தில் சாய்ந்திருந்தார். ஆதிகேசவலு அவர் தோள் பட்டையை உலுக்கினார். 'லொடக்' என்று தலை முன்புறம் கவிழ்ந்தது.

அவருக்குப் பயம் கண்டது. கையைப் பிடித்துக் குலுக்கினார். அச்சுதராமய்யா நாற்காலியின் முன்பக்கம் மூட்டையாக விழுந்தார். ஆதிகேசவலு அவரை அப்படியே பிடித்துக் கொண்டார். அவருக்கு உதறல் எடுத்தது. அடித் தொண்டையிலிருந்து, "கிட்டாணி.... கிட்டாணி !" என்று கத்தினார்.

தோட்டத்தில் ஏணி போட்டு மல்லிகைப் பந்தலிலிருந்து பூப்பறித்துக் கொண்டிருந்த கிட்டாணி கூக்குரலைக் கேட்டதும் கையிலிருந்த பூக்குடலையோடு ஓடி வந்தான்.

"என்ன.... என்ன? என்ன ஆச்சு ?" என்று அலறினான்.

"இதோ பாரு.... மெதுவாய்ப் பிடி. எனக்கு என்னவென்று தெரியாது. நான் வந்தப்போ இந்த நாற்காலியிலே சாய்ந்திண்டிருந்தார். தூங்குகிறாரோன்னு நினைச்சேன். ஏதாவது வலிப்பு கிலிப்பு உண்டோ ? டாக்டருக்குச் சொல்லி அனுப்பறேன் " என்று பதறினார் ஆதிகேசவலு.

தாம் ஏதேனும் செய்துவிட்டதாக, தப்பிதமாகச் சமையற்காரன் நினைத்துக் கொண்டு விடக் கூடாதே என்ற பயத்துடன் ஆதிகேசவலு சொன்னார்.

"இல்லையே.... அதெல்லாம் ஒன்றும் கிடையாதே.....!" சொல்லிக் கொண்டு அவர் மூக்கருகே கையை வைத்துப் பார்த்தான் கிட்டாணி.

"ஐயையோ ! சுவாசம் வரலையே. நீங்க பாருங்கோ. எனக்குத்தான் தெரியலையா ஒரு வேளை!" அச்சுதராமய்யா இறந்திருக்கக் கூடும் என்ற நினைப்புத் தோன்றுதலினால் ஆதிகேசவலு அவர் சுவாசத்தை முதலிலேயே சோதிக்கவில்லை. அவரும் நாசியில் கை வைத்துச் சோதித்தார்.

"மூச்சு இல்லையே......!" என்று மெதுவாக அவரைப் பிடித்துக் கட்டிலின்மீது கிடத்தினார்கள்.

"நான் போய் டாக்டரை எதற்கும் கூட்டிண்டு வர்றேன். நீங்க ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கோ" என்று கிட்டாணி ஓடினான். ஆதிகேசவலுவுக்கு ஒன்றும் ஓடவில்லை. "இதேதடா காலங் காலையில்

இப்படி நேர்ந்து விட்டதே'' என்று இலேசம் அடைந்தார்.

பொறியில் அகப்பட்டுக் கொண்ட எலி போல் அறையில் குறுக்கும் நெடுக்குமாக, கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு நடை போட்டார், மனத்தில் பீதியுடன். அப்போது அவர் பார்வை மேஜையின் மீது பாய்ந்தது. 'கனத்'தினடியில் இருந்த கட்டுக் காகிதத்தைக் கண்டவுடன் அவர் அதை நெருங்கிப் பார்த்தார். ''கற்பூரம்'' என்ற தலைப்பைப் பார்த்ததும் திடுக்கிட்டார். உடனே அவலோடு ஆரம்பத்தைப் படிக்க ஆரம்பித்தார். நடுவில் புகுந்து படிக்கலானார். முடிவைப் புரட்டினார்.

தாம் கையோடு கொணர்ந்திருந்த பையிலிருந்து ஒரு காகிதக் கத்தையை எடுத்தார். அது அவர் எழுதியிருந்த நாவல். எழுத்தாளர் அச்சுதராமய்யாவிடம் படித்துக் காண்பித்து அவர் அபிப்பிராயம் தெரிந்து கொள்ள அதைக் கொண்டு வந்திருந்தார்.

தாம் வைத்துக் கொண்டு எழுதியுள்ள சம்பவத்தை வைத்தே அச்சுதராமய்யா நாவல் புனைந்திருப்பதைக் கண்டு முதலில் திகைத்தார். பிறகுதான், அந்தச் சம்பவத்தைத் தாம் முன்பு அச்சுதராமய்யாவுக்குச் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

வாசலில் மோட்டார் 'ஹாரன்' சத்தம் கேட்டதும், அவசர அவசரமாகத் தாம் கொண்டு வந்ததையும் அச்சுதராமய்யா எழுதி வைத்திருந்ததையும் எடுத்துத் தம் பையில் திணித்துக் கொண்டார்.

டாக்டர் வந்தவுடன் தாம் வந்ததையும் மற்ற சமாசாரத்தையும் விவரித்துச் சொன்னார் ஆதிகேசவலு.

கட்டிலில் அயர்ந்து ஆயாசத்துடன் தூங்குவது போல் படுத்திருந்த அச்சுதராமய்யாவைப் பரிசோதித்த டாக்டர், மாரடைப்பு காரணமாக அவர் இறந்துவிட்டாரென்று கூறினார்.


4

மறுதினம் எல்லாத் தினசரிகளிலும் கொட்டை எழுத்துக்களில் பிரபல எழுத்தாளர் அச்சுதராமய்யாவின் திடீர் மரணத்தைக் குறித்துப் பத்தி பத்தியாக எழுதியிருந்தது.

ஆதிகேசவலு, தாம் உதவியாசிரியராயிருந்த வாரப் பத்திரிகையின் இதழ்களில் அச்சுதராமய்யாவின் வாழ்க்கைக் குறிப்பை எழுதியிருந்தார். அதில் எழுத்தாளர் அச்சுதராமய்யா தாம் இறப்பதற்குமுன் எழுதிவிட்டுச் சென்றுள்ள — நாகம் சாவதற்குமுன் கக்கிவிட்ட மாணிக்கம்போல் மகோன்னத நாவல் ஒன்று அந்தப் பத்திரிகையின் மறு இதழில் தொடங்குகிறது என்றும் அந்நாவலுக்கான சன்மானத்தைக் கொண்டு, 'எழுத்தாளர் மன்ற'த்தில் அச்சுதராமய்யாவின் உருவச் சிலை ஒன்றை நிறுவப் போவதாகவும் குறித்திருந்தார்.

எழுத்தாளர் அச்சுதராமய்யா தாம் விரும்பிய புகழை நிச்சயமாக எய்திவிட்டார்!





புராதன எகிப்தியர்கள் இறந்த உடலைப் பாதுகாத்து வைக்க (மம்மி) ரகசியமான இரசாயன முறைகள் பல தெரிந்து வைத்திருந்தார்களா ?

அப்படித்தான் இது வரையில் நினைத்து வந்தார்கள். ஆனால் ரசாயன முறைகள் இரண்டாம்பட்சம்தானும்.

எகிப்து நாட்டின் சீதோஷ்ண நிலையும், அந்த நாட்டு மணலில் பாக்டீரியா போன்ற கிருமிகள் இல்லாததும், அந்த நாட்டின் காற்றும் தான் பிரேதங்கள் கெடாமல் அப்படியே இருக்கக் காரணம் என்று விஞ்ஞானிகள் இப்போது கூறுகிறார்கள். எகிப்திய மண்ணில் புதைக்கப் பட்ட பிரேதங்கள் கொஞ்சம்கூடக் கெடாமல் ஆயிரம் ஆண்டுகளாக இருக்க, மிகக் கவனமாக ரசாயனப் பக்குவம் செய்து வேறு ஊர் மண்ணில் புதைக்கப்பட்ட சவங்கள் விரைவில் சேதமடைந்துவிட்டனவாம்.

ஆதாரம்: பேஜண்ட்
நகவல்: ''சாமிநாதன்''

சுட்டி சுட்டதுடா • சுட்டி சுட்டதுடா • சுட்டி

ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருப்பதை எதிர்த்து வடக்கே போராட்டங்கள் நடந்தன அல்லவா? போராட்டங்களுக்கிடையில் நடந்த இரு சுவையான நிகழ்ச்சிகள்:

தில்லி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கல்லூரி ஒன்றில், ஆசிரியர் ஒருவர் காரில் வந்து இறங்கினார். உடனே அவரை நோக்கிச் சில மாணவர்கள் கையில் தார்ச் சட்டியுடன் வந்தனர். அவர்கள் அருகே நெருங்கியதும், ''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று ஆசிரியர் கேட்க, மாணவர்கள், ''உங்கள் காரின் எண் பலகை ஆங்கிலத்தில் உள்ளது. அதை அழிக்கப் போகிறோம்'' என்று கூறினர்! உடனே அந்த ஆசிரியர், தார்ச் சட்டி வைத்திருந்த மாணவனை அருகே அழைத்து, அவனது கோட்டில் உட்புறம் தையற்காரரின் ''லேபிள்'' இருக்கிறதா என்று பார்க்கச் சொன்னார்.

பரீட்சை எழுதுங்கள்! பரீட்சை

அதற்குள் பேனாவைத் திறக்க வேண்டாம். வினாத் தாளை ஒரு முறை முழுக்கப் படித்து விட்டுப் பிறகு எழுதத் தொடங்குங்கள் !

1. பாபர் சக்கரவர்த்தியின் தலைப் பாகத்தை வரைந்து சிறு குறிப்பெழுதுக.
2. அசோக மன்னரின் மனமாற்றம் இரசாயன மாற்றமா ? இல்லை, பௌதிக மாற்றமா?
3. சந்திரகுப்த மௌரியரின் 'லார்வா' பருவத்தை விவரி.


பல்சுவைப் பக்கம் • 2

மாணவனும் அப்படியே பார்த்தான். கோட்டில் தைக்கப்பட்டிருந்த அந்த ''வில்லே'' ஆங்கிலத்தில் இருந்தது. உடனே கோட்டைக் கழற்றச் சொன்னார் ஆசிரியர். பிறகு அவனது சட்டைக் காலரின் உட்புறம் பார்க்கச் சொன்னார். அதில், ''லிபர்ட்டி''



என்று ஆங்கிலத்தில் ''வில்லே'' இருந்தது. அதனால் சட்டையையும் கழற்றி விட்டான் மாணவன். உள் ஆடையுடன் நின்ற அம்மாணவனைப் பார்த்து, ''இந்த உள் ஆடைகளிலும் ஆங்கில 'வில்லே', இருக்கிறதே!'' என்றார் ஆசிரியர். அவ்வளவுதான்; மாணவர்கள் தார்ச் சட்டியுடன் பறந்துவிட்டனர்.

ஆதாரம் : மாட்ரியாட்.
தகவல் : வியெஸ்டே.



மேற்கே உதிக்கும் சூரியன்

பூமியும் மற்ற இயற்கைக் கோள்களும் தாமே சுழல்வதோடு சூரியனையும் சுற்றி வருகின்றன. பொதுவாக இவையனைத்தும் இடது புறம் சுழல்கின்றன. ஆனால் சுக்கிரனுடைய சுழற்சி வலப்புறமானது எனக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. எனவே, சுக்கிரனில் மக்கள் வாழ்ந்தால் அவர்கள் சூரியன் மேற்கே உதித்து, கிழக்கில் மறைவதைக் காண்பார்கள்.

தகவல்: த. ஜெயச்சந்திரன்

ஆதாரம் :
விஞ்ஞான விந்தைகள்

எழுதுங்கள்! பரீட்சை எழுதுங்கள்! பரீட்சை எழுதுங்கள்! பரீட்சை




4. அக்பர் சக்கரவர்த்தியின் கையில் உள்ள மலரின் ''விதை பரவும்'' முறையைப் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

5. பாம்பு, தேள், சினர்கள் — இவர்களுக்கு உள்ள விஷ(ம)த் தன்மையை விளக்கமாக எழுதுக.

ஏன் தவிக்கிறீர்கள்? சமூக நூல் ஆசிரியர் 'அவசரமாக வெளியூர் செல்ல நேர்ந்து விட்டது. பரீட்சை நேரம். கேள்வித் தாள் தயாரிக்கும் பொறுப்பை! அவர் விஞ்ஞான ஆசிரியர் தலையில் கட்டிவிட்டுப் போய் விட்டார். இப்போது மறுபடியும் கேள்வித் தாளைப் படித்துப் பாருங்கள். பொருத்தம் புரியும்.

உடையாளூர் வி. ஜெயராமன்

வெள்ளித்திரை வைபவம்



'காந்தன்'

கவர்ச்சி உண்டு கவலை வேண்டாம்!

எழிலரசி நிருபமா தேவிக்கு 'மேக்கப்' மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. சொல்லி வைத்தாற்போல் அவள் ரவிக்கையிலும், பாவாடையிலும் சில இடங்களில் வட்டமாகவும், சதுரமாகவும் ஒட்டுப் போட்டுத் தைக்கப் பட்டிருந்தன. தாவணியிலும் ஒட்டுக்கள் தெரிந்தன. அவள் தலை மிகவும் சிரமப்பட்டுக் கலைக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ்வளவு ஏழைமைத் தோற்றத்திலும், எடுத்துக் காட்ட வேண்டிய அங்க அழகுகள் எடுப்பாய்த் தெரிந்தன. அவளைக் கவர்ச்சிப் பிச்சைக்காரியாக்க மேக்கப்கலைஞர் தம் கைவரிசையைக் காண்பித்துக் கொண்டிருந்தார்.

சாதாரணப் பிச்சைக்காரியாயிருந்தால் எண்ணெயே காணாத பரட்டைத் தலையும், அழுது வடியும் முகமுமாயிருக்கலாம். ஆனால் வெள்ளித் திரைப் பிச்சைக்காரியின் நிலைமை வேறு. எவ்வளவு ஏழைமைக் கோலம் பூண்டிருந்தாலும் அவள் முகம் பளிச்சென்று ஒரு பத்திரிகையின் அட்டைப் படத்தில் வருவதற்குத் தக்கபடி இருக்க வேண்டும். இதில் முக்கியமாகக் கவனத்தில் வைக்க வேண்டியது ஒன்று — அதுதான் அதிர்ஷ்டமச்சம். பிச்சைக்காரியின் முகத்தில் அது அவசியம் இருந்தே தீர வேண்டும். அத்துடன் அது நன்றாய்த் தெரியும்படியான இடத்தில் இருக்க வேண்டும். சாதாரணப் பிச்சைக்காரி மாதிரி அவள் தள்ளாடித் தளர் நடை நடக்கக் கூடாது; அவள் நடையில் ஒரு நளினம்; பார்வையில் ஒரு கவர்ச்சி யூட்டும் சோகம் தெரிய வேண்டும். சோகத்தில் கவர்ச்சி வேறு கேடா என்று கேட்பதில் பயனில்லை. அவள் சோகப் பார்வை கதாநாயகனின் கவனத்தைக் கவர்ந்தாக வேண்டுமே!

உண்மைப் பிச்சைக்காரி எங்கேயாவது மயக்கம் போட்டு விழுந்தால் எப்படி வேண்டுமானாலும் விழலாம். ஆனால் வெள்ளித் திரைப் பிச்சைக்காரி மயக்கம் போட்டு விழுவதிலும் ஒரு கவர்ச்சியான 'போஸ்' கொடுக்கவேண்டும். அதுமாத்திரமா? டைரக்டர் காட்டும் இடத்தில் அவர் சொல்லிக் கொடுக்கிற மாதிரிதான் விழ வேண்டுமாகும். அவருக்குத் திருப்தி ஏற்படுகிற வரையிலும், அவர் 'ஓகே' சொல்லுகிற வரையிலும் விழுந்து கொண்டே இருக்க வேண்டும்.

ஒருவாறு பிச்சைக்காரி மேக்கப் முடிந்தது. ஸ்டுடியோத் தெருவில் அவள் நடந்து செல்ல வேண்டிய முறையையும், பாவனையையும் டைரக்டர் நிருபமா தேவிக்கு விளக்கிக் காட்டினார்.

நிருபமா தேவி அவர் சொல்லிக் கொடுத்த மாதிரியே நடித்துக் காட்டினாள்.

டைரக்டர் ''ஓகே!'' என்று உற்சாகம் பொங்கும் குரலில் உரக்கக் கத்தினார். பிறகு ''ஸைலன்ஸ்!'' என்று குரல் கொடுத்தார்.

யார் இட்ட சாபமோ!
யான் செய்த பாபமோ!
எவர்கொண்ட கோபமோ!
அறியேன் அம்மா...!

என்ற பாடல் பின்னணி வாத்திய ஒலியுடன் இனிமையான குரலில் கேட்டது. நிருபமா தேவியின் மீது ஒளி வெள்ளம் படிந்தது. அவள் பாடும் பாவனையோடு அபிநயத்துடன் நடந்து வீடு வீடாகச் சென்று பிச்சையெடுத்தாள். 'எக்ஸ்ட்ரா'க்கள் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் விதம் விதமான உடைகளில் வந்து நிருபமா தேவியின் கையிலிருந்த தகர டப்பாவில் பிச்சை போட்டனர்.

இந்தக் காட்சி இரண்டு மூன்று தடவை பரீட்சிக்கப்பட்ட பிறகு டைரக்டர் 'ஓகே' செய்து ''டேக்!'' என்றார். இறுதியில் 'கட்' என்றார்.

காட்சி முடிந்ததும் நிருபமா தன் தாயார் இருந்த இடத்துக்கு ஓடிச் சென்றாள். அந்த அம்மாள் அவளை இறுகத் தழுவிக்கொண்டு, ''என் கண்ணு! நீ பிச்சைக்கார வேஷத்திலே கூட இத்தனை அழகாயிருக்கிறாயே! வீட்டுக்குப் போனதும் முதல் காரியமாகச் சுத்திப் போடணும். இந்தா ஜூஸ். இதைக் குடித்துவிட்டு அப்புறம் சாப்பாடு சாப்பிடலாம்...'' என்றாள்.

நிருபமா தாயார் கையிலிருந்து பழரசத்தை வாங்கி, மேக்கப் கலையாமல் நாசூக்காகக் குடித்தாள்; பிறகு சாம்பார் சாதத்தை உருட்டி இரண்டு உருண்டைகள் போட்டுக் கொண்டு கையலம்பிக் கொண்டாள்.

''என்னடி இது, அநியாயமாயிருக்குது. என்ன சாப்பாடு நீ சாப்பிடறே? உடம்பு இளைக்கணும்னு சோற்றைக் குறைச்சுத்தின்னு உடம்பு என்னத்துக்கு ஆகும்?... ஆமாம், இந்தக் கண்ணராவி உடையையும் மேக்கப்பையும் எப்ப கலைஞ்சு எறியப்போறே?''

''இப்போது முடியாது அம்மா. இன்னிக்கு முழுக்க இதே காட்சியை இன்னும்

படமாக்க வேண்டியிருக்கு!'' என்று சொல்லிக்கொண்டே டைரக்டர் அங்கே வந்தார்.

''வாங்க டைரக்டர் ஸார். இன்னும் இந்தக் கண்ணாமூலிக் காட்சி நிறைய இருக்குதா? நல்ல நடனக் காட்சி, நீச்சல் குளக் காட்சி எல்லாம் இருக்குன்னு சொல்லித்தானே குழந்தையைப் படத்துக்கு ஏற்பாடு பண்ணினீங்க! ஆனால் படத்தில் குழந்தைக்குப் பிச்சைக்காரிக் கோலத்தைத் தவிர வேறு எதையும் காணோமே!''

''நீங்க அவசரப்படக் கூடாது, அம்மா! நல்ல ஜோரான காட்சிகளெல்லாம் நிறைய இருக்கு. இந்தப் பிச்சைக்காரி வேஷத்தை மட்டமா நினைக்காதீங்க. இதிலே நல்ல பெயர் கிடைக்கும். இந்தக் காட்சி எல்லாரையும் ஒரு குலுக்குக் குலுக்கிவிடத்தான் போகிறது. குழந்தை இந்தக் காட்சியிலே அற்புதமா நடிச்சிருக்கா.''

நிருபமாவின் தாயாரும் டைரக்டரும் பேசிக்கொண்டிருந்தபோது வெள்ளித்திரை வெங்கு அங்கே வந்தான்.

''என்னம்மா சொல்றீங்க? பிச்சைக்காரி வேஷம் பிடிக்கலேங்கிறீங்களா? அது சாதாரணப் பிச்சைக்காரியா? பணக்கார வீட்டுப் பிள்ளையை மயக்கி வசீகரம் பண்ணப் போற பெரிய பிச்சைக்காரியாச்சே! அதனாலே கவலைப்படாதீங்கம்மா! மேலும் நம் சமூகத்திலேதான் பிச்சைக்காரின்னா யாரும் மதிக்கிறதில்லே. பட உலகிலே அப்படியில்லே. பெரிய பெரிய நடிகைகளெல்லாம் கிழிந்த பாவாடை, தாவணியோடு வந்து வெள்ளித் திரையில் தோன்றித்தான் புகழ் பெற்ற நடிகைகளாகியிருக்காங்க. நம் குழந்தை நிருபமாவுக்குக்கூட இப்போது நல்ல காலம் ஆரம்பமாகியிருக்குன்னுதான் நான் சொல்லுவேன்!'' என்று வெள்ளித்திரை வெங்கு சொல்லி முடிப்பதற்கும், டைரக்டர் ''சபாஷ்! அப்படிப் போடுடா ராஜா!'' என்று பாராட்டுவதற்கும் ஹீரோவின் கார் வருவதற்கும் சரியாக இருந்தது.

கார் வந்து போர்ட்டிகோவில் நின்றதோ இல்லையோ, வெங்கு ஓடி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து காரின் கதவைத் திறந்து பெரிய கும்பிடாய்ப் போட்டான்.

காரிலிருந்து இறங்கியது கிருஷ்ண பரமாத்மா! நீல மேக சியாமள வர்ணனாய், பீதாம்பரதாரியாய், நவரத்தினக் கற்களால் பளபளவென்று பிரகாசிக்கும் கிரீடம் அணிந்தவனாய் ஹீரோ பிரபாகர் இறங்கினான். தான் கிருஷ்ண பரமாத்மா இல்லை என்பதைக் குழப்பமில்லாமல் நிரூபிக்கப் பிரபாகர் கையில் சிகரெட்டை எடுத்து லைட்டரின் உதவியினால் அதைக் கொளுத்திக் குப் குப்பென்று புகையை ஊதினான்.

''ஹல்லோ!'' என்று கூறி டைரக்டர் அவனை வரவேற்றார்.

''மேக்கப்பைக் கலைக்க அவகாசம் இல்லை. அப்படியே ஸ்டுடியோவிலிருந்து வந்துகொண்டிருக்கிறேன். அரோஹரா பிக்சரின் ''கிருஷ்ணன் தூது'' படத்தில் நடிச்சுக்கிட்டிருக்கேன் என்பது தெரியும் இல்லையா?'' என்றான் பிரபாகர் நாசூக்காகச் சிகரெட்டைக் கையில் வைத்துக்கொண்டு.

''ஆகா, தெரியுமே! அதனாலே பாதகம் இல்லே. இந்த வேஷத்தையே நம்ம படத்துக்கும் உபயோகப்படுத்திவிட்டால் போவுது...'' என்றார் டைரக்டர்.

''அது எப்படி முடியும்?'' என்கிற ஒரே கேள்வியைப் பிரபாகர், வெள்ளித் திரை வெங்கு, நிருபமா தேவி ஆகிய மூவரும் ஒரே சமயத்தில் வியப்புடன் கேட்டார்கள்.

''கனவுக் காட்சி ஒன்று போடறதாகத் 'திங்க்' பண்ணி வச்சிருக்கேன். பிச்சைக்காரி அலுத்துப் போய் ஒரு பார்க்கிலே படுத்துத் தூங்கிடறா. அப்போ அவள் காதலன் கண்ணபிரான் தோற்றத்தில் வருவதாகவும் தான் ராதையாக மாறி அவனோடு ஆடிப் பாடுவதாகவும் ஓர் அற்புதமான கனவு காண்கிறாள். முதலில் கண்ணன் மாத்திரம்



ஆடுவான். பிறகு அவனோடு நிருபமாகவும் ராதையாக மாறி ஆடுவாள் — எப்படி நம் ஐடியா?'' என்று கண்களைச் சிமிட்டிக்கொண்டே கேட்டார் டைரக்டர்.


''ரொம்ப நல்ல ஐடியாதான் ஸார்! அதோடே இன்னொரு சின்ன ஸஜெஷன். பார்க்கிலே வர்ண மலர்களுக்கு இடையிலே கிருஷ்ண பரமாத்மா அப்படியே மயில்வாகனத்தில் வந்து இறங்குகிறமாதிரி படம் பிடிக்கலாம். நாம எடுத்துக்கிட்டிருக்கிறது கலர்ப் படம். அதுக்கு நல்லா இருக்கும்!'' என்றார் படாதிபதி.

''கலர்ப் படத்துக்கு மயில் வாகனம் நல்லாத்தான் இருக்கும். ஆனா கண்ணன் மயில் வாகனத்திலே வரதா எந்தப் புராணத்திலேயும் கேள்விப்பட்டதில்லையே''.... என்று இழுத்தார் டைரக்டர்.

''கனவுக் காட்சிதானே ஸார்! மயில் வாகனமென்ன? ஸ்புட்னிக்கிலேயே கூட வந்து இறங்கலாம்'' என்றான் வெங்கு.

படாதிபதி தலையில் ஐஸ் வைப்பது எப்படி என்று வெங்குவுக்குச் சொல்லித் தரவா வேணும்!

B-I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து

1968 பிப்ரவரி 8 — 1968 மார்ச் 3

சென்னையிலிருந்து பினங்கு மற்றும் சிங்கப்பூருக்கு பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசதாரருக்கு விண்ணப்பிக்கவும்.

மெஸர்ஸ் பின்னி & கோ., லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை—1

அல்லது கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம்பெற்ற பாஸேஜ் புரோக்கர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

C. M. குட்டி
புரொப்ரைட்டர் : குட்டி டிராவல் சர்வீஸ்
38, அங்கப்ப நாயக்கன் தெரு
சென்னை - 1

மெஸர்ஸ் கேரளா டிராவல்ஸ்
மாஸ்காட் ஹோட்டல்
திருவனந்தபுரம்

மெஸர்ஸ் சுபேதார் & சன்ஸ்
66 அங்கப்ப நாயக்கன் தெரு சென்னை 1

நாகப்பட்டினத்திலிருந்து

1968 பிப்ரவரி 9 — 1968 மார்ச் 4

நாகப்பட்டினத்திலிருந்து பினங்கு மற்றும் சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தங்களது பிரயாண டிக்கட்டுகளை கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிடையாகப் பெற்றுக்கொள்ளலாம்

மெஸர்ஸ் மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

பினங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும் :

பின்னி & கம்பெனி லிமிடெட்	**மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.**
7. அரமனைக்காரத் தெரு, சென்னை—1	முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜண்டுகள் : பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்



அல்டாப் அப்பாசாமி

குறும்பன்

''மாமி! மாமி!''

''.........''

''என்ன அப்படிப் பார்க்கிறேள்? என்னைத் தெரியவில்லையா ? நான்தான் மாமி அப்பா சாமி. அகரமாங்குடி அம்புஜத்தின் பிள்ளை. இன்னுமா புரியவில்லே ? இந்த ஊர்க் கோடி யாத்துக் குப்பம்மா பேத்தி அம்புஜத்தைத் தெரி .து? அட, இதென்ன மாமி! இன்னும் உங்களுக்கு நினைவு வரவில்லையே! குப்பம்மா பொண்ணு மதுரம், மதுரத்தின் பொண்ணு அம்புஜம். அம்புஜத்தின் பிள்ளை நான். இதைக் காட்டிலும் தெளிவாகப் புரிய வைக்க எனக்கு வழி தோணலியே ! — மாமா எங்கே? மாமா இருந்தால் அவர் கட்டாயம் உங்களுக்குப் புரியும்படி சொல்லுவார்.''

''நன்னாச் சொன்னியே, போயும் போயும் மாமாவுக்கா என்னைக் காட்டிலும் ஞாபக சக்தி அதிகம்? குப்பம்மாவைத் தெரியாதா, அவள் பெண் மதுரத்தைத் தெரியாதா? இல்லே, அவள் பெண் அம்புஜத்தைத் தான் தெரியாதா? உன்னே நான் சின்ன வயசுலே பார்த்தது. இப்போ நன்னா வளர்ந்துட்டே, ஆள் அடையாளமே தெரியாமே! உன்னே நான் ஒக்கலில் தூக்கி வைச்சிண்டிருக்கேண்டா! என்ன படிச்சிருக்கே? என்ன பண்ணிண்டிருக்கே ?'' புரியாவிட்டாலும், புரிந்து விட்டதாகப் பாவனை செய்யும்படி வைத்துவிட்டது அவன் பேச்சு அவளை.

''படிச்சிருக்கேன், எஸ்.எஸ்.எல்.ஸி.வரைக்கும். மார்க்கும் அப்படி ஒண்ணும் குறைச்சல் இல்லே. ஸ்கூலிலே எப்போதும் அப்பாசாமிதான் மாமி முதல். கணக்கிலே நூத்துக்கு நூற்றிருபதுகூட வாங்கி யிருக்கான்.''

''நூத்துக்கு நூத்திருபது எந்த முட்டாளாவது கொடுப்பானா?''

''ஏன் மாட்டான்? ஏன் மாட்டான்னேன்? பத்துக் கணக்குக்கு எட்டுக் கணக்குப் போட்டால் போதும்னு சொல்லியிருந்தான். அப்பாசாமி பத்தையும் போட்டான். பத்தும் ரைட்டு. அப்படி இருக்கிறப்போ...''

''இத்தனை மார்க் வாங்கியிருக்கறச்சே, இன்ஜினீரிங் காலேஜில் சேரக் கூடாதோ?''

''ஓ, அப்பவே சேர்ந்துட்டானே!''

''அப்படியா! உட்காருடா, காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்'' என்றாள் மாமி. 'அவர் வந்ததும் ஜாதகம் வாங்கச் சொல்லணும்' என்று எண்ணிக் கொண்டே டிபன் காப்பி கொடுத்து உபசரித்தாள்.

''காலேஜிலே இது எத்தனாவது வருஷம் உனக்கு?''

''எத்தனாவது வருஷமா ? எனக்கா ? நான் எங்கே மாமி காலேஜுக்குப் போனேன் ? என் ஃபிரண்டு ஒருத்தன் ; எம் பேரேதான் அவனுக்கும். அவனைப் பத்தின்னா பேசிண்டிருந்தேன்!''

''சரியான ஆள்தானப்பா நீ! இப்போ என்னதான் பண்ணிண்டிருக்கே, வேலே பார்க்கறயா?''

''அதுதான் ஆயுசு பூரா இருக்கே, வேலே பார்க்கிறதுக்கு! அப்பா தட்டெழுத்துக் கத்துக்கோ, கொட்டெழுத்து கத்துக்கோன்னு துளைச்செடுத்தார். தலையெழுத்து நன்னாயிருந்தால் இந்தக் கன்றாவி எழுத்தெல்லாம் எதுக்கு மாமி? இப்பவும் எனக்கு ஒண்ணும் குறைஞ்சு போயிடலே. ஏதோ என் பெயரைச் சொல்லிக் கொண்டு பத்துப் பதினைந்து பேர் சாப்பிட்டிண்டிருக்கா!''

''மகாராஜனா இரு. இன்னும் அரை டம்ளர் காப்பி சாப்பிடறயா? போகறச்சே ஞாபகமா அட்ரஸ் கொடுத்துட்டுப் போ. மாமா வந்தா ஒழியறப்போ உன்னே வந்து பார்க்கச் சொல்றேன்.''

இரண்டு நாட்களுக்குப் பிறகு மாமியின் நச்சரிப்புத் தாங்காமல் மாமா புறப்பட்டார், அப்பாசாமியின் ஜாதகத்தைப் பெற்று வர. 'தினம் பத்துப் பதினைஞ்சு பேர் சாப்பிடறான்னா அவன் எவ்வளவு உயர்ந்த நிலையிலே இருக்கணும்? நமக்குச் சரிப்பட்டு வருமா அவ்வளவு பெரிய இடம்?' என்று தயங்கினார். ஆனால் விவரம் அறிந்ததும் அவர் மூர்ச்சை அடையவில்லை; காரணம், அவன் பார்த்து வந்தது நடாது நாராயணன் ஹோட்டலில் சர்வர் வேலைதான் !

படித்த பெண்

க. பஞ்சாபகேசன்

இரட்டை மாடிக் கதிரேசம்பிள்ளையின் புதல்வி நித்யா பட்டணத்தில் பெரிய படிப்புப் படித்துவிட்டுப் பரீட்சையும் எழுதி விட்டு வெகு காலத்துக்குப் பிறகு கிராமத்துக்கு வருகிறாள்.

நித்யாவின் இந்த வரவைப் பற்றிக் கேள்விப்பட்டதும் கிராமம் முழுதும் ஒரே பேச்சு. நன்றாகக் கல்வி கற்றுவிட்டல்லவா நித்யா கிராமம் வருகிறாள் ?

''நித்யா நாளைக் காலையில் பட்டணத்திலிருந்து வருகிறாளாமே? நமக்கு இந்தக் கிணற்றடியில் பாத்திரங்களை யெல்லாம் கரைக்கத் தெரியும். நித்யாவைப் பாருங்கள்! பிடிவாதம் பிடித்துப் படித்தாள்; பட்டணத்தில் கல்லூரியிலும் சேர்ந்து.....!''

''இரட்டை மாடி வீட்டுக் குடும்பத்திலேயே நித்யா ஒருத்திதானே படித்த பெண் ?''

கிணற்றங்கரையில் மகளிரின் பேச்சு சற்றே நின்றது. ஏனென்றால், அப்போது கிணற்றை அடுத்த வீதியில் கதிரேசம்பிள்ளையின் தர்மபத்தினி கோகிலாம்பாள் போய்க் கொண்டிருந்தாள்.

சொத்தும் அந்தஸ்துமாயிருக்கும் பெண்மணி. அந்தக் கிராமத்திலேயே இரட்டை மாடி வீடு அவர்களுடையதுதான். அநாவசியமான அரட்டைகளில் இறங்காமல், ஊர் வட்டாரத்திலிருந்து சற்று ஒதுங்கியே இருப்பவள் கோகிலாம்பாள். இது சிலருக்குப் பிடிப்பதில்லை. 'பரம்பரையாக வந்து கொண்டிருக்கும் சொத்துத்தானே ? இந்தக் கோகிலாம்பாளுக்கு இருக்கும் ராங்கியைத்தான் பாருங்களேன்!'' என்பார்கள் அவர்கள்.

கோகிலாம்பாள் தனிமையை விரும்பியது அவளுடைய சுபாவமே தவிர, வேறெதுவுமல்ல. ஆயினும், இருப்பதை இல்லாததாகவும், இல்லாததை இருப்பதாகவும் கற்பனை செய்து கொண்டு அவஸ்தைப்படும் உலகம் அவ்வப்போது இந்தப் புனிதவதியைப் பற்றியும் ஏதாவது பேசிக்கொண்டுதான் இருந்தது.

பேசாமலேயே சென்று கொண்டிருந்தவளை நோக்கி ஒரு பெண்மணி, ''இந்தாங்க, கோகிலம்மா!'' என்று கூப்பிட்டாள்.

கோகிலாம்பாள் அவர்களை நெருங்கி வந்தாள்.

''நாளைக்கு நித்யா வரப் போகிறாளாமே?''

''ஆமாம்... உதயம் வண்டிக்கு அவள் வருகிறாள்.''

''ஒரு லீவுக்கும் வராமல் இந்த லீவுக்கு நித்யா வருகிறாளே. பட்டணம் புளித்துப் போய் விட்டதா, கோகிலம்மா ?'' — இப்படிக் கேட்ட பெண்மணி ஓர் இளவயதுப் பெண்தான். நித்யாவோடு கிராமத்துப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்த செண்பகம்தான். எப்போதுமே வெடுக்காகப் பேசும் குணமுண்டு செண்பகத்துக்கு. ஏதோ எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும் என்ற அளவில், கிராமத்துப் பள்ளிக்கூடத்தின் உச்சிப் படியைத் தொட்டதும் தனது படிப்பை நிறுத்திக் கொண்டு விட்டாள் செண்பகம். ஆனால் தொடர்ந்து படித்த நித்யா, பக்கத்து டவுனில் உயர்தரப்பள்ளியில் சேர்ந்து வில்வண்டியில் படிக்கப் போன போது செண்பகத்தையும் தன்னுடன் வந்து படிக்கச் சொல்லி எத்தனையோ வற்புறுத்தியும்கூட வராளாயிருந்து விட்டாள்.

கிராமத்தில் இந்த இரண்டு பெண்களுக்குமிடையில் நல்ல சிநேகிதம் இருந்தது அந்தக் காலத்தில்.

ஆனால் இப்போது காலம் நடந்த நடையில் எத்தனையோ மாறி விட்டது. இந்த எட்டு வருஷ காலத்தில், செண்பகத்துக்குத் திருமணமாகி இரண்டு குழந்தைகளும் இருக்கின்றன இப்போது. அவளுடைய கணவன் வயல்வெளிக்கும் வீட்டுக்குமாய்ப் பம்பரமாய்ச் சுற்றிக் கொண்டிருக்கிறான், குடும்ப பாரத்தைத் தாங்க.



செண்பகத்தின் வயதுக் கொத்த நித்யாவோ இருபது வயது இளங்கன்னியாகவே இருந்தாள். பி. ஏ. இறுதிப் பரீட்சை எழுதி விட்டாள். இரட்டைமாடிக் கதிரேசம் பிள்ளைக்குப் பட்டணத்தில் சொந்தமாயிருந்த அரண்மனை போன்ற வீட்டில் தன் அத்தையுடன் வசித்து வந்த நித்யா இப்போது நாலைந்து வருஷங்களுக்குப் பிறகு கிராமம் வருகிறாள்.

கிணற்றங்கரையில் கோகிலாம்பாளை நோக்கிக் கேள்விகள் மேலும் முளைத்தன. கூடிய மட்டும் பதில் சொல்லிக் கொண்டு வந்தாள் கோகிலாம்பாள்.

''இனி மேலும் படிக்கப் போகிறாளா, நித்யா ?''

''படித்தவள் அவள். குழந்தை வந்த பிறகுதான் அவளுடைய அபிப்பிராயம் தெரிந்து கொள்ள முடியும்.''

''ஏன் கோகிலம்மா; கல்யாணம்—கார்த்தி என்று செய்து எங்களுக்கு விருந்து போடப் போகிறீர்களா இல்லையா ?'' — ஒரு பெண்மணி இப்படிக் கேட்கவும் சூழவிருந்த மற்றப் பெண்மணிகள் 'கொல்'லென்று பலமாகச் சிரித்தார்கள்.

கோகிலாம்பாள் இதற்குச் சாமர்த்தியமாகப் பதில் சொன்னாள்: ''குழந்தை கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்றால் அதற்கு நானா குறுக்கே நிற்கப் போகிறேன்? அதுவும் அவளுடைய அபிப்பிராயத்தைப் பொறுத்ததுதான்!''

இதற்கு உடனடியாகச் செண்பகத்தின் மறுமொழி கிடைத்தது, அவளது கேலிச் சிரிப்பினூடே: ''அந்தக் குழந்தைக்கே ஒரு குழந்தை இருக்கக்கூடிய வயசாயிற்றே !'' — மறுபடியும் கிணற்றங்கரையைக் கிடுகிடுக்க வைத்தன சிரிப்பொலிகள்.

ஆனால் கோகிலாம்பாளின் குரல் அடுத்துக் கேட்டது: ''சீக்கிரமாய்க் கல்யாணமாகி ஒன்றுக்கு இரண்டாய்க் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு நீ திண்டாடுவது போதாதா செண்பகம்? உன் சிநேகிதியையுமா திண்டாடச் சொல்கிறாய்?''

கோகிலாம்பாள் 'மேலே நடந்து விட்டாள். செண்பகம் உதட்டைக் கடித்துக் கொண்டாள். ''இரட்டை மாடி வீட்டம்மாளுக்குப் பணம் படைத்த திமிரோடு, தன் பெண் படித்துவிட்டாள் என்ற கர்வம் வேறு! பார்த்து விடுகிறேனே, அவள் என்னதான் படித்துக் கிழித்து விட்டு வருகிறாள் என்று!'' இப்படி வெளிப்படையாகவே சொல்லிக் கொண்டாள் செண்பகம்.



அவளுடைய புருஷன் சிதம்பரம் கையில் ஒரு வயதுக் குழந்தையை ஏந்திக்கொண்டு கிணற்றங்கரையை நோக்கி வருவதைப் பார்த்ததும்தான் செண்பகம் இருப்பிடத்தை விட்டே எழுந்தாள்.

கதிரேசன் பிள்ளை வீட்டுக் கூடத்தின் நட்ட நடுவில் தொங்க விடப்பட்டிருந்த ஊஞ்சலில் அமர்ந்து, வெற்றிலைச் செல்லத்தை மடியில் வைத்துக் கொண்டு, அழகாக வெற்றிலையின் காம்புகளை நீக்கிக் கொண்டே ஒவ்வொரு வெற்றிலையாகப் போட்டுக் கொண்டிருந்தார்.

நல்ல ஆஜானுபாகு. சாந்தமான, விசாலமான முகம், கட்டான குடுமி; அழகான மீசை. காதில் குண்டு குண்டாகக் கடுக்கன்கள்; ஆசாரசீலமாக நெற்றியில் விபூதி. சாப்பிட்டு விட்டு அப்போதுதான் வந்து உட்கார்ந்திருக்கிறார் பிள்ளை.

அவர் எதிரே, கீழே வர்ணச் சிமிட்டித் தரையில் வந்து அமர்ந்துகொண்டாள் கோகிலாம்பாள்.

''என்ன விஷயம் கோகிலம்?''

கோகிலாம்பாள் திட்டவட்டமாகச் சொல்ல ஆரம்பித்தாள்.

''நம்ம நித்யாவின் கல்யாணத்தைப் பற்றி இந்த முறை திட்ட வட்டமான ஒரு முடிவு பண்ணி விடுங்க. ஊர் நாவு விருந்து சாப்பிடத் துடிக்குது போலிருக்கிறது. பசி ஏப்பத்தில் என்னவெல்லாமோ பிதற்றித் தள்ளறாங்க.''

''கோகிலம்! ஒரு வேடிக்கை பார்த்தியா? எந்த ஊரும் சொந்த ஊரைப்போலக் கிடையாதுன்னு சொல்லுவாங்க. இப்போது சொந்த ஊரைக் கண்டால்தான் ஒதுங்கிப் போக வேண்டியிருக்கிறது...'' என்றார் கதிரேசம் சிரித்துக் கொண்டே.

''உங்க புதுமை வேதாந்தம் ஒரு பக்கம் இருக்கட்டுமுங்க. இந்த முறை நித்யாவை மேற்படிப்பு அது இது என்று மறுபடியும் பட்டணத்துக்கு அனுப்பறது உசிதமாக இல்லை. அவளுடைய கல்யாணத்தை முடிக்கப் பாருங்க.''

''கல்யாணத்தை முடிக்க வேண்டியதுதான். ஆனால் தகுதியான வரன் கிடைக்க வேண்டாமா? இவளுக்கு வயதாகிவிட்டது ஒரு பெரிய பிரச்னை இல்லை கோகிலம்! இவள் படித்திருக்கும் பி. ஏ. படிப்புக்கு ஒத்துப் போகிற மாதிரி மாப்பிள்ளை அமைய வேண்டுமே! உன் தம்பி மகனைக் கட்டலாம் என்றால், அவன் வயல் வரப்பைக்கூடத் தாண்டி அந்தண்டை போய் நாலு எழுத்துப் படிக்காத ஓர் அசல் விவசாயி ஆயிற்றே. அவன் ஏதாவது விவசாயப் பட்டம் பெற்றவனாயிருந்தாலும் பரவாயில்லை. பிறந்தது முதல் மண் வாசனையையே நுகர்ந்து கொண்டிருக்கும் ஓர் இலட்சிய விவசாயி அல்லவா அவன்!''

பிள்ளையின் பேச்சிலிருந்த நடைமுறை நகைச்சுவை கோகிலாம்பாளின் சிந்தனையைக் கிளறவில்லை. ஆனால் கல்வி சம்பந்தப்பட்ட இந்த முக்கியமான பிரச்னையை மட்டும் கிரகித்துக் கொண்டு அவள் கேட்டாள்:

''படித்த பெண்ணுக்குப் படித்த பிள்ளைதான் வேண்டுமென்று சட்டமா? அழகு, இளமை, சொத்து, நல்ல குணம் இத்தனையும் இருந்து, ஆனால் படிக்காத குற்றத்துக்காக ஒரு தங்கமான பிள்ளை ஓர் அசட்டு அசமந்தத்தைத்தான் கட்டிக் கொள்ள வேண்டுமா?''

கோகிலாம்பாள் இன்று இவ்வளவு பேசுகிறாளே என்று கதிரேசன் பிள்ளை ஆச்சரியத்துடன் அவளைச் சில கணங்கள் பார்த்தார். காலமெல்லாம் தானும் படிக்காமல், தனது தர்ம பத்தினியும் படிக்காமல் — ஆனால் வாழ்க்கையாகிய பள்ளிக்கூடத்தில்

எத்தனை மகத்தான பாடங்களைக் கற்றிருக்கிறோம் என்பதை நினைத்துப் பார்த்தபோது பிள்ளையவர்களுக்குச் சற்றுப் பெருமிதமாகவே இருந்தது.

நித்யாவின் வருகையால் வீடு 'கலகல' வென்று நிறைந்தது. கோகிலாம்பாளுக்கும் கதிரேசன் பிள்ளைக்கும் பெரு மகிழ்ச்சி.

நித்யாவின் அழகு இப்போது பன்மடங்கு பெருகியிருந்தது. முன்னைக்கு இப்போது சற்று உயரம்; அழகான பருமனும்கூட. கேசம் 'கருகரு'வென்று நீண்டு வளர்ந்திருந்தது. முத்துப் போன்ற முகத்தில் லிவப்புச் சாந்துப் பொட்டாளுலும், முக வசீகரத்தை அது எத்துனை அதிகப்படுத்தியது! டெரினின் சேலையாளுலும் — நீண்ட கைச் சோளியும், கையில் மணிக் கடிகாரமுமாக— அடக்கமான நாகரிகப் பதுமை போலிருந்தாள் நித்யா.

என்ன ஆச்சரியம்! கோகிலாம்பாளுக்குக் கூடத் தன் பெண்ணிடம் முதலில் சரளமாகப் பேசத் தயக்கமாக இருந்தது. படித்த பெண்ணுடன் எப்படிப் பேசுவது?

ஆனால் தாயும் மகளும் சிறிது நேரத்திலேயே இழைய ஆரம்பித்து விட்டார்கள் நித்யா தன் படிப்பைப் பற்றியும், கல்லூரியைப் பற்றியும் ஆராய்ச்சித் துறையில் தான் நாட்டம் கொண்டுள்ள மேற்படிப்பைப் பற்றியும், வந்ததும் வராததுமாக, மூழு மூச்சுடன் சொல்லிக் கொண்டிருந்தாள். பாதி புரிந்தும், புரியாததுமாகக் கோகிலாம்பாள் அத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

ஆனால் ஒரு விஷயம் மட்டும் அந்தத் தாயாருக்கு மிகத் தெளிவாகப் புரிந்தது. தன் பெண் நித்யா மேலும் தொடர்ந்து படிக்கத் தீர்மானித்துள்ள விஷயம்தான் அது. அது விஞ்ஞான சம்பந்தமான ஆராய்ச்சிப் படிப்பாம்! வெளிநாடுகளில் சென்று படிக்கக் கூட வசதி தருமாம் அந்த ஆராய்ச்சி!

வந்து இரண்டு நாட்களாகியும் நித்யா எங்கும் வெளியே கிளம்பவில்லை. அவளுக்குத் தெரிந்த கிராமம்தான். அநேகமாக எல்லோருமே தெரிந்தவர்கள்தான். தெரு முனையிலிருந்த பள்ளிக்கூடமும், ஓரத்திலிருந்த நல்ல தண்ணீருள்ள கிணறும் நித்யாவின் நினைவுகளைக் கிளறாமல் இல்லை. ஆனால் இவை யாவற்றுக்கும் மேலே இப்போது அவள் மனம் அறிவுத் தாகத்தின் வேகம் உந்த அல்லவா மேலே மேலே பறந்துகொண்டிருந்தது?

கோகிலாம்பாள்கூடச் சொன்னாள்:

''உனக்குக் கர்வம் என்று நினைத்துக் கொள்ளப் போகிறார்கள், நித்யா! எல்லாரும் தெரிந்த முகம்தானே? நாலு பேரை விசாரித்துவிட்டு வந்துவிடு. முக்கியமாக உன் பழைய சிநேகிதி செண்பகம் இருக்கிறாளே, அவளை நிச்சயமாகச் சென்று பார்த்து இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு வந்து விடு. செண்பகத்துக்கு இப்போது இரண்டு குழந்தைகள், நித்யா!''

தாயார் அங்கிருந்து சென்றவுடன் நித்யாவின் மனம் சிந்தனையில் ஈடுபட்டது.

அடுத்தும் இரண்டு நாட்கள் ஓடிவிட்டன. நித்யா வெளியில் கிளம்பவில்லை. ஆனால் ஊரில் பெரிய பண்ணை வீட்டுப் பெண் அல்லவா? அவளைச் சிலபேர்கள் வந்து பார்த்துச் சுகம் விசாரித்து விட்டுப் போனார்கள். ஆனால் செண்பகம் வரவில்லை.

செண்பகத்தின் சுபாவத்தில் இருக்கும் பிடிவாதம் நித்யாவுக்குத் தெரியும். என்ன தான் கல்வி கற்காதவளாக இருந்தாலும் செண்பகம் தன் பிடிவாதத்தை விட்டுக் கொடுக்க மாட்டாள் என்பதை நித்யா தெரிந்து கொண்டாள்.

ஆதலால் அன்று மாலை நித்யாவே புறப்பட்டாள், செண்பகத்தின் இல்லம் நோக்கி. சொகுசான நாகரிகமான நடை; அறிவுச் சுடர் வீசும் கண்களைச் சற்றே தாழ்த்தித் தான் நடந்து கொண்டிருந்தாள் நித்யா. கிணற்றங்கரையைத் தாண்ட வேண்டியிருந்தது. வழக்கம்போல் அங்கே சில பெண்மணிகள் இருந்தனர்.

அத்தனை பேரும் நித்யா அன்னத்தைப் போல் நடந்து வருவதைப் பார்த்தும், தத்தம் அலுவல்களைச் சற்றே மறந்து அவளையே உற்றுப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

நித்யா மேலே முன்னேறினாள். செண்பகத்தின் இல்லம் நோக்கி; இதோ அருமைத் தோழியின் இல்லமும் வந்து விட்டது..

செண்பகத்தின் வீட்டுக்குள்ளிருந்து ஏக இரைச்சல் கேட்டுக் கொண்டிருந்தது. செண்பகத்தின் இயல்பான, சன்னமான குரல், இல்லறப் போராட்டில் கத்திக் கத்திக் கரகரத்துப் போயிருந்தது. ஆயினும் செண்பகத்தின் பள்ளி நாட்களின் இனிமைக் குரல் அவளுடைய சிறு மகளின் தொண்டையில் புகுந்து கொண்டு உச்ச ஸ்தாயியில் அந்தப் பெண் கத்திக் கொண்டிருந்தாள். இவ்விரண்டு குரல்களையும் விடாமல் அதட்டியபடி விசாரித்துக் கொண்டிருந்தது கடுமையானதோர் ஆண் குரல். — செண்பகத்தின் கணவன் சிதம்பரம்தான்.

போதாத குறைக்கு இந்த ரகளையில் வீட்டுக் கூடத்து நடுவில் தொங்கிக்கொண்டிருந்த தூளியில் தூங்கிக் கொண்டிருந்த ஒரு வயதுப் பாலகன் வேறு சத்தம் கேட்டு விழித்துக் கொண்டு சிணுங்க ஆரம்பித்து விட்டிருந்தான்.

இந்தச் சமயத்தில்தான் செண்பகத்தின் வீட்டு வாசலுக்குப் போய்ச் சேர்ந்தாள் நித்யா. வாயிலில் தயங்கி நின்றாள்.

உள்ளே நடந்து கொண்டிருந்த ரகளைக்குக் காரணம் என்ன?

ஆச்சரியம்! எழுத்தறிவின் ஆர்வத்தைப் பற்றிய பிரச்னைதான் அது!

செண்பகத்தின் பெண் கோமதி என்ற கோமுக் குட்டியின் முதல் வகுப்புப் பாடப் புத்தகம் சம்பந்தமான பிரச்னைதான் அங்கு விசுவரூபம் எடுத்திருந்தது என்பதை ஊகித்துக்கொண்டாள் நித்யா.

உள்ளே குரல்கள் தொடர்ந்தன:

''இந்தச் சின்னக் குட்டி படிச்சுக் கிழிச்சு விடப் போகிறது! இதற்காகப் புத்தகம்

வாங்குகிறேன் என்று டவுனுக்கு ஐந்து மைல் தூரம் போக வேண்டுமா நீங்கள்?'' செண்பகம் சீறினாள்.

''ஏன், போனால் என்னவாம்? குழந்தை படிக்கணும்னு ஆசையாய்க் கேட்குது...''—சிதம்பரமும் இரைந்துதான் பதில் சொன்னான்.

''ஆகாகா! குழந்தை படிக்கப் போகுதாமே, படிக்க! புத்தகம் வாங்கிக்கிட்டு வருகிற சாக்கிலே நீங்க டவுனுக்குப் போகிற ரகசியம் தெரியாதுன்னு நினைச்சுக்கிட்டீங்க? பகல் ஆட்டம் சினிமாவிலே பார்த்துட்டு வருவீங்க!''

''பார்த்தால் என்ன குறைஞ்சு போயிடுமாம்? குழந்தைக்குப் புஸ்தகம் வாங்கிக்கிட்டு வருகிறேன்; வீட்டுக்குச் சாமான்கள் வாங்கிக்கிட்டு வருகிறேன்; அதோடு என் மனச்சாந்திக்காக ஒரு படமும் பார்த்திட்டு வரக் கூடாதா?'' நியாயமான உரிமையை நியாயமான வார்த்தைகளில்தான் சிதம்பரம், கேட்டான். ஆனால் செண்பகத்துக்குப் பொறுக்கவில்லை.

''ஒரு முப்பத்தஞ்சு பைசாப் புத்தகம் வாங்குவதற்காக இப்போ அஞ்சு ரூபா செலவழியப் போவுது. அடியம்மா, சரகவதிச் செல்வமே! நீ படிச்சுக் கிழிக்க வேண்டாம்... ஒண்ணாங் கிளாஸ் புத்தகம் கிடைக்காட்டி உயிரே போய்விடாது! போ, போய் மூலையில் குந்தி ஒப்பாரி வை!...''

கோமுக்குட்டியின் அலறல் செண்பகத்தின் பொறுமையின் எல்லையைத் தொட்டு அவளுடைய கோபத்தை உலுக்கவே—அவள் ஆத்திரத்துடன் அந்தக் குழந்தையின் முதுகில் இரண்டு சாத்துச் சாத்தி, ''பெரிய பண்ணை நித்யாவைப் போல் படிச்சு, பெரிய பெரிய ஜம்பமெல்லாம் உனக்கு வரணுமாடி? அடம் பிடிக்கிறியா, கழுதை! வெளியே போ!'' என்று தரதரவென்று கோமுக்குட்டியை, சின்னப் பாவாடை சிமிட்டித் தரையில் புரள, கையோடு பிடித்து இழுத்து வந்தாள் வாசலுக்கு.

வாசலில்!—

நித்யா கடை விழியில் முத்துப் போல் துளித்திருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டே நின்றிருந்தாள். இரு தோழிகளும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நின்றார்கள்! செண்பகத்தின் நாவு உள்ளன்னத்தில் சுருண்டு கொண்டு தவித்தது! அடாடா, அவள்தான் என்ன பேசிவிட்டாள்!

ஆனால் நித்யா மேலும் அங்கே நிற்காமல் வேகமாகத் தன் வீட்டுக்குத் திரும்பிவிட்டாள். அவள் கற்ற நிறை கல்வியின் அழகு, அவளையும் தன்னடக்கம் மீறிப் பேசவிடாத படி தடுத்து, அடக்கத்தை ஈந்து, தன் வீடு நோக்கிச் செல்ல ஆணையிட்டு விட்டது.

ஃ ஃ ஃ

செண்பகம், தன் சின்னப் பெண் கோமுக்குட்டி தன் கையில் ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு வருவதைப் பார்த்ததும், ''இது ஏது உனக்கு?'' என்று கேட்டாள்.

''பெரிய பண்ணை வீட்டிலே வந்திருக்காங்களே, அந்தச் சின்னம்மா, ஆள்கிட்டே கொடுத்தனுப்பிச்சாங்க...இதே புத்தகம்தாம்மா... எல்லாரும் வாங்கிட்டாங்க... என்னைத் தவிர!''

நித்யா, உடனடியாக டவுனுக்கு ஆள் அனுப்பிப் புத்தகத்தை வரவழைத்துக் கொடுத்தனுப்பி யிருக்கிறாள். அந்தக் குழந்தை படிக்க விரும்பினாள்! அந்தப் பிஞ்சு உள்ளத்தின் ஆர்வத்துக்கு அணை போட யாருக்குத்தான் உரிமை இருக்க முடியும்?..'

புத்தகத்திலிருந்து ஒரு கடிதம் உருண்டு விழுந்தது. அன்னையின் கையில் அதைக் கொடுத்தாள் கோமுக்குட்டி. நித்யா தான் எழுதியிருந்தாள், இரத்தினச் சுருக்கமாக:

''அன்புள்ள செண்பகம்,

உன் மகளுக்கு நான் புத்தகம் வாங்கிக் கொடுக்க வேண்டுமா என்று கோபிக்காதே. கல்விச் செல்வத்தை யாரும் — யாருக்கும் — அளிக்க உரிமை உண்டு. உன் உணர்ச்சியால் தவறு நேர வேண்டாம். அவள் படிக்க விரும்பும் எண்ணத்துக்கு அணை போட உனக்கு உரிமை இல்லை. அந்த உரிமை யாருக்கும் கிடையாது.

உன் தோழி
நித்யா''

கடிதம் கையிலிருந்து நழுவ, செண்பகம் தன் தோழியைப் பார்த்து வரப் புறப்பட்டாள், பெரிய பண்ணை இல்லம் நோக்கி.

சுண்டெலி சுத்தமானது!

பிராணிகளிலே சுண்டெலிதான் தன்னைச் சுத்தமாக வைத்துக் கொள்ளக் கூடியதாம்! நிமிடத்துக்கு நூறு முறை தன் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டும், கைகளால் சொரிந்து கொண்டும் தன் உடம்பைச் சுத்தப்படுத்திக் கொள்கிறது என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இப்படி இதற்காக இது செலவிடும் நேரம் தன் ஆயுளில் பாதி நேரம்!

ஆதாரம்: 'டிட்பிட்ஸ்' நகவல்: ச. ஸ்ரீதரன்



வட்ட மேஜை

★ தித்தித்தது தெவிட்டவில்லை !

★ கமான், 'சோ' கமான் !

★ வீணையைத் தொடும் பாக்கியம் !

இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியாகும் எல்லா நாவல்களையும் ஆழ்ந்து படித்து வருகிறேன். கல்கியின் அலைஓசைக்குப் பிறகு தமிழ் நாட்டில் வெளிவந்த ஒரு தரம்வாய்ந்த நாவல் கல்லுக்குள் ஈரம்தான்.

திருச்சி — எஸ். வீரபாகு

ஃ ஃ ஃ

சாதம் படைக்கவும் செய்திடுவோம்–தெய்வச் சாதி படைக்கவும் செய்திடுவோம்

என்றாரே பாரதி, அதற்கு விளக்கமாகிவிட்டான் திரிவேணி. வன்முறையால் எதையும் சாதித்துவிட முடியும் என்ற உணர்வுள்ள இன்றையச் சூழலில், தன்னை வருத்திக் கொண்டே ஞாலத்தையும் வெல்ல முடியும் என்ற நல்லுணர்வையும் விடுதலையின் பயனையும் 'கல்லுக்குள் ஈரம்' என்ற வரலாற்றுக் கதையின் மூலம் உணர்த்தியுள்ளார் நாவல் ஆசிரியர்.

எரட்டம்பாளையம் — ந. இராமச்சந்திரன்

ஃ ஃ ஃ

சொல்லுக்குள் அடங்காத உணர்ச்சிப் படைப்பு. வரலாற்றுத் தேனோடு, கற்பனைப் பால் சேர்ந்த நயமான தேன்பாகு. தித்தித்தது; தெவிட்டவில்லை.

கம்பம் — பொன். காமராச பாண்டியன்

ஃ ஃ ஃ

இரண்டாவது பரிசு நாவலை ஒவ்வொரு வாரமும் படிக்கும்பொழுது அமரர் கல்கியின் அலை ஓசையின் ஞாபகம் வந்து கொண்டே இருந்தது. 'அலை ஓசை'யில் கல்கியின் மிகச் சிறந்த படைப்புக்களான கதாபாத்திரங்கள் எப்படி இன்றும் நம் மனக் கண் முன் நிற்பது போல் தோன்றுகிறதோ, அது போலவே ர. சு. நல்லபெருமாள் அவர்களின் இப் பரிசு நாவலும் எங்கள் நினைவில் ஓர் அழியாத இடம் தேடிக் கொண்டு விட்டது.

விருதுநகர் — எஸ். ராகவன்

ஃ ஃ ஃ

''கல்லுக்குள் ஈரம்'' இலக்கியத் தரம் வாய்ந்த ஒரு சோகக் காவியம் ஆகும். திரிவேணியின் முடிவுக்கும் விநாயகராவின் துப்பாக்கியைப் பழுது பார்த்ததின் மூலம் ஒருவிதத்தில் அண்ணலின் முடிவுக்கும், ரங்கமணி அவளையும் அறியாமலே காரணமாகிவிட்டான். விதியின் கொடிய கரங்களில் கொடூரமாகச் சிக்கிவிட்ட அவனையும், சோக காவியத்தில் மூழ்கி மன வேதனைப்படும் எங்களையும் தேற்றுவார் யார் ?

தெய்வேலி — 1 — வெ. அவயம்

ஃ ஃ ஃ

கதையைச் சொல்லிச் செல்லும் பாணி அருமையான நடை, பாத்திரப் படைப்பு—ஓ! இந்தப் புதினத்தைப் படிக்கும்பொழுது தான் எவ்வளவு புல்லரிப்பாக இருந்தது !

பவானி — ஜீவி

ஃ ஃ ஃ

சோபை மிக்க எழுத்தும், சோரான கதையும், சோர்வில்லா நடையும் கொண்ட 'சோ'வின் 'யாரோ இவர் யாரோ?' தொடரைப் படிக்கச் சோற்றைக் கூடக் கவனிக்காது இருந்த எனக்கு இந்த வாரத்துடன் கதை முடிவது குறித்து (கதையின் முடிவு மங்களமா யிருந்தாலும்) ஒரே சோகமாய் இருக்கிறது.

மதுரை—3 — டி. ஆர். நடராஜன்

ஃ ஃ ஃ

கமான் 'சோ' கமான் ! இன்னும் எழுதிக் கொண்டே இருங்கள் !

பம்பாய் — 71 — பி.வி. ரங்கராஜன்

ஃ ஃ ஃ

அச்சச்சோ ! சோவின் 'யாரோ இவர் யாரோ?' முடிந்து விட்டதா! நகைச்சுவையோடு கூடிய வாசகங்களையும் அடக்க முடியாத சிரிப்பை வரவழைக்கும் சித்திரங்களையும் கண்டுகளித்தோம்.

சென்னை — 33 — ஜெ. மணி

ஃ ஃ ஃ

கல்கி 24–12–67 இதழில் ஸ்ரீ காமகோடி பெரியவர்கள் வீணையைப் பற்றிக் கூறிய அருள்வாக்கு வெளியாகியிருக்கிறது. அதைப் படித்து இந்த ஜன்மத்தில் வீணையைத் தொடும் பாக்கியம் கிடைத்ததே என்று நானே ஆனந்தப்பட்டுக் கொண்டேன். ''இனி மேல் ஒவ்வொரு பிறவியிலும் வீணையின் தொடர்பு இருக்க வேண்டுமே, ஆண்டவனே !'' என்று ஜகத்குருவையே பிரார்த்தித்துக் கொண்டேன்.

திருவனந்தபுரம்—14 — கே.எஸ். நாராயணசாமி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

கேசம் உதிருகிறதே என்ற கவலையா?



இன்றே **ஸில்விக்ரின்** உபயோகிக்கத் தொடங்கி உங்கள் கேசத்திற்குப் புத்துயிர் அளியுங்கள்

இந்த அபாயக் குறிகளை அசட்டை செய்யாதீர்கள்.

கேச உதிர்வு. உச்சந்தலையிலே தினவு. நார்போல் வரண்ட உரோமம். உங்கள் கேசத்திற்கு உகந்த ஊட்டமில்லை என்பதற்கான அறிகுறிகள் இவை. ஊட்டமின்மைதான் இளமையிலேயே வழுக்கை விழக் காரணமாகிறது. அந்த ஊட்டமின்மைக்கு உரிய நிவாரணம் ஸில்விக்ரின்—கேசத்திற்குரிய இயற்கையான போஷாக்கு.

ஸில்விக்ரின் எப்படி வேலை செய்கிறது.

18 அமினோ-அமிலங்களை உங்கள் கேசத்திற்கு உணவாக அளிக்கிறது இயற்கை. இந்த அமினோ—அமிலங்கள் எல்லாமே அடர்வாக ஒன்று சேர்ந்த வடிவில் கிடைக்கச் செய்வது ஸில்விக்ரின் ஒன்றே. அது வேகமுடன் மயிர்க்கால்களை ஊடுருவி, ஊட்டமளித்து உரமேற்றி, பாங்கான கேச வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

உபயோக விதிமுறைகள்:

உங்கள் உச்சந்தலைமீது அன்றாடம் இரு நிமிட நேரம் ப்யூர் ஸில்விக்ரின் தேய்த்திடுங்கள். கேச நிலை அபிவிருத்தி அடையும் வரை உபயோகியுங்கள் ப்யூர் ஸில்விக்ரின். கேச நலம் மீண்டு விட்டதென்றால் அதன் பின் கேச நலனைக் காத்துக் கொள்ளத் துணை புரிவது ஸில்விக்ரின் ஹேர் டிரஸ்ஸிங்-ப்யூர் ஸில்விக்ரின் அடங்கிய, எண்ணெய் அடிப்படை கொண்ட லோஷன்.

ஆல் அபௌட். ஹேர் (All About Hair) என்ற புத்தகத்தின் இலவசப் பிரதியைப் பெற, எழுதுங்கள்: டிபார்ட்மெண்ட் K-1, தபால் பெட்டி 727, பம்பாய்-1.



ஸில்விக்ரின் தயாரிப்புகள்—ஆடவர், பெண்டிர் யாவரும் உபயோகிக்கத் தக்கவை.

ஸில்விக்ரின்


கேசத்திற்குரிய இயற்கையான போஷாக்கு.

LPE-Aiyars S. I TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி

SIMPSON & COMPANY LIMITED (Estd. 1840). MADRAS-2.
ADDISON & COMPANY LIMITED (Estd. 1873). MADRAS-2.
ADDISONS PAINTS & CHEMICALS LIMITED. MADRAS-11.
AMCO BATTERIES LIMITED. BANGALORE-26.
BIMETAL BEARINGS LIMITED. MADRAS-11.
GEORGE OAKES LIMITED. MADRAS-2.
GEORGE OAKES LIMITED (BOMBAY OPERATIONS) BOMBAY-1.
INDIA PISTONS LIMITED. MADRAS-11.
INDIAPISTONS-REPCO LIMITED. MADRAS-11.
REICHHOLD CHEMICALS INDIA LIMITED. MADRAS-51.
SHARDLOW INDIA LIMITED. SEMBIAM. MADRAS-11.
SRI RAMA VILAS SERVICE LIMITED. MADRAS-2.
SRI RAMA VILAS SERVICE LIMITED. KUMBAKONAM.
STANES MOTORS (SOUTH INDIA) LTD., COIMBATORE.
STANES TYRE & RUBBER PRODUCTS LTD., COIMBATORE.
TRACTORS AND FARM EQUIPMENT LIMITED. MADRAS-34.
L. M. VAN MOPPES DIAMOND TOOLS INDIA LIMITED. MADRAS-2
THE WHEEL & RIM CO OF INDIA LIMITED. MADRAS-11.



The Amalgamations Group is the largest Light Engineering Group in South India.

The Corporate strength of **Amalgamations** is due to a successful plan of acquiring or constructing a network of manufacturing units and progressively rationalising them to be complementary units of production in related fields of activity.

The Group Manufactures Automotive and Industrial Diesel Engines, Agricultural Tractors and farm implements, Castings, Stampings, forgings, Engineers Cutting Tools, spares and ancillaries such as pistons, piston rings, bimetal bearings, flywheel ring gear as original equipment or for use in the automobile and other industries, lead acid batteries for transport, telecommunication and industrial uses,
Builds coaches and bodies,
Fabricates mechanical light engineering specialities,
Formulates Synthetic resins, pigments, lacquers, paints, colours, varnishes, emulsions, enamels,
Operates transport and passenger services,
Produces tea and coffee,
Publishes an evening newspaper,

The Group's Industrial Estates cover over 150 acres and provide as many as 17 separate manufacturing units using latest equipment and modern techniques.

Its valuable experience of cost and quality considerations over many years in the domestic market enables the Group to export a wide range of first class products which have been accepted by discriminating buyers in over thirty countries in the world.

Non-Engineering Group

ASSOCIATED PRINTERS (MADRAS) PRIVATE LIMITED, MADRAS-2.

ASSOCIATED PUBLISHERS (MADRAS) PRIVATE LIMITED, 'THE MAIL,' MADRAS-2.

HIGGINBOTHAMS PRIVATE LIMITED, MADRAS-2.

SIMPSON & GENERAL FINANCE COMPANY LIMITED. MADRAS-2.

SPEED-A-WAY PRIVATE LIMITED. MADRAS-2.

T. STANES & COMPANY LIMITED. COIMBATORE.

THE UNITED COFFEE SUPPLY COMPANY LIMITED. COIMBATORE.

WALLACE CARTWRIGHT & CO. LIMITED. 55/56, St. James Street, LONDON S. W. 1.

Total Number of Employees: About 14,000
Bankers: The Central Bank of India Limited, Madras-2.
Advertising Consultants:
THE MADRAS ADVERTISING CO. PRIVATE LTD., MADRAS-2.

Amalgamations

PRIVATE LIMITED
202, Mount Road, Madras-2.
and subsidiary Companies
(Unit Companies of Simpson Group Industries)